# தமிழர் காசு இயல்







நடன. காசிநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

# தமிழர் காசு இயல்

நடன. காசிநாதன்
மேனாள் இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் ம.பொ. சிவஞானம் அறக்கட்டளைச் சொற்பொழிவு - 6
*(26, 27-10-94)*
**Dr. M.P. Sivagnanam Endowment Lecture - 6**

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Thamizhar Kasu Iyal |
| Author | : | Natana Kasinathan<br>Former Director of Archaeology<br>Government of Tamilnadu |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 461 |
| Language | : | Tamil |
| Edition | : | Second; First Edition-1995 |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xii + 194 |
| No. of Copies | : | 1000 |
| Price | : | Rs. 50/- (Rupees Fifty Only) |
| Printed by | : | Sri Mahendhra Graphics<br>20 & 22, Hussain Mulk Street<br>Royapettah, Chennai-600 014<br>Ph. 28524338 |
| Subject | : | A Research on Numismatics |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

வெள்ளிவிழா வெளியீடு.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

ஒரு நாட்டின் சமுதாய வரலாற்றில் காசு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. வாணிகத்தின் அடையாளமாகக் காசு பயன்படுத்தப்பட்டது. பண்டைக் காலங்களில் காசு என்று கூறப்படும் நாணயங்களைக் கொண்டு முதலில் வாணிகம் நடைபெறவில்லை. ஒரு பொருளுக்கு இன்னொரு பொருள் என்ற நிலையில்தான் பண்டமாற்று அடிப்படையில் வாணிகம் நடைபெற்றது. இப்பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டன. அதற்கு மாற்றாக வேறு ஒரு முறையை மக்கள் விரும்பினர். ஒரு பொருளைப் பெறுவதற்கு அந்த மதிப்பிற்கு ஈடாக எல்லோராலும் பயன்படுத்தத்தக்க ஒரு பொருள் அவர்களுக்குத் தேவைப்பட்டது.

ஒரு காலத்தில் அதாவது நாணய முறையின் தொடக்க காலத்தில் ஒரு பொருளின் மதிப்பிற்கு அளவுகோலாக, அதே மதிப்பிற்கு உகந்த பொருளாக ஆட்டைக் கருதினர். ஒரு பொருளுக்கு ஈடாக ஆடுகளை வைத்தே வாணிகம் செய்தனர். இம்முறையால் ஏற்பட்ட சிக்கலினால் பின் காசு முறை, நாணய முறை வழக்கத்திற்கு வந்தது. இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி போன்ற பல்வேறு உலோகங்களில் நாணயங்கள் வடிவமைக்கப்பெற்று ஒவ்வொரு காலத்திலும் புழக்கத்தில் விடப்பட்டன.

இத்தகைய நாணயங்கள், அந்தந்தக் காலச் சமுதாய அரசியல் சார்ந்த இன்றியமையாத நிகழ்வுகளை உருவமைக்கப்பட்ட நிலையில் பயன்பாட்டில் இருந்தன. இதனால் காசுகளைப் பற்றிய ஆய்வுகள் ஒரு நாட்டின் அரச வரலாறு, பண்பாட்டு வரலாறு, சமுதாய வரலாறு ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டும் அடையாளங்களாகத் திகழ்ந்தன. இந்நிலையில் காசுகளைப்பற்றிய ஆய்வுகள் உலக நாடுகளில் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. தொல்பொருள் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்படும் காசுகள் சில வரலாற்றுத் தெளிவுகளைத் தருவனவாகவும் அமைந்துவிடுகின்றன.

இந்நிலையில் *1994*இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் டாக்டர் ம.பொ.சி அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் *6*ஆம்

சொற்பொழிவாக நடைபெற்ற **தமிழர் காசு இயல்** என்ற சொற்பொழிவை நூலாக வெளியிட்டு இந்நிறுவனம் பெருமைசேர்த்தது. இந்நூல் தமிழர் காசு இயல் தொடர்பான அனைத்துக் கூறுகளையும் வரலாற்று அடிப்படையில் உரிய தரவுகளோடு மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

இந்நூலின் தேவை கருதி இதனை மறுபதிப்புச் செய்யவேண்டுமென்று எண்ணினோம். இதனை மறுபதிப்பாக வெளியிட இசைவளித்த இந்நிறுவனத்தின் பதிப்புக் குழுவினர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாறு மற்றும் தொல்லியல் துறை ஆய்வாளர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.**, அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.**, அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த சென்னை ஸ்ரீ மகேந்திரா கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

*28-07-2003* **இயக்குநர்**

சென்னை

# முதற்பதிப்பின் அணிந்துரை

தமிழ், தமிழர், தமிழகம் என வாழ்ந்த டாக்டர் ம.பொ.சி. அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவின் ஆறாவது வெளியீடு 'தமிழர் காசு இயல்'. 1983-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு. டாக்டர். ம.பொ.சி.யின் வாழ்க்கைக்கு இணங்க, அவரது அறக் கட்டளையும் தமிழகம் பற்றியதாக அமைய வேண்டும் என்ற எண்ணம் இந்த அறக்கட்டளையின் அடித்தளம்.

'தமிழர் காசு இயல்' என்ற இந்த அறக்கட்டளைச் சொற் பொழிவை நிகழ்த்தியவர் அறிஞர் பெருந்தகை நடன. காசிநாதன். தொல்பொருள் ஆய்வுத் துறையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அந்த ஈடுபாட்டின் வெளிப்பாடு அத்துறைச் சார்ந்த அவரது எண்ணற்ற நூல்கள், கட்டுரைகள், பதிப்பு களில் வெளிப்படுகின்றன. குறிப்பாக இவரது கல்லெழுத்துக் கலை, களப்பிரர், தொல்லியல் நோக்கில், Under Sea exploration off the shore of Pumpuhar, Art Panorama of Tamils, The Metropolis of Medieval Cholas, Collected papers (Studies in Tamil Culture) போன்ற நூல்கள் குறிப்பிடத் தக்கவை. மேலும் இவரது தொல்லியல் ஈடுபாடு, அழிந்து போன புகாரைத் தமிழ் உலகுக்கு மீட்டெடுத்து மீண்டும் அடையாளம் காட்டிய நிலையிலும் வெளிப்படும் ஒன்று.

காசுகள் தொடர்பாகப் பல நூல்கள் தமிழகத்தில் வெளி வந்துள்ளன. 'தமிழர் காசு இயல்' என்ற இந்நூல், காசு இயலின் தோற்றமும் வளர்ச்சியும் தொடங்கி, தமிழகத்தில் பல்வேறு காலகட்ட அரசியல் சூழலில் வெளியிடப்பட்ட காசுகள் பற்றிய ஆய்வாகத் தொடர்ந்து செல்கிறது. வரலாற்று ரீதியான இப்பார்வை, காசுகளின் தோற்றத்தை மட்டுமல்லாது, காசுகளின் மூலப்பொருட்கள், அவற்றின் பெயர்கள், அவை வெளிப்படுத்தும் தமிழகம், தமிழக மக்களின் வரலாறுகள்

ஆகியவற்றையும் உணர்ந்து கொள்ளத் துணையாகின்றது இத்தகைய மிகச் சிறந்த நூலை எழுதிய திருவாளர் நடன. காசிநாதன் அவர்கள் பாராட்டுக்குரியவர். இவரது இந்நூல் ஆய்வுலகிற்கு ஒரு புதிய வரவு என்பதில் ஐயமில்லை.

டாக்டர் ம.பொ.சி. அறக்கட்டளையை நிறுவிய அன்பர்கள் என்றும் நன்றிக்குரியோர்.

நிறுவனப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் அவர்களுக்கும், நிறுவனத்தின் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் அச்சிட்டு வழங்கும்படி நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்நூலைச் சிறந்த முறையில் அச்சுப் பதித்த தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தினருக்கும், துறை இயக்குநருக்கும் எங்கள் நன்றி.

அன்புடன்

**டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113

# என் கடமை

ஒரு நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கு மிக இன்றியமையாத சான்றுகளாக அமைவன தொல்பொருட்கள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள், காசுகள், வெளிநாட்டார் பயணக் குறிப்புகள் ஆகியவையாகும். மேற்குறிப்பிட்ட அனைத்துச் சான்றுகளுள்ளும் மிக முக்கிய சான்று காசுகளாகும் காசுகளைப் பண்டைய மக்கள் மிகப் பழங்காலம் தொட்டே பண்டங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். காசுகள் பழக்கத்திற்கு வருவதற்கு முன்பாகச் சில கனிகளையும், கிளிஞ்சல் போன்ற பொருட்களையும் பண்டங்கள் வாங்குவதற்கு இடைப் பொருட்களாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இப் பழக்கத்துக்கும் முன்பு ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருள் பெறும் பண்டமாற்று முறை நிலவிவந்திருக்கிறது. இதன் மூலம முதலில் பண்டமாற்று முறை-அதற்குப் பின் இடைப்பொருள் ஒன்றைக் கொண்டு பொருள் பெறும் முறை - அதன்பின் காசுகள் என்ற நிலை இருந்துள்ளது தெரிய வருகிறது. சங்க இலக்கியங்களில் காணப்பெறும் குறிப்புகளைக் கொண்டு பார்க்கையில், அவ்விலக்கியங்கள் எழுதப் பெற்ற காலத்தில் பண்டமாற்று முறை தான் பெருமளவில் வழக்கில் இருந்திருக்கிறது என்பதும்; இடைப்பொருள் மிகக் குறைந்த அளவிலேயே பழக்கத்திற்கு வந்துள்ளது என்பதும் தெரிய வருகின்றன.

இந்திய அளவில் எடுத்துக் கொண்டால் முத்திரைக் காசுகள் கி.மு. 11-ஆம் நூற்றாண்டு அளவிலே பழக்கத்தில் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதற்கு முன்பாக 'ஹிரண்யபிண்டம்' என்று வழங்கப்பெறும் தங்கக் கட்டிகள் போன்ற சில பொருட்கள் இடைப்பொருளாகப் பண்டங்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆதலால் பண்டமாற்று முறை பழக்கத்திலிருந்த காலம் மிகப் பழங்காலம் ஆகும். வட இந்தியாவில் கி. மு. 11-ஆம்

நூற்றாண்டில் பழக்கத்துக்கு வந்துவிட்ட முத்திரைக் காசுகள் கி.மு. 6-5-ஆம் நூற்றாண்டு அளவில்தான் மிக அதிக அளவில் பயன்பாட்டிற்குக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து கி.மு. 2-ஆம் நூற்றாண்டு வரை அங்கு இக்காசுகள் நிலவி இருக்கின்றன. அக்காசுகள் தமிழகத்திலும் கி. மு. 5-4 ஆம் நூற்றாண்டிலிருந்தே அறிமுகமாகியுள்ளன. ஆனால் சங்க இலக்கியங்களில் முத்திரைக் காசுகள் பற்றிய குறிப்பு காணப்பெறவில்லை. ஆதலால் இவ்விலக்கியங்கள், முத்திரைக் காசுகள் தமிழகத்தில் அறிமுகமாவதற்கு முன்பே எழுதப் பெற்றிருக்கலாமோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது. எனவே இதுபோன்ற பல வரலாற்றுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் காசுகள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

காசுகளைப் பற்றி ஆய்வு செய்யும் முயற்சி அண்மைக் காலங்களில்தாம் பரவலாகத் தொடங்கப் பெற்றிருக்கிறது. இந்திய அளவிலே காசுகள் பற்றிய ஆய்வு, சென்ற 19-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கியிருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்த மட்டில் முறையான ஆய்வு 20-ஆம் நூற்றாண்டில், அதிலும் சென்ற சில ஆண்டுகளாகத்தான் மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

தமிழகத்தில், சில குறியீடுகளை மட்டும் கொண்ட சதுர மற்றும் நீள் சதுரச் செப்புக் காசுகள் கணிசமான அளவில் கிடைத்திருக்கின்றன. அண்மைக் காலத்தில் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் மன்னர்களது பெயரும், உருவமும் பொறிக்கப் பெற்ற காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய காசுகள் கிடைக்கத் தொடங்கியதிலிருந்துதான் தமிழகக் காசுகளைப் பற்றித் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டுமென்ற எண்ணம் தமிழ் நாட்டுத் தொல்லியலாளர்கள் மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் மத்தியில் உற்சாகத்தோடு எழலாயிற்று.

முதன் முதலில் தமிழகத்தில் சங்க காலத்தைச் சார்ந்த எழுத்துப் பொறிக்கப் பெற்ற காசினைத் 'தினமலர்' ஆசிரியர் திரு இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான்

கண்டறிந்து தமிழக மக்களுக்கு அறிவித்தார்கள். அதன்பிறகு தொடர்ந்து பல காசுகள் இப்பொழுது கிடைத்து வருகின்றன. அண்மைக் காலங்களில் அளக்குடி திரு ஆறுமுக சீத்தாராமன் என்னும் இளைஞர் சில முக்கியக் காசுகளைக கண்டறிந்து தமிழகப் பத்திரிகைகளில் எழுதி வருகிறார்

தமிழகக் காசுகளைப் பற்றி சர் வால்டர் எலியட் என்பவர் 1886இலேயே **தென் இந்தியக் காசுகள்** (Coins of South India) என்னும் ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து சர். டி. தேசிகாச்சாரி, லெவன் தால், சி. எச். பிடல்ஃப், திரு. டி. ஜி. ஆராவமுதன், திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, டாக்டர். டி. வி. மகாலிங்கம், திரு. எஸ். ராமய்யா, டாக்டர். நாகசாமி, டாக்டர். கே. வி. ராமன், திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி போன்றோர் நூல்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதியுள்ளார்கள். குறிப்பாகத் திரு இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'சங்ககாலச் சோழர் நாணயங்கள்', 'பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்', 'சங்ககால மலையமான் நாணயங்கள்' என்ற சில நூல்களைத் தமிழில் எழுதியிருக்கிறார். மேற்காணும் அறிஞர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் தமிழ்நாட்டுக் காசுகளைப் பற்றி எழுதியிருந்தாலும், தமிழகத்தில் காணப்பெறும் முத்திரைக் காசுகள் தொடங்கி, மராட்டியர் காசுகள் முடிய தமிழில் எழுதப்பெற்ற நூல் இதுவரை வெளிவரவில்லை. அக்குறையைப் போக்கும் வகையில், 'தமிழர் காசு இயல்' என்னும் இந்நூலை யான் எழுதியுள்ளேன். இந்நூல், எமக்கு முன்னர் காசு இயலிலே ஆர்வம் காட்டி நூல்களும் மற்றும் கட்டுரைகளும் எழுதியுள்ள அறிஞர் பெருமக்களின் வழியைப் பின்பற்றி, பெரும்பாலானவற்றில் அவர்கள் கருத்தை ஏற்றும், சிலவற்றில் அவர்கள் கருத்தை மறுத்தும் எழுதப் பெற்றிருப்பதாகும். இந்நூலில் 1995ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்றிருக்கின்ற காசுகள் பற்றி ஓரளவிற்கு முழுமையாக எழுதியிருக்கிறேன். இதிலும் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட சில காசுகள் விடுபட்டு இருக்கலாம். அதற்காக என்னைப் பொறுத்தருள வேண்டுமாய் இந்நூலைப் படிக்கின்ற ஆர்வலர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மா. பொ. சி. அறக்கட்டளை என்னும் பெயரில் அமைந்துள்ள அறக் கட்டளைச் சொற்பொழிவில் நான் நிகழ்த்திய உரையின் தொகுப்பை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தற்பொழுது நூலாகக் கொண்டு வந்துள்ளது. அந்நிறுவனத்திற்கும், மிகுந்த ஆர்வத்தோடும் துடிப்போடும் இந்நூலைக் கொண்டு வரும் நிறு வனத்தின் இயக்குநர் டாக்டர் இராமர் இளங்கோ அவர்களுக்கும் முன்னாள் பொறுப்பு இயக்குநர் டாக்டர் அன்னிதாமசு அவர் கட்கும் அறக்கட்டளைப் பொழிவு அமைப்பாளர் முனைவர் திருமதி ச. சிவகாமி அவர்கட்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள படங்களில் பெரும்பாலானவை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினையும், சில அளக்குடி திரு. ஆறுமுக சீத்தா ராமன் அவர்களையும் சேர்ந்தவையாகும் ஆதலால் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கும், அளக்குடி திரு. ஆறுமுக சீத்தாராமன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அளக்குடி திரு. ஆறுமுக சீத்தாராமன் தம் தொகுப்பில் வைத் திருந்த சில காசுகளின் நெகடிவ்களை எமக்கு அளித்து அதிலிருந்து பிரதிகள் தயாரித்துக் கொள்வதற்கு அனுமதி அளித்தமைக்கும் அவருக்கு நான் மிகவும் கடப்பாடுடையவன் ஆவேன்.

இந்நூலினைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் மூலமாக அச்சிட்டுத் தர வேண்டுமென்று உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக் கொண்டதற் கிணங்க, அந்நிறுவனத்தினுடைய பொருட் செலவில் இந்நூல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அச்சகத்தின் மூலமாக அச்சடிக்கப்பட்டு வெளி வந்துள்ளது. ஆதலால் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் அச்சகப் பிரிவினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்நூலில் சில பின் இணைப்புக்கள் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றில் இரண்டாம் இணைப்பு சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறைப் பேராசிரியர் டாக்டர் சண்முகம் அவர்களால் ஆங்கிலத்தில் தயாரிக்கப் பெற்று, எம்

துறை உதவி கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர் டாக்டர் மார்க்சியகாந்தி அவர்களாலும் மற்றும் கல்வெட்டாய்வாளர் திருமதி. எஸ். வசந்தி அவர்களாலும் முறையே ஆவணங்களோடு சரிபார்க்கப்பட்டும் தமிழில் தயாரிக்கப்பெற்றும் இங்குத் தரப் பட்டு உள்ளது. அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். மற்றும் சில இணைப்புகளில் திரு. வெங்கடாசலம் அவர்களது ஆய்வுக் கட்டுரையிலிருந்து விபரம் சேகரிக்கப் பெற்று இருக்கிறது. ஆதலால் அவருக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாகச் சென்னையிலே கோவை மாவட்டம் பற்றிய ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கில் "கோவை மாவட்டக் காசுகள்" என்னும் தலைப்பில் நான் ஒரு கட்டுரையைப் படித்தேன் அக்கருத்தரங்கில் தலைமையேற் றிருந்த அமரர் பேராசிரியர் டாக்டர் நா. சஞ்சீவி அவர்கள் எமது கட்டுரை படித்து முடிக்கப் பெற்றவுடன் "திரு நடன. காசிநாதன், காசிநாதன் மட்டுமல்ல காசுநாதன்" என்று அன்போடு என்னைப் பாராட்டினார்கள். அவரது பாராட்டிற்கு நான் தகுதியுடையவன்தானா என்று அப்பொழுது என்னையே நான் கேட்டுக் கொண்டேன். அப்பாராட்டுக்கு விரைவில் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்வது அவசியம் என்ற எண்ணம் மட்டும் என் உள்ளத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. அவ்வெண்ணத்தின் வடிவம் தான் இந்நூல் என்று தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடை கிறேன் அந்த எண்ணத்துக்குத் தூண்டுகோலாக விளங்கிய அமரர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு இந்நூல் வாயிலாக எமது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

அன்பன்

**நடன. காசிநாதன்**

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| காசு இயல் தோற்றமும், வளர்ச்சியும் | ... | 1 |
| முத்திரைக் காசுகள் | ... | 6 |
| சங்ககாலக் காசுகள் | ... | 15 |
| ரோமானியக் காசுகள் | ... | 22 |
| சாதவாகனர் காசுகள் | ... | 31 |
| களப்பிரர் காசுகள் | ... | 34 |
| சீனர் காசுகள் | ... | 38 |
| பல்லவர் காசுகள் | ... | 52 |
| சோழர் காசுகள் | ... | 59 |
| பாண்டியர் காசுகள் | ... | 71 |
| கண்ட கோபாலன் மாடை | ... | 93 |
| வீரச்சம்பன் குளிகை | ... | 97 |
| விசயநகர வேந்தர் காசுகள் | ... | 100 |
| மாவலிவாணாதிராயர் காசுகள் | ... | 113 |
| வேணாட்டார் காசுகள் | ... | 118 |
| நாயக்கர் காசுகள் | ... | 121 |
| மராட்டியர் காலக் காசுகள் | ... | 128 |
| பிற்சேர்க்கைகள் | ... | 133 |

பிரிவு ஒன்று

# காசு இயல் தோற்றமும் வளர்ச்சியும்

மனிதன் என்று உணவு வகைகளை உற்பத்தி செய்யத் தொடங்கினானோ அன்று முதலே வாணிகம் தொடங்கி விட்டது என்று கூறலாம். ஒரு மனிதன், தனது தேவைக்குப் போக மீதம் உள்ள தன் பொருட்களை மற்றவனுக்குக் கொடுத்துவிட்டுத் தனக்குத் தேவைப்படும் வேறு பொருட்களை மற்றவனிடமிருந்து பெற்றுக் கொள்வதுதான் வாணிகத்தின் அடிப்படையாகும். மனிதனுடைய தேவை அதிகமாக அதிகமாகப் பண்ட மாற்றங்கள் மேலும் மேலும் வளர்ந்தது. இந்த முறையையே 'பண்ட மாற்று' முறை (Barter System) என்று வணிகயியலாளர் அழைக்கின்றனர். இப்பண்டமாற்று முறை உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாணிகத்தின் தொடக்கக் காலத்தில் இருந்திருக்கிறது. அதற்குப் பிறகு உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப்பகுதியில் எது மிகுதியாகக் கிடைத்ததோ அதை மையப் பொருளாகக் கொண்டு வாணிகம் விரிவடைந்திருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரையில் பண்ட மாற்று முறைக்குப் பிறகு வாணிகத் திற்கு மையப் பொருளாக விளங்கியது பசு அல்லது காளை மாடு ஆகும்.

மக்கள் ஒரு பொருளை விற்க அல்லது வாங்க முற்படும் போது பொதுப் பொருளான மாட்டை அவ்வாணிகத்திற்கு மாற்றுப் பொருளாகப் பயன்படுத்தியுள்ளனர். எவ்வாறெனில் ஒருவர் தமக்குத் தேவைப்படும் உழுதொழில் கருவிகளை, அக்கருவிகள் செய்பவரிடமிருந்து பெறுவதற்குத் தம்மிடம் உள்ள காளை மாட்டிற்கு ஒரு விலை நிர்ணயம் செய்து, அந்தக் கருவிகளுக்கு ஈடாக ஒரு காளையையோ அல்லது இரு

காளைகளையோ வழங்குதல் ஆகும். ஒரு காளை மாட்டினுடைய விலைக்கு ஈடாகப் பொருட்களை வாங்கும்போது இம்முறை எளிதாக இருந்தது. ஒரு காளை மாட்டினுடைய விலைக்குக் குறைவான பொருட்களை வாங்க வேண்டிய நிலை எழுகையில் இம்முறையில் இடர்ப்பாடு காண நேர்ந்தது. ஆதலால் ஒரு காளை மாட்டிற்குக் குறைவாக யாதாவது ஒரு பொருளை வணிகத்தின் மையப் பொருளாகக் கொள்ளுதல் வேண்டும் என்று மக்கள் விரும்பியபடி சோழிகளைப் (Cowrie Shells) பயன்படுத்த முற்பட்டனர். சோழிகள் பல காலம் சமுதாயத்தில் வணிகத்தின் மையப் பொருளாகத் தொடர்ந்து வந்தமை தெரிய வருகிறது. அதற்குப் பிறகு அதனினும் குறைந்த மதிப்புடைய பொருட்களை வாங்கும் நிலை ஏற்பட்ட போது குன்றிமணிகளை வணிகத்தின் மையப் பொருளாகப் மக்கள் கொண்டனர். அக்குன்றிமணியில் இருந்துதான் காசுகள் உருவானதாக வரலாறு நமக்குப் புலப்படுத்துகிறது.

இந்தியாவில் கி.மு. 6 அல்லது 5-ஆம் நூற்றாண்டிலிருந்து "கார்ஷா பணம்" வணிகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது புத்த ஜாதகக் கதைகளிலிருந்து அறிய முடிகிறது.[1] பாணினி தம்முடைய அஷ்டாத்யாயி என்னும் இலக்கண நூலில் **கார்ஷா பணம், நிக்ஷ்கா, சதமானா** போன்ற ஏழு வகையான காசுகளைக் குறிப்பிட்டுள்ளார்.[2] பாணினியின் காலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. ஆகையால் கி.மு. 6-ஆம் நூற்றாண்டு அளவிலே இந்தியாவில் காசுகள் அச்சடிக்கும் தொழிற்சாலை இருந்தது என்பது இதனால் அறியமுடிகிறது. புத்த ஜாதகக் கதைகளில் "குஹக் ஜாதகா"[3] என்னும் கதையில் "நிஷ்கா" என்னும் காசு வகையைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இக்கதையில் முனிவர் ஒருவர் விவசாயி ஒருவரால் கட்டித் தரப்பட்டிருந்த ஆசிரமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, அவ்விவசாயி தம்முடைய 100 நிஷ்கா காசுகளை அந்த ஆசிரமத்துக்கு அருகில் ஒரு இடத்தில்

1. D. R. Bhandarkar, Lectures on Ancient Indian Numismatics, p. 40.
2. Ibid. p. 45.
3. Ibid. p. 43.

புதைத்து விட்டு அம்முனிவரை அதைப் பார்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டதாகச் சொல்கிறது. இக்கதையிலிருந்து "நிஷ்கா" என்னும் ஒரு வகைக் காசு அப்போது வழக்கத்தில் இருந்தது என்று உணர முடிகிறது.

"நிஷ்கா" என்னும் காசு உயர்ந்த மதிப்பையும், "சுவர்ண மாஷகா" என்னும் காசு வகை அதற்கு அடுத்த கீழ் நிலை மதிப்பையும், "மாஷகா" என்பது அதற்கு அடுத்த கீழ் நிலை மதிப்பையும் பெற்று இருந்ததாகத் தெரிய வருகிறது.[1]

"சதமானா" என்னும் ஒரு காசு வகையும் அக்காலத்தில் வழக்கில் இருந்ததாக அறியமுடிகிறது. சதமானா என்னும் பெயர் 100 மானாக்களைக் கொண்டது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. "மானா" என்பது "குஞ்சா" விதையின் எடை அளவினைக் குறிப்பதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[2] சதபத பிராமண என்னும் நூலில் **சதமானா** என்னும் காசு வகையும், "**சுவர்ணம்**", "**ஹிரண்யம்**" ஆகிய காசு வகைகளும் குறிப்பிடப்படுகின்றன. சதமானா காசு வகை பிராமண நூல்களில் மட்டும் அல்லாது சம்ஹிதா என்னும் நூல்களிலும் குறிக்கப்பட்டுள்ளது.[3]

பிராமண நூல்களில் "**கிருஷ்ணலா**" என்னும் ஒரு காசு வகையும் பேசப்படுகிறது. தைத்ரீயப் பிராமண என்னும் நூலில் **கிருஷ்ணலா** என்னும் காசு குறிக்கப்படுகிறது. இது ஒரு பொற்காசு என்பதற்கு "காடகசம்ஹிதா" என்னும் நூலில் காணப்படும் "**ஹிரண்ய கிருஷ்ணலா**" என்னும் வரி மேற்கோள் காட்டப்படுகிறது.[4] இக்காசு மனுவின் காலம் வரை வழக்கத்தில் இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. **நிஷ்கா** என்னும் காசு வகை உருவம் பொறித்த காசு வகையாக

---

1. D. R. Bhandarkar, Lectures on Ancient Indian Numismatics, p. 50.
2. Ibid. p. 57.
3. Ibid. pp. 57-58.
4. Ibid. p. 60.

இருந்திருக்கிறது என்பது பிராமணங்கள் மற்றும் புத்த இலக்கியங்கள் மூலம் புலனாகிறது. அக்காசுகளில் உருவங்கள் இருந்தன என்பது "ரூபா" என்னும் சொல்லினால் குறிக்கப்படுகிறது.[1]

புத்த ஜாதக நூல்களில் மேற்கூறப்பட்ட காசுகளோடு மட்டும் அல்லாது **"கார்ஷாபண"** என்னும் காசு வகையும் குறிப்பிடப்படுகிறது. இக்கார்ஷாபண என்னும் காசு வகை பொன், வெள்ளி, செம்பு என்ற உலோகங்களைக் கொண்டு செய்யப் பெற்றிருக்கலாம். அது மட்டுமல்லாது பல மதிப்பு களிலும் வழக்கத்திலிருந்திருக்கிறது என்பது **கார்ஷாபண, அர்த்தகார்ஷாபண, பாதகார்ஷாபண** என்னும் சொற்களில் இருந்து நமக்குத் தெரிய வருகிறது. அதேபோன்று **"மாஷகா"** என்னும் காசு வகையிலும் வேறுபட்ட மதிப்புள்ள காசு வகை வழங்கி இருந்திருக்கிறது என்பது **சதுர்மாஷகா, த்ரிமாஷகா, த்விமாஷகா, ஏகமாஷகா, அர்த்தமாஷகா** என்னும் சொற் களால் புலப்படுகின்றது.[2]

பழங்காலத்தில் காசுகள் பற்றிய அறிவு மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருந்தது என்பது **அர்த்தசாஸ்திரம்** என்னும் நூலில் இருந்தும், புத்தகோசர் விளக்க உரையி லிருந்தும் தெரிய வருகிறது. **"ரூப சுத்த"** என்றும் **"ரூப சூத்ரா"** என்றும் அழைக்கப்படும் ஒரு நூல், காசுகளைப் பற்றி தெரிவிக்கும் நூலாக வழக்கத்தில் இருந்திருக்கிறது.[3] வசதி படைத்த நிலையில் உள்ள பிராமணர்கள் அக்காலத்தில் **"லேக, ரூப, கணனா, வியவஹார"** ஆகியவற்றைப் படித்தார்கள் என்பதும், அவர்கள் படித்தவற்றுள் **"ரூப"** என்று குறிப்பிடப்படுவது காசு வகை பற்றியது என்பதும் தெரியவருகிறது.[4] அச்சாக்கப்பட்ட காசுகளைச் சரிபார்ப்பதற்கு

---

1. D. R. Bhandarkar, Lectures on Ancient Indian Numismatics, p. 68.
2. Ibid. p. 77.
3. Ibid. p. 128-129.
4. Ibid. p. 127-128.

அதிகாரிகளும் அக்காலத்தில் இருந்தனர் என்பதும் அர்த்த சாஸ்திரம் என்ற நூலினால் புலனாகிறது. "ரூபதர்சிகா" அல்லது "ஸ்வர்ணிகாஸ" என்னும் ஒரு அதிகாரி காசுகளை ஆய்வு செய்வதற்காக இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது.[1] அர்த்தசாஸ்திரத்தில் கூறப்படும் "ரூப தர்சிகாவும்" பதஞ்சலி காலத்திய "ரூப தர்சிகாவும்" ஒரே வகையான அதிகாரி என்றும் ஊகிக்க முடிகிறது.[2]

---

1. D. R. Bhandarkar, Lectures on Ancient Indian Numismatics, Reprint 1990, p. 130.
2. Ibid. p. 130.

பிரிவு இரண்டு

# முத்திரைக் காசுகள்

இந்தியாவில் வேத காலத்துக்குப் பிறகு உலோகத்தால் காசுகள் தயாரிப்பது அதிகரித்துக் காணப்படுகிறது. காசுகள் தயாரித்தல் பற்றிய குறிப்புக்கள் சந்திரகுப்த மௌரியரின் அமைச்சராக இருந்த கௌடில்யர் என்பார் எழுதிய அர்த்த சாஸ்திர நூலிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. அந்நூலில் கள்ளக்காசுகள் தயாரித்தோர் "கூடரூபக்காரர்" என்று குறிப்பிடப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல் காசுகள் தயாரிக்கும் முறை பற்றியும் மிக விரிவாக அந்நூலில் எழுதப் பட்டிருக்கிறது. உலோகத்தை முதலில் மட்கலத்தில் (மூசை) உருக்கி, பின்னர் காரப்பொருள் சேர்த்து அதைச் சுத்தப்படுத்தி, சுத்தம் செய்யப்பட்ட உலோகத்தைப் பட்டடைக்கல்லில் வைத்துச் சம்மட்டியால் அடித்து நீண்ட தகடுகளாகச் செய்யப் பெற்றன. அவ்வாறு செய்யப்பட்டவை சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு அத்துண்டுகளில் முத்திரைப்பொறிகள் கொண்டு முத்திரை பதித்தனர் என்று குறிப்பிடப்படுகிறது. இன்றுகூட இதே முறையில்தான் காசுகள் உலகெங்கும் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இயந்திரத்தைக் கொண்டு அச்சடிக்கும் முறையும் வழக்கத்தில் உள்ளது. மேற்கூறியவாறு தயாரிக்கப் பெற்ற காசுகள்தான் **'முத்திரைக் காசுகள்'** (Punch marked coins) என்று அழைக்கப்படுகின்றன. இக்காசுகளில் எழுத்துக்கள் யாதும் காணப்படவில்லை. எழுத்துக்களுக்குப் பதிலாகக் குன்றுகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன, மனிதன், கதிரவன் போன்ற உருவங்களைக் காண முடிகிறது. மேலும் சதுரம், முக்கோணம் ஆகிய வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வுருவங்களைக் கொண்டு, இந்த இடத்தில் வெளியிடப்பட்ட காசுகள் இன்னின்ன உருவங்கள் பதிக்கப் பெற்றிருக்கும் என்றும்; அவை எந்தெந்த அரசுக்கு உரியனவை என்றும் எளிதாகப் பாகுபடுத்திவிட

முடியும். மேற்கூறிய உருவங்கள் முன்பக்கம் மட்டும் ஐந்து அல்லது ஆறு உருவங்கள் காணப்படும். பின்பக்கம் சில காசுகளில் எவ்வித முத்திரையும் இல்லாமலும், சில காசுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முத்திரைகளும் காணப் படும். பின்பக்கத்தில் இச்சிறு உருவங்கள் காசுகள் தயாரிக்கப் பெற்ற அச்சு சாலையில் போடப்படவில்லையென்றும், அவை புழக்கத்திற்கு வந்த பிறகு அக்காசுகளை வைத்திருந்தோர் இவ்வுருவங்களைப் பதித்திருக்கலாம் என்றும் பெரும்பாலோ ரால் கருதப்படுகிறது.[1]

இத்தகைய முத்திரைக் காசுகள் தொடக்கக் காலத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியில்தான் காணப்படுகின்றன. இக்காசு களைக் கி.மு. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து **ஜனபதங்கள், மகாஜனபதங்கள்** என்ற அரசுகள் வெளியிட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அத்தகைய ஜனபதங்கள் **சூரசேனன்** (மதுரா பகுதியைச் சுற்றியுள்ள தற்கால பிராஜ்), **உத்தர பாஞ்சாலம்** (ரோகில்கண்ட் பகுதி) **தட்சிண பாஞ்சாலம்** (கங்கையில் இருந்து சம்பல் வரை பரவியுள்ள தோஆப் பகுதி), **வத்சம்** (கங்கையில் இருந்து தெற்கே அவந்தி அல்லது உஜ்ஜயினி வரையுள்ள பெரும்பகுதி) **குணாளம்** (இக்கால கொண்ட, பராய்ச் மாவட்டங்களாக இருக்கலாம்). **கோசலம்** (மேற்கே கோமதி நதி, தெற்கே சாயி எனப்படும் சர்ப்பிகா, கிழக்கே இன்றைய கந்தக் எனப்படும் சதநீரா, வடக்கே நேபாளக் குன்றுகள் வரை அடங்கியுள்ள பகுதி). **காசி** (வாரணாசியைச் சுற்றி ஜோன்பூர், காசிபூர், மிர்சாபூர், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதி), **மல்லா** (தியோரியா மாவட்டமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும்), **மகதம்** (வடக்கே கங்கை நதி, மேற்கே சோன் நதி, தெற்கே சோட்டா நாகபுரி வரையுள்ள அடர்ந்த காடுகள், கிழக்கே பகல்பூர் பகுதி அடங்கிய இடங்கள்), **வங்கம்** (வங்காளம்) கலிங்கம் (ஒரிசாவில் வைதாரிணியில் இருந்து ஆந்திரா எல்லை வரையுள்ள கடற்கரைப் பகுதி முதல் மேற்கே அமர்கண்டம் என்னும்

1. Dr. Parameswari Lal Gupta, 'The early coins from Kerala', pp. 11–12

மலங்காட்டுப் பகுதி வரை), **ஆந்திரா** (கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் டெல்டாப் பகுதி), **அஸ்மஹம்** (மஹாராஷ்டிரத்தில் கோதாவரிக்குத் தெற்கே உள்ள பகுதி), **மூலகம்**(ஹைதராபாத் உட்பட அஸ்மஹத்திற்கு அருகேயுள்ள மாநிலம்), **சௌராஷ்டிரம்** (கத்தியவார் பகுதி), **காந்தாரம்** (ஆப்கானிஸ்தான எல்லைப் பகுதியில் உள்ள வடமேற்குப் பகுதி) ஆகிய அரசுகள் தான் இந்நாணயங்களை வெளியிட்டன என்று கருதப் படுகிறது [1] இந்நாணயங்களில் ஆண்டோ, எழுத்தோ பொறிக் கப்படாமல் இருப்பதால் எந்த ஆண்டு எந்த அரசால் இந்த நாணயங்கள் வெளியிடப்பட்டன என்று கூற இயலவில்லை. இருப்பினும் இக்காசுகள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே வழக்கில் இருந்தன என்றும்; கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் மகதப் பேரரசு வலிவடைந்த பிறகு அருகி அருகி மறைந்து விட்டன என்றும் யூகிக்கப் படுகிறது.[2] மேற்கூறிய அரசுகள் வெளியிட்ட காசுகள் ஒன்றுக்கு ஒன்று எடை, தோற்றம், உலோகத்தின் தரம், முத்திரைச் சின்னம் ஆகியவற்றில் வேறுபாடு உள்ளவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சூரசேனன், உத்தர பாஞ்சாலம், தட்சிண பாஞ்சாலம், குணாளம், அஸ்மஹம் ஆகிய அரச நாணயங்களில் ஒரே சின்னம்தான் உள்ளது. எனினும் இச்சின்னம் தோற்றத்திலும் மற்றும் இயந்திர செயற்பாங்கிலும் வெவ்வேறாகக் காணப்படுகின்றன. இவற்றில் அஸ்மஹம், குணாளம் ஆகிய இரு அரசுகள் மட்டும் உலோகத்தினை உருக்கி அதை ஒரே வட்டமானத் தகட்டில் ஊற்றி அது உலர்ந்து கெட்டியாவதற்கு முன் அவற்றிற்கு மேல் உருவ முத்திரையிட்டுக் காசுகளை உருவாக்கியிருக்கியிருக் கின்றன. ஏனைய அரசுகள் உலோகத் தகட்டைச் சிறுசிறு துண்டுகளாகக் கத்தரித்து அவற்றின் மீது சின்னம் பொறித்துக் காசுகளைத் தயாரித்திருக்கிறார்கள். அஸ்மஹத்தின் காசுகள் தடிப்பாகவும் வட்டமாகவும், அல்லது நீண்ட வட்டமாகவும்,

---

1. டாக்டர் பரமேஸ்வரி லால்குப்தா, நாணயங்கள், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, புதுடில்லி, 1975, பக்கம். 13-14.

2. மேலது பக்கம். 14.

சிறிது குழிவாகவும் காணப்படுகின்றன. குணாளம் காசுகளுக்கும், அஸ்மஹத்தின் காசுகளுக்கும் முக்கியமான வேற்றுமை உண்டு. குணாளம் காசுகளில் நடுவில் ஒரு பெரிய சின்னத்தையும் அதைச் சுற்றி பெரும்பாலும் நான்கு சிறுசிறு சின்னங்களையும், பெரிய சின்னத்தைப் பதித்தபின் உடனடியாகப் பதித்திருக்கின்றனர். குணாளம் காசுகள் 105 அல்லது 50 தானிய மணி எடையில் தயாரிக்கப்பட்டுள்ளன. முத்திரைச் சின்னங்களைப் பதிப்பிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட வெண்கல அச்சு வார்ப்பினை மத்திய பிரதேசத்தில் ஈராவ என்ற இடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். ஆந்திரம், அஸ்மஹம் மூலகம், ஆகிய மூன்று ஜனபதங்களும் தென் இந்தியாவைச் சேர்ந்தவைகளாகும். ஆனால் மகதப் பேரரசு காலத்தில் அப்பேரரசால் வெளியிடப்பட்ட வெள்ளிக் காசுகள்தான் இதுவரை தென்னகத்தில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் தான் முதன்முதலில் கர்னல் கால்டுவெல் என்பவர் கி.பி. 1800-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மகத நாட்டைச் சேர்ந்த மூன்று வெள்ளிக் காசுகளைக் கண்டுபிடித்தார்.[1] மேலும் தென் இந்தியப் பகுதியில் தான் மகத நாட்டு வெள்ளிக் காசுகள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஆந்திர மாநில குண்டூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி என்னும் இடத்திலிருந்து 7668 காசுகள் ஒரே குவியலில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன: அதே போன்று பாண்டிய நாட்டில் சில முத்திரை பதித்த வெள்ளிக் காசுகள் வெளியிடப்பட்டதாகத் தெரிய வந்திருக்கிறது. இவ்வெள்ளிக் காசுகளில் மௌரியக் காசுகளைப் போல 5 சின்னங்கள் உள்ளன. அதாவது 12 கதிர்கள் கொண்ட சூரியன், 6 கிளை உள்ள சின்னம், ஸ்தூப வடிவ கட்டடம், அ' ர்ந்த மரம், வேலிக்குள் திரிசூலம் ஆகியவைகள் ஆகும். இக்காசுகளில் பின்புறம் கோடுகளைக் கொண்டு உருவாக்கப் பெற்ற மீன் சின்னம் காணப்படுகிறது. மேலும் இக்காசுகளின் எடை 16 முதல் 30 தானிய

---

1. டாக்டர். பரமேஸ்வரி லால்குப்தா, நாணயங்கள், நேஷனல் புக் டிரஸ்ட். இந்தியா, புதுடில்லி, 1975, பக்கம். 66.

மணி எடை உள்ளன. எனவே இவை மௌரியர் காலத்தில் வெளியிடப்பட்ட வெள்ளிக் காசுகளின் சம அளவாக இல்லை. அவைகளில் பாதி அளவே இவை உள்ளவைகளாகத் தெரிகின்றன. இக்காசுகள் மௌரியப் பேரரசருடைய சமகாலத்திலேயே வெளியிடப்பட்டதா? அல்லது மௌரியப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பின் பாண்டிய நாட்டினரால் வெளியிடப்பட்டதா என்பது தெரியவில்லை.

முத்திரைக் காசுகள் தமிழகத்தில் அண்மைக் காலத்தில் சென்னை முதல் நெல்லை முடிய பல இடங்களில் கிடைத்து வருகின்றன. குறிப்பாகக் கோவை மாவட்டம், தருமபுரி மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய பகுதிகளில் இவை அதிக அளவில் கிடைத்துள்ளன. ஒரு சில காசுகளில் பின்புறம் யானை உருவம் காணப்படுகிறது. இவ்வுருவத்தைக் கொண்டு இக்காசுகள் சேர நாட்டுப் பகுதியில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் நவலை என்ற பகுதியில் அண்மையில் இத்தகைய உருவம் பொறிக்கப் பெற்ற காசுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[1] பெரியார் மாவட்டம் கொடுமணலிலும், அகழாய்வின் போது இரு முத்திரைக் காசுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.[2]

இக்காசுகளைப் பற்றியும் மற்றும் வட நாட்டில் கிடைத்திருக்கின்ற காசுகளைப் பற்றியும் ஆய்வு செய்த காசு இயல் அறிஞர் டாக்டர் பி. எல். குப்தா அவர்கள் இத்தகைய காசுகளை ஆறு வகையாகப் பிரித்து ஒவ்வொரு வகைக் காசும் ஒவ்வொரு காலத்தில் வழக்கில் இருந்திருக்கின்றன என்று உணர்த்தியிருக்கிறார். முதல் இரண்டு வகைக் காசுகள் கி. மு. 6-ம் நூற்றாண்டில் மகத அரசை ஆட்சி செய்த அஜாதசத்ரு

---

1. See the article 'Punch-marked coins of Atiya Country' by Natana. Kasinathan, Presented in the 76th Annual conference of the Numismatic Society of India, held at Thanjavur.
2. Dr. K. Rajan, 'Archaeological note on the Punch-marked Coins of Tamilnadu', Studies in South Indian Coins Vol. I p.18.

மற்றும் அவருக்குப் பின்னர் வந்தோர் ஆட்சி காலத்தைச் சார்ந்தது என்றும், மூன்றாம் வகைக் காசு கி. மு. 440-ல் இருந்து 400 வரை ஆட்சி செய்த சிசுநாகன் என்பவனாலும் அவன் வழி வந்தவர்களாலும் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும், நான்காம் வகைக் காசுகள் நந்தர்கள் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும், ஐந்தாம் வகைக் காசுகள் பிந்துசாரனின் ஆட்சியில் வெளிவந்தவை என்றும், ஆறாம் வகைக் காசு மௌரிய அரசர் அசோகர் காலத்திலும், இதற்குப் பின் வந்தவர்கள் காலத்திலும் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் கணித்துள்ளார். தமிழகத்தில் கிடைத்துள்ளவற்றுள் பெரும்பாலான காசுகள் மேற்கூறிய வரிசையில் உள்ள 3, 4, 5, 6-ஆம் வரிசைகளைச் சார்ந்தவை என்று கூறப்பட்டிருக்கின்றன. ஒரு சில காசுகள் மேற்கூறபட்டுள்ள முதல் இரண்டாம் வகையைச் சார்ந்தவைகளாகவும் இருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. மேலும் ஆய்வு செய்தல் அவசியம். இரண்டாவது வகைக் காசுகள் மாம்பலம் மற்றும் வெம்பாவூர் போன்ற ஒரு சில இடங்களில் கிடைத்துள்ளன.

மேற்கூறிய இரண்டாம் வகைக் காசுகளிலிருந்து ஆறாம் வகை வரை உள்ள காசுகள் தமிழகத்தில் பல இடங்களில் கிடைத்திருக்கின்றன. மூன்றாம் வகைக் காசுகளில் கதிர்கள் உள்ள சூரியனின் சின்னம், அறுகிளைச் சின்னம், நாய், பனை மரம், யானை ஆகிய உருவங்கள் முன்பக்கத்தில் காணப் படுகின்றன. நான்காம் வகைக் காசுகளில் சூரியன், அறுகிளைச் சின்னம், மலை முகட்டில் நாய், காளை போன்ற சின்னம், கோடுகள், மலை முகட்டில் மரம், மலை முகடும் கீழே மீன் களும்; கவிழ்த்து வைத்தாற்போன்று காணப்படும் உரல், உலக்கை, வேலிக்குள் மரம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் வகையில் சூரியன், அறுகிளைச் சின்னம், மலை முகட்டில் பிறை, பூனை, எலியைக் கவ்விய பூனை, கொடி மரம், மேலிருந்து கீழாக மூன்று வட்டங்களும், குறுக்குக் கோடுகளும் ஆகிய உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆறாம் வகையில் அறுகிளைச் சின்னம், மலை முகட்டில் பிறை, எலியைக் கவ்விய பூனை, யானை, வலக்கையில் கோல் பிடித்த மனித உருவம், மலை முகட்டில் மயில், தராசு போன்ற

உருவம், வேலிக்குள் மரம், காளை, மூன்று மனித உருவங்கள் யானையும் நண்டும் ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. மேற்காணும் காசுகள் அனைத்தும் வெள்ளிக்காசுகள் ஆகும்.[1] இக்காசுகள் கி. மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. மு 2-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பழக்கத்தில் இருந்திருக்கின்றன. சில இடங்களில் இக்காசுகளோடு சில ரோமானியக் காசுகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இம்முத்திரைக் காசுகள்தான் வடநாட்டு இலக்கியங்களில் குறிக்கப் பெறும் "புராண" என்னும் காசு வகையாகும் என்று கருதுகிறார்கள். இக்காசுகள் மகத நாட்டில் ஆட்சி செய்த நந்த, மௌரிய அரச வம்சத்தினரால் வெளியிடப் பெற்றமை யென்பதால் அவர்களோடு தமிழகம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது நன்கு தெளிவுறும். நந்தர், மௌரியர் களைப் பற்றிப் பாடியுள்ள மாமூலனார் கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது[2] அவ்வாறாயின் இரண்டு மிக முக்கிய கருத்துக் களைக் கொள்ள முடிகிறது.

1. மாமூலனாரால் பாடப்பெற்ற சங்கப் பாடல்கள் கி. மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

2. மாங்குளம் கல்வெட்டில் குறிக்கப் பெறும் "கணி நந்தாசிரியர்" நந்தர்கள் காலத்தைச் சார்ந்தவராக இருக் கலாம். கி. மு. 5 அல்லது 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இக்கல்வெட்டைக் கருதலாம். இக்கருத்துக்கு அக்கல்வெட்டின் தெளிவற்ற மொழிநடையும் உறுதுணை புரிகிறது.

தமிழகத்தில் முத்திரைக் காசுகள் கிடைக்கப் பெற்ற இடங்களும், மாவட்டங்களும்:-

---

1. இரா. கிருஷ்ணமூர்த்தி, சங்க காலச் சோழர் நாணயங்கள், பக்கங்கள். 27-28.
2. மேலது. பக்கம் 26.

| ஊர் | மாவட்டம் | நூற்றாண்டு |
|---|---|---|
| மாம்பலம் | சென்னை | கி. மு. 5 |
| வெம்பாவூர் | திருச்சி | கி. மு. 5 |
| வீரசிகாமணி | திருநெல்வேலி | கி. மு. 5 |
| தாராபுரம் | பெரியார் | கி. மு. 5 |
| கன்னியன்குட்டை | சேலம் | கி. மு. 4 |
| தொண்டை மாநத்தம் | தென்னார்க்காடு | கி. மு. 4 |
| சாவடிப்பாளையம் (பல்லடம் அருகில்) | கோயம்புத்தூர் | கி. மு. 4 |
| பெளார் | கோயம்புத்தூர் | கி. மு. 4 |
| போடி நாயக்கனூர் | மதுரை | கி. மு. 2 |
| அழகன்குளம் | இராமநாதபுரம் | கி. மு. 2 |
| கரூர் | திருச்சி | கி. மு. 2 |
| காவிரிப்பூம்பட்டினம் | தஞ்சாவூர் | கி. மு. 2 |
| நமலை | தருமபுரி | கி. மு. 2 |
| கொடுமணல் | பெரியார் | கி. மு. 1 |

தமிழகத்தில் இக்காசுகள் கிடைப்பதோடு, காஞ்சிபுரத்தில் இக்காசுகள் செய்வதற்கான மண் வார்ப்புக்களும் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. 1962-ஆம் ஆண்டில் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் தென்வட்டப் பிரிவு இங்கு அகழாய்வு மேற் கொண்ட போதும்; 1970 முதல் 1976 முடிய சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை அகழாய்வு மேற்கொண்ட போதும் முத்திரைக் காசுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப் பட்ட இரு வார்ப்புக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[1] இரு வார்ப்புக்களும் சாம்பல் நிறமாகக் காணப்படுகின்றன.

1. Dr. K. V. Raman and Dr. P. Shanmugam "Terracotta Coin moulds from Kanchipuram" Studies in South Indian Coins, Vol. I, Edited by A.V. Narasimhamurthy, Pub. 1991 pp. 23-25.

முதல் வார்ப்புக்கூட்டில் ஒரே சமயத்தில் நான்கு காசுகள் தயாரிக்கக்கூடிய வசதி உள்ளது. இவற்றில் இரண்டு காசுகளின் கூடுகள் நல்ல நிலையிலும், இரண்டு பெரும்பகுதி சேத மடைந்தும் காணப்படுகின்றன. நான்கு கூடுகளில் ஒன்றில் சூரியன், காளை ஆகிய உருவங்கள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. இவை கி. பி. முதல் - இரண்டாம் நூற்றாண்டு காசுகளில் காணப் பெறும் திரும்பிய முத்திரை (Reverse) நிலையில் உள்ள உருவங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் வார்ப்புக்கூடு சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையால் காஞ்சிபுரம் ஜ்வரஹரேஸ்வரர் கோயில் அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் சாம்பல் நிறத்தில் உள்ளது. இக்கூட்டில் ஒரு காசுக்கூடு நல்ல நிலையிலும், மற்றொரு காசுக்கூடு பாதி சிதைந்த நிலையிலும், மேலுமிரண்டு பெரும்பகுதி சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இரண்டாம் காசுக்கூட்டில் மட்டும் இரு உருவங்கள் அழிந்த நிலையில் தெரிகின்றன. ஒன்று யானை அல்லது காளை உருவமாகவும் மற்றொன்று டாரின் (நந்திபாதம்) உருவமாகவும் தோன்றுகின்றன.

இவ்விரு வார்ப்புக் கூடுகளின் பின் பக்கங்களிலும் எந்த வித உருவமும் காணப்படவில்லை.

மேற்காணும் இரு சுடுமண் வார்ப்புக்கூடுகள் கிடைத்துள்ளதால் முத்திரைக் காசுகள் உலோகத்தகடு செய்து அதன் மீது முத்திரை பதிக்கும் முறையில் மட்டுமல்லாது வார்ப்பு முறையிலும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும்; தமிழகத்திலும் முத்திரைக் காசுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதும் தெரிய வருகின்றன. இத்தகைய சுடுமண் வார்ப்புக் கூடுகள் மதுரா, சிசுபால்கர் மற்றும் கொண்டாவூர் ஆகிய இடங்களிலும் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.[1]

---

1. Dr. K. V. Raman and Dr. P. Shanmugam "Terracotta Coin moulds from Kanchipuram" Studies in South Indian Coins Vol. I, Edited by A. V. Narasimhamurthy, Pub. 1991 p. 26.

பிரிவு மூன்று

# சங்க காலக் காசுகள்

முத்திரைக் காசுகளையடுத்து தமிழ்நாட்டில் நமக்குக் கிடைப்பன சங்க காலத்துக் காசுகளேயாகும். கிரேக்க நாட்டோடு தமிழ்நாடு கொண்டிருந்த வணிக உறவை விரிவாகச் சங்க நூல்கள் எடுத்துக் கூறுவதால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே சங்க காலம் தொடங்குகிறது என்று கொள்ளலாம். யவனர்களைப் பற்றிச் சங்கப்பாடல்கள் சில பேசுகின்றன. யவனர் என்னும் சொல் 'அயோனியன்' என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமே என்பது அனைவராலும் ஒப்புக்கொண்ட முடிவு. அவ்வாறாயின் ரோமானியர்களுக்கு முன்பு கிரேக்கத்தில் ரிபப்ளிகன் காலம் தொட்டே தமிழகம் மேலை நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தது என்று கொள்வதில் தவறில்லை.

இந்தியாவின் வட பகுதிக்குக் கிரேக்க மன்னர் அலெக்சாண்டர் கி.மு. நான்காம் நூற்றாண்டளவிலேயே வந்திருக்கிறார். அவர் வட இந்தியாவுக்கு நிலப்பகுதி வழியாக வந்த அதே காலத்தில் கடல் வழியாக இந்தியாவின் தென் பகுதிக்குக் கிரேக்க வணிகர் வந்திருக்கக்கூடும் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் சன்னாஸ் என்னும் கிரீஸ் நாட்டு அம்மையார் விளக்கியுள்ளார். கி.மு. முதல் நூற்றாண்டில் கிரீஸைக் கைப்பற்றிய ரோமானியர், கிரேக்கர் தென்னிந்தியாவோடு தொடங்கி வைத்திருந்த கடல் வாணிகத்தையே பின் பற்றினர் என்றும் கூறுகிறார்.[1] ஆதலால் கிரேக்க உறவைப்

1. Dr. Zannaz, 'Greece and South India', Proceedings of the V World Tamil Conference - Seminar, Vol. I, pp. 6-24, 1981.

பற்றிக் குறிப்பிடும் சங்கப் பாடல்களில் சிலவாவது கி. மு. மூன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

இதற்கு ஆதாரமாக இந்தியாவில் கிடைத்துள்ள ரோமன் ரிபப்ளிகன் காசுகளையும், அரிக்க மேட்டில் கிடைத்துள்ள ரௌலட்டட் வகைப்பானை ஓடுகளையும் கூறலாம். திரு. கிருஷ்ணமூர்த்தி கூட தம் நூலில் கி. மு. மூன்றாம், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்கக் காசுகள் தமிழகத்தில் கிடைத்திருக்கக்கூடும் என்றும், தங்க, வெள்ளி ஆபரணங்கள் மீது மிக்க ஆசை கொண்ட தமிழர்கள் அவற்றை உருக்கி அணிகலன்களாக மாற்றி அணிந்திருப்பர்; ஆதலால் தான் அக்காசுகள் தமிழகத்தில் கிடைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.[1] ஆனால் நம் நற்பேற்றின் காரணமாக அண்மையில் ரிபப்ளிகன் காலக் காசு (கி. மு. 75ஐச் சார்ந்தது) ஒன்றைக் கிருஷ்ணகிரி தென்னிந்திய வரலாற்று ஆய்வு மையம் கண்டுபிடித்துள்ளதாக படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது.[2] அக்காசு கி. மு முதல் நூற்றாண்டைச் சார்ந்தது தான் என்று செர்மானிய நாட்டு காசு இயல் அறிஞர் பீட்டர் பெர்கஸ்ஸும் ஒப்புதல் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சங்க காலத்தைச் சார்ந்தனவாகக் கீழ் வரும் காசுகள் குறிப்பிடப்படுகின்றன.

1. சதுர, நீள் சதுர வடிவான செப்புக் காசுகள்
2. பெருவழுதிக் காசுகள்
3. ஆண்டிப்பட்டிக் காசுகள்
4. மாக்கோதைக் காசுகள்
5. கொல்லிப்புறைக் காசுகள்
6. குட்டுவன் கோதைக் காசுகள்

சதுர, நீள் சதுர வடிவான செப்புக் காசுகளில் முன்புறம் யானையும் பின்புறம் புலி உருவமுள்ள காசுகள் சங்க காலச்

---

1. பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், பக்கம் 81.
2. Hindu, 1992.

சோழர் காலத்தியதாகவும், முன்பக்கம் யானையும், பின்பக்கம் பனை மர உருவமும் உள்ள காசுகள் சங்ககாலச் சேரர் காலத்திய தாகவும், முன்புறம் யானை, பின்புறம் மீன் உருவம் உள்ளவை சங்ககாலப் பாண்டியர் காலத்தியதாகவும் கருதப்பட்டு வருகின்றன. முன்புறம் காணப்பெறும் உருவத்துக்கு மேற் பகுதியில் மங்கலக் குறியீடுகளான ஸ்வஸ்திகம், கும்பம், மத்தளம், திருமறு போன்ற உருவங்களும் சிறு உருவங் களாகக் காணப்படும்.

மேலும் சில சதுர, நீள் சதுரச் செப்புக் காசுகளின் முன் பக்கத்தில் வேலியினுள் மரமும், குடையும், முகடுகளைக் கொண்ட குன்று, அதன் மீது இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் திரும்பி நிற்கும் யானை போன்ற உருவங்களும், பின் பக்கத்தில் வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் திரும்பிய நிலையில் வாய்பிளந்தும் வாலை உயர்த்தியும் நிற்கும் புலி உருவமும் காணப்பெறுகின்றன. வேறு சிலவற்றில் முன்பக்கத்தில் வலப் பக்கம் திரும்பி நிற்கும் யானையும் அதன் முன்னர் குதிரை பூட்டிய இரதம் ஒன்றும் காணப்படுகின்றது. பின்பக்கத்தில் இடப்பக்கம் திரும்பிய நிலையில் வலது முன்னங்காலைத் தூக்கியும் வாலை உயர்த்தியும் நிற்கும் புலி உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இரா. கிருஷ்ணமூர்த்தி, இக்காசுகள் தமக்குக் கரூரில் கிடைத்ததாக ஒரு கட்டுரை மூலம் தெரிவித்துள்ளார். இக்காசுகளில் சில கி.மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கூறியுள்ளார்.[1] மேலும் இவ்வாசிரியரே பெங்களூரில் சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து பெற்றதாகப் 'பெருவழுதி தலை நாணயங்கள்' என்று சில வற்றைக் கூறுகிறார்[2] இக்காசுகளில் முன்பக்கத்தில் வலப்பக்கம் திரும்பிய நிலையில் உள்ள மன்னன் தலையும் பின்பக்கத்தில் நீள் சதுரவடிவிலான ஒரு தொட்டியும் அதில் இரண்டு கடல்

1. இரா. கிருஷ்ணமூர்த்தி, A Rare Sangam period Chola Coin, Studies in South Indian Coins Vol. I,pages. 31-32.

2. இரா. கிருஷ்ணமூர்த்தி, 'பாண்டியர் பெருவழுதி நாண யங்கள், பதிப்பு 1987. பக்கம். 74-83

ஆமைகளும் இருப்பதாகத் தெரிவித்து, இத்தகைய காசுகள் கிரேக்கர் நாணயங்களைப் பார்த்துச் செய்யப்பட்டிருக்கலாம் என்றும், இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.[1] அண்மைக் காலத்தில், எம் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற ஜேசுதாஸ் என்னும் மாணவர் நாகை காயிதே மில்லத் மாவட்டம் காட்டுச்சேரி என்ற ஊரிலிருந்து ஒரு சதுரக் காசைக் கண்டெடுத்தார். இதில் முன்பக்கம் யானை உருவமும், பின்பக்கம் வேலியினுள் மரம் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கிறது.[2]

இக்காசு வகைகளைச் சங்ககாலக் காசுகள் அனைத்திலும் பழமையானதாகக் கொள்ளலாம். இவற்றிலும் பழமையானதாகச் சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெறும் **காசு, பொன்** னாக இருக்கலாம். ஏனெனில் அக்காசுகளின் உருவ அமைப்பை இலக்கியங்கள் **வேப்பம்பழம்** போன்றும் **உகாப் பழம்** போன்றும் மஞ்சள் நிறமுடையவைகளாய் இருந்தன என்று குறிப்பிடும் காரணத்தினாலாகும்.[3] ஒரு காலத்தில் தானியங்களையே பண்டம் மாற்றுக்கு மையப் பொருளாகக் கொண்டிருந்த பழந்தமிழர், கூடவே வேப்பம்பழம் போன்ற தங்கக் கட்டிகளையும் மையப் பொருளாகக் கொள்ள முற்பட்டனர். இம்முறை இந்தியாவின் வடபகுதியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது. இத்தகைய காசுகளை வட இந்திய இலக்கியமான ரிக் வேதம் **ஹிரண்ய பிண்டம்** என்று அழைத்துள்ளது.[4] ஆதலால் வேப்பம்பழ வடிவிலும், உகாப்பழம் வடிவிலும் இருந்த பொற்கட்டிகள் தான் சங்க காலத்துக்கு முன்பாகவே காசாகப் பயன்பட்டிருக்க வேண்டும். அது சங்க காலத்திலும் வழக்கில் இருந்திருக்கும்.

---

1. இரா. கிருஷ்ணமூர்த்தி, பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், பதிப்பு 1987 பக்கம் 74-32
2. Natana. Kasinathan, Achievments of Archaeology, Annexure 1, p. VI
3. குறுந்தொகை, பாடல் 67, வரி 4; அகம், பாடல், 239 வரி 7.
4. D.R. Bhandarkar, Op. cit., p. 168.

பிறகு முத்திரை குத்தப் பெறும் முறை பயன்பாட்டிற்கு வந்திருக்கும். முத்திரை குத்தப்பெற்ற காசுகள் புழக்கத்துக்கு வந்த சிறிது காலத்தில்தான் தமிழகத்தில் சதுர வடிவச் செப்புக் காசுகள் உருவாக்கப்பட்டிருக்கும். இக்காசுகளின் காலத்தை கி.மு. ஐந்து அல்லது நான்காம் நூற்றாண்டு எனக் கொள்ள லாம். மன்னன் உருவம் பொறிக்கப்படாத **பெருவழுதி** மற்றும் **ஆண்டிப்பட்டிக்**[1] காசுகளின் காலம் கி. மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம். இவற்றுக்குப் பிறகு, காசுகளில் மன்னனின் உருவம் பொறிக்கும் முறை கிரேக்க நாட்டுத் தொடர்பால் புகுத்தப்பட்டிருக்கலாம். இவற்றின் காலம் கி.மு. இரண்டு அல்லது முதலாம் நூற் றாண்டைச் சார்ந்திருக்க வேண்டும். இக்காலத்தைச் சார்ந்தவை யாக **மாக்கோதை, கொல்லிப்புறை** மற்றும் **குட்டுவன் கோதை** காசுகளைக் கருதலாம்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய, அதிய நாடுகள் வட நாட்டில் இருந்த மௌரியப் பேரரசுக்குச் சமமாகத் திகழ்ந்திருந்தன என்பது அசோகன் காலத்தியக் கல்வெட்டு மூலமாகவும் புலப்படுகிறது.[2] அது மட்டுமல்லாமல் தமிழகத்துக்கும், மகத நாட்டு நந்த வமிசத்தினருக்கும், மௌரியப் பேரரசுக்கும் நெருக்கமான பண்பாட்டு மற்றும் வணிக உறவு இருந்தது என்பதற்குச் சான்றுகளாகத் தமிழகத்தில் பல இடங்களில் கிடைத்துள்ள முத்திரை குத்தப் பெற்ற காசுகளையும்; மௌரியர் காலப் பானை ஓடான வடஇந்திய கறுப்பு வண்ணப் பானை ஓடுகளை யும் (N.B.P.) காட்டலாம்.

கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படும் கலிங்க மன்னன் காரவேலனின் கல்வெட்டில், தம் பதினோராம் ஆட்சியாண்டில் தமிழ் நாட்டைப் பாண்டி நாடு வரை வெற்றி கொண்டான் என்றும்,

---

1. Natana. Kasinathan, 'Andippatti Coins - A Reappraisal', Art Panorama of Tamils, pp. 44-46.

2. D.C. Sircar, Select Inscriptions Vol. I, p. 17

பாண்டியன் பரிசுப் பொருளாக முத்துக்களை அனுப்பி வைத்தான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.[1] மேற்காணும் காரணங்களினால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே முடியுடை மூவேந்தர்களின் ஆட்சி தமிழகத்தில் மிக்க வலிமை பெற்று விளங்கியது என்பதும்; அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பாடும் சங்க இலக்கியப் பாடல்கள் சிலவும் அக்காலத்தைச் சார்ந்தவை என்பதும் போதரும். இக்கருத்துக்கு மேலும் ஆதாரங்களாகத் தமிழகத்தின் பண்டைத் தமிழ்க் கல்வெட்டு களும் துணை நிற்கின்றன.[2]

அசோகனின் காலத்துக்கு முற்பட்டதான மெகஸ்தனிஸ் ஸின் நூலான **இண்டிகா**, கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியளவிலேயே தமிழகத்தில் அரசு நிலவியது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.[3]

சங்க காலத்தில், திருக்கோவலூர்ப் பகுதியை மலையமான் என்னும் குறுநில மன்னன் ஆண்டு வந்ததாக இலக்கியங்கள் இயம்புகின்றன. இத்திருக்கோயிலூருக்கருகில் ஓடும் தென் பெண்ணையாற்றிலிருந்து பல செப்புக் காசுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அவைகளில் சில சிறிய சதுரக் காசுகளும் காணப் படுகின்றன. இவற்றில் ஒரு பக்கம் குதிரையின் உருவமும் மறு பக்கத்தில் ஆற்றில் மீன் நீந்துவது போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. இக்காசுகள் மலையமான்களைச் சார்ந்தவை என்று கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.[4]

சங்க காலச் சதுரக் காசுகள் சில அகழாய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பூம்புகாரில் மத்திய அரசு தொல்

---

1. J.B.O.R.S. Vol. 1V, 401.
2. I. Mahadevan, 'Corpus of Tamil Brahmi inscriptions', Seminar on inscriptions, Ed. by. R. Nagaswamy, p. 60-61.
3. Mc. Crindle, Ancient India as described by Megasthanese and Arrain, p. 159.
4. இரா. கிருஷ்ணமூர்த்தி, 'சங்ககால மலையமான் நாண யங்கள்' பதிப்பு 1990, பக்கம் 17-35.

பொருள் ஆய்வுத்துறை நிகழ்த்திய அகழாய்வின்போது வெளிப் படுத்தப்பட்ட படகுத்துறையின் மீதிருந்து சங்க காலக் காசு கண்டெடுக்கப்பட்டதாக டாக்டர் கே. வி. இராமன் தெரிவித் துள்ளார்.[1] தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அழகன்குளத்தில் நிகழ்த்திய அகழாய்வின் போதும் சங்க காலச் செப்புக் காசுகள் இரண்டைச் சேகரித்துள்ளது.[2]

பூம்புகார்க் காசில் முன்பக்கம் யானையின் உருவமும் பின் பக்கம் புலி வலது காலைத் தூக்கிய நிலையில் உள்ள உருவமும் காணப்படுகிறது.

அழகன் குளக்காசுகளில் பெரியதாக உள்ள காசில் முன் பக்கம் யானை மற்றும் எண் மங்கலச் சின்னங்களும் பின்பக்கம் மீன் உருவம் போன்றும் உள்ளன.

சிறிய காசில் முன்பக்கம் காளை உருவமும் பின்பக்கம் மீன் உருவமும் காணப்படுகின்றன. மேற்கூறப்பெற்ற மூன்றும் செப்புக்காசுகள். மேலும் பூம்புகார்க் காசு சோழராலும், அழகன்குளக் காசுகள் பாண்டியராலும் வெளியிடப்பட்டவை யாதல் வேண்டும். அழகன்குளக் காசுகள் கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த பாளை நிலைகளில் கிடைத்துள்ளன என்பது சி 14 என்னும் அறிவியல் முறையால் நிரூபிக்கப் பட்டுள்ளது.[3]

---

1. Dr. K.V. Raman, Presidential Address 77th Session, The Numismatic Society of India, 1990, p.4.
2. Natana. Kasinathan, Coins from Alagankulam and Padaividu excavations, Studies in South Indian Coins Vol.V. pp. 85–88.
3. Natana. Kasinathan, 'Two Copper Square Coins of Alagankulam, V Annual Conference, S,I.N.S., 1995.

பிரிவு நான்கு

# ரோமானியக் காசுகள்

தமிழகத்தில் ரோமானியக் காசுகள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று பழங்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய சேர நாடான கேரளப் பகுதியிலும், சில இடங்களில் ரோமானியக் காசுகள் கிடைத்திருக்கின்றன. கேரளத்தில், குறிப்பாக இய்யல் மற்றும் கோட்டயம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள காசுகள் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இய்யல் என்னும் ஊர் சேர நாட்டின் பண்டைத் துறைமுகங்களாகியத் தொண்டி மற்றும் முசிறி ஆகியவைகளுக்கிடையில் அமைந்துள்ளது ஆகும். இய்யலில் கிடைத்துள்ள காசுகளில் நான்கு காசுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ரோமானிய நாட்டில் நிலவிய ''ரிபப்ளிக்கன்'' காலத்தில் வெளியிடப்பட்டவை. அவை மிகவும் தேய்ந்த நிலையில் காணப்படுகின்றன. ஆனாலும் கி.மு. 123-ல் இருந்து கி.மு. 86ஐச் சார்ந்தது என்பது தெளிவு ஆகும் என்று டாக்டர் பரமேஸ்வரி லால் குப்தா தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அக்குவியலில் கிடைத்துள்ள 12 காசுகள் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவை. அதாவது கி.மு. 44-ல் இருந்து 31ஐச் சேர்ந்தவை. கேரள மாநிலத்தில் கிடைத்திருக்கின்ற அனைத்துக் காசுகளையும் பார்க்கையில் டைபீரியஸ் காலத்தில் இருந்து கிளாடியன், நீரோ, டெஸ்பாஷியன். டைட்டன், டொமினிஷியன், நெர்வா, ட்ராஜன், ஹாட்ரியன் சீசர் ஆண்டேனியஸ், பய்ஸ் ஆகியோர் காலத்தைச் சார்ந்தவைகளாகத் தெரிகிறது. அதாவது கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த ரோமானிய மன்னர்கள் காலத்துக் காசுகள் கேரளப் பகுதியான கோட்டயம், இய்யல், கும்பளம், வழுவல்லி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.[1]

---

1. Dr. T. Sathyamurthy, 'Catalogue of Roman Gold Coins', pub. 1992, preface.

தமிழகத்தில் கோவை மாவட்டம், தஞ்சை மாவட்டம், சென்னை மாவட்டம், மதுரை மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம் ஆகிய இடங்களில் ரோமானியக் காசுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளின் பட்டியல் இறுதியில் தரப் பட்டிருக்கிறது. இக்காசுகள் கி.மு. முதல் நூற்றாண்டில் ஆட்சி செய்த அகஸ்டஸ் காலம் முதல் டைபீரியஸ், க்ளாடியஸ், மார்க்ஸ், அரிலஸ், ப்யாடோஷியஸ், டொமிட்டன், டியோடி ஷியஸ், டியோக்ளாடியஸ் ஆகியோர் காலத்துக் காசுகள் ஆகும். அதாவது கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை வெளியிடப் பெற்றவை ஆகும். அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் அழகன் குளத்தில் நடத்தப் பெற்ற அகழாய்வு மூலம் மூன்று ரோமானியக்காசுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று இரண்டாம் வாலண்டியன் காலத்தைச் சார்ந்ததாகவும் மற்றொன்று டியோடிஷியஸ் காலத்ததாகவும், மூன்றாம் காசு ஆர்கேடியஸ் காலத்ததாகவும் உள்ளன. மேற்காணும் காசுகள் கி.பி. நான்காம்-ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை.[1] அண்மையில் தென்னாற்காடு மாவட்டம் திருக்கோயிலூருக்கு அருகில் உள்ள சொரையப்பட்டு என்னும் ஊரிலிருந்து தங்கப்புதையல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.[2] அதில் சுமார் 100 தங்கக்காசுகளும், சில தங்க ஆபரணங்களும் இருந்தன. அந்தக் காசுகளை ஆய்வு செய்தபோது நிரோச்சர் (கி.பி. 54-68) ஹாரியன்ஸி (கி.பி. 117-128) ஆஸ்போஸியஸ் (கி.பி. 138-161) போன்ற மன்னர்கள் காலத்துக் காசுகள் இருந்தது அறியப்பட்டது. அதாவது கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டில் ரோம் நாட்டில் ஆட்சி செய்த மன்னர்கள் காலத்தியக் காசுகள் இக்குவியலில் கிடைத்துள்ளன. மேலும் கி.மு. 69ல் ரிபப்ளிக் கனைச் சேர்ந்த பல்பஸ் (அரசு காசு வெளியிடுபவர்) என்பவ ரால் வெளியிடப்பட்ட வெள்ளிக்காசு ஒன்றினைக் கண்டுபிடித்

1. Natana. Kasinathan, Roman Coins from Alagankulam excavation, S.S.I.C. Vol. III, pp. 47-50; டியோடிஷியஸ் காலத்தைச் சார்ந்த காசை திருமதி. சீ. வசந்தி அழகன் குளத்தில் மேற்பரப்பாய்வில் கண்டெடுத்தார்.
2. Dr. R. Nagaswamy, 'Roman Karur', p. 24.

துள்ளதாகக் கிருஷ்ணகிரியில் உள்ள வரலாற்று ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.[1] அண்மையில் கோவை மாவட்டம் திருப்பூரிலிருந்து ரிபப்ளிகன் காலத்திய மற்றொரு காசை அளக்குடி ஆறுமுக சீதாராமன் கண்டுபிடித்துள்ளார். இக்காசின் காலமும் கி.மு. முதலாம் நூற்றாண்டு.[2] தமிழ்நாடு மற்றும் கேரள நாட்டில் கிடைக்கப்பெற்ற காசுகளைக் கொண்டு பார்க்கையில் தமிழ்நாட்டுடன் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டு வரை ரோம் நாடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது தெளிவாகிறது.

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டுக்கும், கிரேக்க நாட்டுக்கும் ரோமானியர் காலத்திற்கு முன்பே அதாவது கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தொடர்பு இருந்தது என்பதை டாக்டர் சன்னாஸ் என்பவர் தமது கட்டுரையான 'கிரீஸ் அண்ட் சவுத் இந்தியா' (Greece and South India) என்ற கட்டுரையில் விளக்கியிருக்கிறார்.[3] மேலும் கிரேக்க நாட்டு டாலமி, பிலடெல்பியஸ் காலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்கும் வாணிகம் பரவியிருந்தது என்பதைப் பல ஆதாரங் களுடன் நிரூபித்து இருக்கிறார். கிரேக்க நாட்டு பிலடெல்பியஸ் கி.மு. 283ல் இருந்து கி.மு. 246 வரை ஆட்சி செய்தவர், ஆதலால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்திற்கும் மேலை நாடுகளுக்கும், குறிப்பாகக் கிரேக்க நாட்டிற்கும் வாணிகத் தொடர்பு இருந்தது என்பது புலனாகிறது. இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அண்மையில் டாக்டர் விமலா பெக்லி அரிக்கமேட்டில் கிடைத்துள்ள சில பானை ஓடுகளைக் கொண்டு தமிழகத்துக்கும் ரோம் நாட்டுக்கும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே வணிக உறவு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று

---

1. Hindu, year 1992
2. தமிழகத் தொல்லியல் சான்றுகள், Vol. I, p. 17.
3. Dr. E. Lascarides - Zannas, 'Greece and South India', Proceedings of the V World Tamil Conference Seminar Vol. I, pp. 6-24, 1981.

கூறியிருக்கிறார்.[1] கரூரில் அமராவதி ஆற்றிலிருந்து சில மேல்நாட்டு நாணயங்கள் கிடைத்திருக்குன்றன. அவற்றை வகைப்படுத்தி கிரேக்க நாட்டுத் தீவுகளின் காசுகள் என்றும்,[2] போனிஷிய நாட்டுக் காசுகள் என்றும்,[3] செலூசிட் காசுகள் என்றும்[4] இரா. கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார். இவற்றில் மிகவும் பழமையானது த்ரேசிலிருந்து வெளியிடப் பட்டதாகும். இதன் காலம் கி.மு. 300 என்று குறிப் பிட்டுள்ளார். எனவே தமிழகத்திற்கும், கிரேக்க நாட்டிற்கும் வணிக உறவு கி.மு. நான்காம் நூற்றாண்டு தொடங்கி சிறந்த அளவில் விளங்கியிருக்கிறது என்பது மேலே குறிப் பிட்டுள்ள சான்றுகளால் புலனாகிறது. ஆதலால் தமிழகத்துச் சங்க இலக்கியங்களில் யவனர்களைப் பற்றி குறிப்பிடும் பாடல்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தே எழுதப் பட்டிருக்கலாம் என்றும் ஊகிக்க முடிகிறது.

தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள ரோமானியக் காசுகள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் கிடைத்துள்ளன. ஒரே ஒரு ஈயக்காசு காவிரிப்பூம் பட்டினத்தில் கிடைத்துள்ளதாக டாக்டர் கே. வி. இராமன் எழுதியுள்ளார்.[5] இருப்பினும் வெள்ளிக் காசுகள் தான் அதிக

1. Dr. Vimala Begley, 'Rome and Trade' Ceramic evidence for Pre - Periplus trade on the Indian coasts, Foot Note No. 58
2. R. Krishnamurthy, Studies in South Indian Coins Vol. V, 29-36.
3. Ibid., Vol. IV, 19-27.
4. Ibid., Vol. III, 19-28.
5. 'Numismatography of Tamilnadu', Journal of the Numismatic Society of India, Vol. XLIX, 1987, p. 205.

அளவில் கிடைத்திருக்கின்றன. குறிப்பாகக் கோவை மாவட்டப் பகுதியில்தான் இந்தக் காசுகள் அதிக அளவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இருந்தாலும் தமிழகத்தினுடைய அனைத்துப் பகுதியிலும் இக்காசுகள் புழக்கத்தில் இருந்தது என்று கூற முடியும். காரணம் சென்னை மாம்பலம் பகுதியில் இருந்து மதுரை மாவட்டப் பகுதி வரை ரோமானியக் காசுகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாலாகும். ரோமானியக் காலத்துக் காசுகள் பொருட்களை வாங்கும் மதிப்புடைய பொருளாக (கரன்சியாக) பயன்படுத்தப்பட்டதா? அல்லது அணிகலன் செய்ய மட்டும் பயன்படுத்தப்பட்டதா? என்பது காசு இயல் அறிஞர்களிடம் நிலவி வரும் ஐயப்பாடாகும். இதுவரை கிடைத்துள்ள காசு களையும், மேலும் தமிழகத்தில் இருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள பொருட்களையும் வைத்துப் பார்க்கையில் தமிழகத்தில் ரோமானியக் காசுகள் கரன்சியாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உறுதியாகிறது. சில காசுகளில் தலைப்பகுதியில் வெட்டு காணப்படுகிறது' அவ்வாறு காணப்படும் காசு மட்டும் கரன்சியாக பயன்படுத்தப் படாமல் அணிகலனுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. இவ்வாறு வெட்டு பெற்ற காசுகள் வாசிபட்ட காசுகள் என்றும், வெட்டு படாதவை 'வாசிபடா' காசுகள் என்றும் கி.பி. ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் வழங்கியுள்ளன. ரோமானியக் காசுகளுடன் அச்சுக்குத்தப் பெற்ற காசுகள் சில இடங்களில் கிடைத்துள்ளன.

இக்காசுகளுக்கும் முத்திரைக் காசுகளுக்கும் உள்ள முக்கிய வேற்றுமை,(1) இக்காசுகளில் முன்பக்கத்தில் அரசனின் உருவம் முழு அளவிலேயோ அல்லது தலைப்பகுதி மட்டுமோ காணப் பெறும். பின் பக்கத்தில் தெய்வங்களின் உருவம் நின்ற நிலையிலோ அல்லது அமர்ந்த நிலையிலோ காணப் பெறும்.(2) மன்னனின் பெயரும்; எந்த அச்சுசாலையில்

அச்சாக்கப் பெற்றது என்ற விவரமும் இக்காசுகளில் கிரேக்க மொழியிலும் எழுத்திலும் எழுதப் பெற்றிருக்கும். இவை முத்திரைக் காசுகளில் காண முடியாது. கேரளாவில் நெடுங்கண்டம் என்னுமிடத்திலிருந்து கிடைத்த காசுகளில் சில கி.மு 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று சத்தியமூர்த்தி அண்மையில் எழுதியுள்ளார்.[1]

ரோமானியக் காசு தயாரிக்கக் கூடிய பித்தளை அச்சு ஒன்று கரூரிலிருந்து தாம் சேகரித்துள்ளதாகக் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.[2]

---

1. Dr. Sathyamurthy, 'Nedun Kandam Hoard of Roman Dinarii', V Annual Conference of S.I.N.S, 1955.
2. R. Krishnamurthy, 'A Roman die from Karur, Tamil nadu', V Annual Conference of S.I.N.S. 1955.

தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் ரோமானியர் காசுகள் கிடைக்கப் பெற்ற இடம், மாவட்டம் காலம் கீழே தரப்பட்டுள்ளன.

| வ.எண் (1) | ஆண்டு (2) | ஊர் (3) | மாவட்டம் (4) | காசு எண்ணிக்கை (5) | காலம் (6) |
|---|---|---|---|---|---|
| 1. | 1945 | இய்யல் | திருச்சூர் | 117 | கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல்<br>கி.பி. 2 ,, முடிய |
| 2. | 1847 | கோட்டயம் | கோட்டயம் | 8000 | கி.மு. 1 ,, முதல்<br>கி.பி. 1 ,, முடிய |
| 3. | 1974 | கும்பளம் | எர்ணாகுளம் | 9 | கி.பி. 2 ,,<br>கி.பி. 2 ,, |
| 4. | 1983 | வலுவல்லி | எர்ணாகுளம் | 1000க்கும் மேற்பட்டவை<br>252 பெறப்பட்டன | கி.பி. 1 ,, முதல்<br>கி.பி. 2 ,, முடிய |
| 5. | 1945 | பூஞ்சர் | இடுக்கி | 1 | |
| 6. | | கோட்டயம் | கோட்டயம் | 1 | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 7. | 1843-44 | — | கோயம்புத்தூர் | | கி.பி. 1ஆம் நூற்றாண்டு |
| 8. | 1912 | — | கோயம்புத்தூர் | 2 | கி மு. 1 ,, |
| 9. | 1856-57 | கலயம்புத்தூர் | மதுரை | 63 தங்கம் | கி.பி. 1 ,, |
| 10. | 1883 | கரூர் | திருச்சி | 500 தங்கம் | கி.பி. 1 ,, |
| 11. | 1884 | கரூர் | திருச்சி | 5 தங்கம் | கி.பி. 1 ,, |
| 12. | 1904 | கரூர் | திருச்சி | — | கி.பி. 2 ,, |
| 13. | 1874 | கரூவூர் | திருச்சி | — | கி.பி. 1 ,, |
| 14. | 1883 | கரூவூர் | திருச்சி | — | கி.பி. 1 ,, |
| 15. | 1933 | கரிவலம் வந்தநல்லூர் | திருநெல்வேலி | — | கி.பி. 2 ,, |
| 16. | 1913 | கட்டாங்கன்னி | கோயம்புத்தூர் | — | கி.பி. 1 ,, |
| 17. | 1934 | குளத்துப்பாளையம் | கோயம்புத்தூர் | — | கி.பி. 4 ,, |
| 18. | 1917 | மதுரை நகரம் | மதுரை | 11 தங்கம் | கி.பி. 1 ,, |
| 19. | 1882 | மதுரை நகரம் | மதுரை | செம்பு | கி.பி. 4 ,, |
| 20. | 1894 | — | மதுரை | — | கி.பி. 1 ,, |
| 21. | 1832 | மகாபலிபுரம் | செங்கல்பட்டு | — | கி.பி. 4ஆம் நூற்றாண்டு |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | |
|---|---|---|---|---|---|---|
| 22. | 1888 | மகாபலிபுரம் | செங்கல்பட்டு | — | கி.பி. 4 | ,, |
| 23. | 1930 | மாம்பலம் | சென்னை நகரம் | — | கி.பி. 1 | ,, |
| 24. | 1888 | பெண்ணார் | கோயம்புத்தூர் | — | கி.பி. 1 | ,, |
| 25. | 1807 | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் | — | கி.பி. 1 | ,, |
| 26. | 1937 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | வெள்ளி முலாம் | கி.பி. 4 | ,, |
| 27. | 1918 | தொண்டமாநத்தம் | தென்னார்க்காடு | தங்கம் 6 | கி.பி. 1 | ,, |
| 28. | 1891 | வெள்ளலூர் | கோயம்புத்தூர் | வெள்ளி | — | |
| 29. | 1932 | வெள்ளலூர் | கோயம்புத்தூர் | i21 | கி.பி. 1 | ,, |
| 30. | 1843 | வெள்ளலூர் | கோயம்புத்தூர் | 522 | கி.பி. 1 | ,, |
| 31. | 1992 | சொரையப்பட்டு | தென்னார்க்காடு | 97 தங்கம் | கி.பி.1-2 | ,, |
| 32. | 1806 | சாவடிப்பாளையம் | கோயம்புத்தூர் | — | — | |
| 33. | 1966 | காவிரிப்பூம்பட்டினம் | தஞ்சாவூர் | 1 ஈயம் | — | |
| 34. | 1992 | கிருஷ்ணகிரி | தருமபுரி | 1 வெள்ளி | கி.மு. 1 | ,, |
| 35. | 1990 | திருப்பூர் | கோயம்புத்தூர் | 1 வெள்ளி | கி.மு. 1 | ,, |
| 36. | 1992 | நெடுங்கண்டம் | இடுக்கி | 50 வெள்ளி | கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1ஆம் நூற்றாண்டு முடிய | |

பிரிவு ஐந்து

# சாதவாகனர் காசுகள்

சங்ககாலத் தமிழருக்கும், ஆந்திர சாதவாகனர்களுக்கும் நல்ல உறவு இருந்திருக்கிறது என்பது சாதவாகனர்கள் வெளியிட்டிருக்கிற காசுகள் மூலமாகப் புலப்படுகிறது. ஆந்திராவில் சாதவாகனர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதி முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற்பகுதி வரை ஆட்சி புரிந்திருக்கின்றனர். அவர்கள் காலத்தில் பல்வகையான காசுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அக்காசுகள் பெரும்பாலும் ஈயம், செம்பு, போடின் ஆகிய உலோகங்களிலேயே காணப்படுகின்றன. ஆனால் சில முக்கிய சமயங்களில், உதாரணமாக அசுவமேத யாகம் செய்கின்ற நேரங்களில் வெள்ளியால் காசுகளை வெளியிட்டிருக்கின்றனர் என்பதும் தெரிய வந்துள்ளது.[1]

சாதவாகனர்களின் வெள்ளி மற்றும் செப்புக் காசுகள் சில தமிழகத்தில் கிடைத்துள்ளன. இக்காசுகள் தமிழகத்தோடு ஆந்திரப்பகுதிக்கு இருந்த வணிக உறவால் இங்குக் கொண்டு வரப்பெற்றிருக்கலாம்.

இவர்களின் காசுகளில் பெரும்பாலும் முன்பக்கத்தில் யானையின் உருவமும், மன்னனது பெயரும்; பின்பக்கத்தில் உஜ்ஜெயின் குறியீடும் காணப்பெறும். சில காசுகளில் ஒரு பக்கம் மன்னனது தலைப்பகுதியும், பெயர் பிராகிருத மொழியிலும், மறுபக்கம் அதே பொருள் தமிழிலும் பொறிக்கப் பட்டுள்ளது. இக்காசுகள் இதுவரை ஆந்திரப் பகுதியிலேயே கிடைத்துள்ளன. வசிட்டிபுத்ர சிரிபுலுமாவி, வசிட்டிபுத்ர

1. Dr. Ajay Mithra Sastri, 'Satavahana Silver Coinage' Studies in South Indian Coins, Vol. I p. 46.

**சிவ சிரிபுலுமாவி, வசிட்டிபுத்ர சாதகர்ணி மற்றும் கௌதமி புத்ர ஸ்ரீயஞ்ஞ சாதகர்ணி** ஆகிய நான்கு மன்னர்கள் காலத்திலும் இத்தகைய காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கூறப்பெற்ற நான்கு மன்னர்களின் காசுகளில்தான் முதன் முதல் மன்னர் தலை உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேற்கிந்திய சாத்ரபர்களின் தொடர்பால் இப்புதுமாதிரியான காசுகள் வெளியிட நேர்ந்திருக்கலாம் என்று காசு இயல் ஆராய்ச்சியாளர்கள் எண்ணுகின்றனர்.[1] சாதவாகனர்கள் ஆந்திரப் பகுதியை ஆட்சி புரிந்தவர்கள். அவர்கள் காசுகளில் ஏன் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியில் மன்னனது பெயரைப் பொறித்தார்கள் என்பது சிந்தனைக்குரியதாகும்.

ஆந்திர கர்நாடகப் பகுதிகளில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய தமிழ் மொழியும் அப்பகுதி மக்களுக்கு நன்கு அறிமுகமான மொழியாக இருந்திருக்கக்கூடும். தமிழ் நாட்டில் புழக்கத்திலிருந்த எழுத்து முறையையே ஆந்திரர்களும் கி.மு. முதலிரண்டு நூற்றாண்டுகளில் பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தியிருக்கின்றனர். அதன் அடையாளந்தான் பட்டிப்புரோலு கற்சிமிழ்க் கல்வெட்டாகும்.[2] தமிழ் நாட்டில் எவ்வகையில் தமிழ் மொழியை மாங்குளம் போன்ற குகைகளில் எழுதியிருக்கின்றார்களோ அதே முறையைத்தான் பட்டிப்புரோலு கல்வெட்டிலும் காணமுடிகிறது. ஆதலால்தான் தமிழறிந்த ஆந்திரர்களுக்குத் தமிழிலும், தமிழறியா பிற பகுதியினருக்குப் பிராகிருத மொழியிலும் தம் காசுகள் பயன்பாட்டில் இருத்தல் வேண்டுமென்று சாதவாகன மன்னர்கள் வெளியிட்டிருக்கின்றனர் போலும்.

சாதவாகனர் காசுகள் சிலவும், காசுகள் செய்வதற்குப் பயன்படுத்தப் பெற்ற வார்ப்புக் கூடுகள் சிலவும் காஞ்சிபுரத்தில்

---

1. Dr. R. Nagaswamy, 'A Bilingual Coin of a Satavahana' Seminar on Inscriptions (1966), page 202.
2. D. C. Sircar, Select Inscriptions, Vol. I, pp. 224-226, pub. (1986)

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[1] மொத்தம் ஐந்து வார்ப்புக் கூடுகளுள் மூன்று **வசிட்டிபுத்ர புலுமாவி காலத்தையும், இரண்டு வசிட்டிபுத்ர சாதகர்ணி** காலத்தையும் சார்ந்தவையாகும். வசிட்டிபுத்ர புலுமாவி காலத்ததான மூன்று வார்ப்புக் கூடுகளுள் இரண்டு சாம்பல் நிறமுடையன வாகவும் ஒன்று சிகப்பு வண்ணம் உடையதாகவும் காணப்படு கின்றன. இவ்வார்ப்புக்களின் முன்பக்கம் யானையின் உருவமும் அதைச் சுற்றி மன்னனது பெயரைத் தெரிவிக்கும் ஓரிரு எழுத்துக் களும், பின்பக்கம் 'உஜ்ஜைன்' குறியீடும் காணப்படுகின்றன.

வசிட்டிபுத்ர சாதகர்ணி காலத்தியதான இரண்டு வார்ப்புக் கூடுகளுள் முதல் வார்ப்பு அகழாய்வுக் குழியில் 5·35 மீட்டர் ஆழத்தில் கிடைத்திருக்கிறது. முன்பக்கம் இடப்பக்கம் திரும்பிய நிலையிலுள்ள யானையின் உருவமும், மன்னன்பெயரும் காணப் படுகின்றன. பின்பக்கம் என்ன உள்ளது என்று அறிய இயலா வண்ணம் மிகவும் தேய்ந்துள்ளது. இரண்டாம் கூடு 5·15 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டிலும் முதல் கூட்டில் உள்ளவாறே காணப்படுகிறது.

இவ்வார்ப்புக்களைக் கொண்டு, தமிழகத்தின் வடபகுதியி லாவது சாதவாகனர்களின் காசுகள் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டுமென திரு. இராமனும் திரு.சண்முகமும் கருதுகின்றனர். மேலும் இவை கள்ள நாணயம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று கூறப்பெற்றாலும், சாதவாகனர்களின் காசுகளின் தேவையைக் குறைத்து மதிப்பிட முடியாது என்றும் கூறியுள்ளனர்.[2] ஆந்திரப் பகுதியில் விற்பனையாகும் பொருட் களை வாங்குவதற்குத் தமிழகத்தின் வணிகர் சிலர் தாமாகவே முறையற்ற தன்மையில் அக்காசுகளைத் தயாரித்திருக்கலாம். அல்லது ஆந்திர அரசுக்காகத் தமிழகத்தில் இக்காசுகள் தயாரிக் கப்பட்டிருக்கலாம். மேற்காணும் ஆராய்ச்சியாளர்கள் குறிப் பிடுவது போன்று தமிழகத்தின் வடபகுதியான தொண்டை மண்டலப் பகுதியில் வழக்கிலும் இருந்திருக்கலாம்.

---

1. Dr. K. V. Raman and Dr. P. Shanmugam, 'Terracotta Coin moulds from Kanchipuram' Studies in South Indian Coins, Vol. I, pp. 26–28.
2. Ibid. p. 28.

பிரிவு ஆறு

# களப்பிரர் காசுகள்

சங்க காலத்தையடுத்து தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என்று ஒரு காலம் குறிக்கப்படுகிறது. இக்காலத்தை இருண்ட காலம் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். இக்காலம் கி.பி.நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய என்று கொள்ளப்படுகிறது. இக்காலத்தில் தமிழ்நாட்டு மூவேந்தர்களான சேர, சோழ பாண்டியர்கள் வலிய நிலையில் இருந்ததற்கான சான்றுகள் யாதும் கிடைக்கப் பெறவில்லை. மற்றவர்களைப் பற்றிய கல்வெட்டுக்களோ, செப்புப் பட்டயங்களோகூட இந்தக் காலக் கட்டத்தில் சில ஆண்டுகட்கு முன்புவரை குறைவாகவே கிடைத்தன. ஆதலால் இக்காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் இருண்டகாலம் என்று வருணித்தார்கள். ஆனால் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இராமநாதபுரம் மாவட்டம் பூலாங்குறிச்சி என்னும் ஊரில் கண்டுபிடித்த கல்வெட்டின்[1] மூலம் இக்காலத்தில் தமிழகம் சிறந்த நிர்வாகத்தைப் பெற்றுத் திகழ்ந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

இக்கல்வெட்டு **கோச்சேந்தன் கூற்றற்கு யாண்டு 192** என்று தொடங்குகிறது. இதில் குறிப்பிடும் மன்னன் கோச்சேந்தன் கூற்றன் எந்த குலத்தைச் சார்ந்தவன் என்பதை அறிய

---

1. இக்கல்வெட்டை து. துளசிராமன், காப்பாட்சியர் கண்டுபிடித்தார். இது பற்றிய கட்டுரையை டாக்டர் ஆர். நாகசாமி, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்குக் கட்டுரைத் தொகுப்பு 1; பக்கங்கள் 67 - 71-இல் வெளியிட்டுள்ளார்.

இயலவில்லை. இம்மன்னன் களப்பிர மன்னனாக இருக்கலாம் என்று இக்கட்டுரையின் ஆசிரியர் தம்முடைய களப்பிரர் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] தமிழ் இலக்கியத்தில் கூற்றுவ நாயனார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.[2] அந்தக் கூற்றுவ நாயனார் களப்பிர குலத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது. எனவே அந்தக் கூற்றுவ நாயனா ருடைய தந்தையாகச் சேந்தன் என்ற மன்னன் இருந்திருக் கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. சேந்தன் கூற்றன் என்பவன் இலக்கியத்தில் கூறப்படும் கூற்றுவ நாயனாராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் **அச்சுத களப்பாளன்** என்னும் ஒரு மன்னன் பூம்புகார்ப் பகுதியில் ஆட்சி செய்திருக்கிறான் என்ற ஒரு செய்தியும் பௌத்த இலக்கியம் மூலமாக நமக்குத் தெரியவருகிறது.[3] அதுமட்டுமல்லாமல் வேள்விக்குடிச் செப்புப்பட்டயத்திலும், பாண்டிய மன்னன் கடுங்கோன் என்பவன் களப்பிரர் என்னும் கலியரசனை வெற்றி பெற்றுத் தம்முடைய அரசை நிறுவினான் என்று காணப்படுகிறது.[4] களப்பிர மன்னர்கள் கி.பி. ஒன்பது - பத்தாம் நூற்றாண்டுகளில் கோவை மாவட்டப் பகுதியில் சிறு நிலப்பகுதியை ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் கல்வெட்டுக்கள் மூலம் புலனாகியுள்ளது.[5] ஆதலால் களப்பிரர்கள் தமிழகத்தை ஒரு காலக்கட்டத்தில் ஆட்சி செய் திருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது.

அம்மன்னர்கள் காலத்தில் ஏதேனும் காசு வெளியிடப் பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் சிந்தனையாக இருந்து வந்திருக்கிறது. சில ஆண்டு களுக்கு முன்பு, அதாவது 1973-இல் எஸ். இராமைய்யா

---

1. நடன. காசிநாதன், 'களப்பிரர்', பக்கம்-20.
2. திருத்தொண்டர் திருவந்தாதி-47, களப்பிரர், பக்கம் 16
3. A. P. Buddhadatta, Contemporary of Buddha Gosha, University of Ceylon Review, (1945), Vol III, No. 1.
4. பாண்டியர் செப்பேடுகள் பத்து, வேள்விக் குடிச்செப்பேடு வரிகள் : 39-46.
5. Naṭana. Kasinathan, 'Kalabhras Identified', South Indian Studies, Ed. '64, R. Nagaswamy, pp. 180-185.

என்பவர் களப்பிரர் காசுகள் என்று ஒரு கட்டுரையினை வெளியிட்டிருக்கிறார்.[1] அக்கட்டுரையில் தாம் சில களப்பிரர் காசுகளைக் கண்டுபிடித்திருப்பதாகவும், அக்காசில் **'அசுவிகந்த'** என்றும் **'களபரா**, என்றும் எழுதப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். "களபரா" என்பது "களப்பிரர்" என்பதைக் குறிக்கிறது என்று அவர் கொண்டு இவற்றைக் களப்பிரர் வெளியிட்டிருக்கலாம் என்று எழுதியிருக்கிறார். ஆனால் அவருடைய வாசகம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. அவர் வெளியிட்டிருக்கின்ற நாணயங்களின் படங்களைப் பார்க்கையில் அக்காசுகள் மிகவும் பிற்காலத்தியக் காசுகளாகக் காணப்படுகின்றன. அவற்றில் அவர் கூறியுள்ளதைப் போன்று எழுத்துக்கள் எதையும் பார்க்க முடியவில்லை.

சில ஆண்டுகளுக்குப் பிறகு டாக்டர். நாகசாமி தாம் எழுதிய **தமிழர் காசுகள்** என்ற நூலில் **வீரகேரளன்** என்று குறிக்கப் பெற்றிருக்கும் காசு களப்பிரர் காசாக இருக்கலாம் என்றும், இக்காசின் பின்புறம் காணப்பெறும் வாசகம் **கண்டராங்குஸஸ்ய**, கண்டர்களின் அங்குசன் என்ற வீரகேரளனைக் குறிப்பதால் **வீரகேரளன்** களப்பிர மன்னனாக இருக்கலாம் என்றும் எழுதியுள்ளார்.[2] அக்காசு வெள்ளிக்காசாகும். **கண்டராங்குஸஸ்ய** என்பதைக் **கண்டர்களில் அங்குசம்** என்று கொள்வதைவிட 'கண்டர்களுக்கு அங்குசம் போன்ற எதிரி' என்றும் பொருள் கொள்ளலாம். ஆதலால் இக்காசு கண்டர்களின் எதிரியான வீரகேரளன் என்ற மன்னனால் வெளியிடப்பட்டிருப்பது என்று கொள்வது பொருத்தமுடையதாகத் தெரிகிறது. இக்காசு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் சில பகுதிகளை வெற்றி பெற்று ஆட்சிபுரிந்த சேர மன்னன் இரவிவர்மன் குலசேகரன் என்னும் வீரகேரளன்

---

1. S. Ramayya, 'The Kalabhras and their Coinage', The Journal of the Numismatic Society, Vol. XXXV, (1973) pp. 142-154.
2. Dr. R. Nagaswamy, Tamil Coins, pp. 15-16.

காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று வசந்த கல்யாணி கருதுகிறார்.[1] ஆதலால் இந்தக் காசுகளையும் களப்பிரர் வெளியிட்ட காசுகளாகக் கொள்ள இயலவில்லை.

அண்மைக் காலத்தில் கிருஷ்ணமூர்த்தி தாம் ஒரு களப்பிரர் காசைக் கண்டுபிடித்திருப்பதாகவும், அதில் களப்பிரர் என்று பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருப்பதாகவும் கூறி அந்தக் காசின் படத்தையும் வெளியிட்டிருக்கிறார்.[2] அதன் வாசகத்தைக் களப்பிரர் என்று படிக்க இயலவில்லை. அதில் அவர் கூறும் எழுத்துக்கள் வெறும் குறியீடுகளாகவே காணப் படுகின்றன. அவை எழுத்துக்களாகத் தோன்றவில்லை. ஆதலால் களப்பிரர் காசு என்று வெளி வந்திருப்பவை அனைத்தும் நம்பக் கூடியதாக இல்லை. திருச்சி மாவட்டம் கரூரில் பல மன்னர்கள் காலத்திய காசுகள் கிடைத்திருக் கின்றன. ஆனாலும் அங்குகூட களப்பிர மன்னர்கள் காசு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே களப்பிர மன்னர்கள் தமிழகத்தில் சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த காசுகளையே தாங்களும் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்றே ஊகிக்கத் தோன்றுகிறது.

---

1. வீரகேரளன் காசு, 'கல்வெட்டு' காலாண்டிதழ், எண் 29 மற்றும் 30.
2. News Today, Madras Edition, 18-6-1985; 'Kalabhra Coin with a legend', The Journal of the Numismatic Society of India, Vol. XLVIII, (1986), p. 48.

பிரிவு ஏழு

# சீனர் காசுகள்

சீனாவுக்கும், தமிழகத்துக்கும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து வணிக உறவு நிலவியிருக்கிறது என்பது சீன நாட்டுக் குறிப்புக்களினால் தெரியவருகிறது.

கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்று கொள்ளப்படுகிற **பான் கூ** என்னும் சீன எழுத்தாளர் **'இட்சியன் ஹான் சூ'** என்ற தம்முடைய நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''ஜெனான் என்னும் நாட்டின் எல்லையிலிருந்து சியுவென், ஹோ-பூ என்னும் இடங்களிலிருந்து மரக்கலத்தில் ஐந்து மாதம் பயணம் செய்த பின்னர், நாம் டோன் யுவான் என்னும் இராஜ்யத்தை அடைகிறோம். அதன் பின்னர் இருபது நாள் பயணஞ் செய்தால் நாம் சென்-லி என்னும் இராஜ்யத்தை அடையலாம். அங்கிருந்து பூ-கான்-டு-லூ என்னும் இராஜ்யத்தை அடைவதற்குத் தரை வழியாகப் பத்து நாளைக்கு மேற் பயணம் செய்ய வேண்டும். பின்னர் இரண்டு மாதத்திற்கு மேல் மரக்கலத்தில் பயணஞ் செய்தால் **'ஹூவாங்ட்சே'** என்னும் இராஜ்யத்தை அடையலாம். அந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் பொதுவாக **ட்-சூயை** நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை ஒத்திருக்கின்றன. அந்த நாடுகள் எல்லாம் மிகவும் பரந்தவை. அங்கு மக்கள் நெருக்கம் அதிகமாய் இருக்கிறது. அங்கு நாம் **கண்டிராத** விசித்திரமான பொருள்கள் உற்பத்தியாகின்றன பேரரசர் **வூவின்** காலந்தொட்டு *(கி.மு. 140-86)* அந்த நாடுகள் எல்லாம் சீனாவுக்குத் திறை செலுத்தி வருகின்றன.'[1]

---

1. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, 'தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்' (1976) ப. 73-74.

இக்குறிப்புக்களைத் திறனாய்வு செய்த பெல்லியட் என்னும் அறிஞர் கீழ் வருமாறு தம் கருத்தைத் தெரிவித்துள்ளார்.[1]

"இந்தப் பயணம் இந்தோ சீனாவின் கரையிலிருந்த ஊர்களிலிருந்து தொடங்கி ஓராண்டுக்குப் பின் முடிகிறது. (பயணத்தின் இறுதியில் சீனர்கள் அடைகின்ற நாட்டில் முத்தும், கண்ணாடியும் கிடைக்கின்றன). அதனால் அந்த நாடு இந்துமாக் கடலின் மையத்தில் இருந்திருக்கக் கூடும். ஹுவாங்-ட்சே என்பது அபிசீனியாவில் இருந்த ஓர் இடமென்று ஹெர்மன் கருதுகிறார். அது மலேயாவில் இருந்த இடமென்று லாபர் கருதுகிறார். இவ்விரு கருத்துக்களையும் பெரண்டு (Ferrand) ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். அம்மறுப்பு நியாயமாகத் தோன்றுகிறது. அவர் கருத்தை இப்போது காண்போம். "ஒலியியல் அடிப்படையில் ஹுவாங்-ட்சே என்பதைக் காஞ்சி என்று கொள்ளலாம். ஹான் காலத்திற்கு அது பொருத்தமாய் இருக்கிறது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், சீனாவுக்கும் காஞ்சிக்கும் தொடர்பு இருந்தது என்பது வரலாற்று உண்மையாய் இருக்கக் கூடும்" என்று பெரண்டு கருதுகிறார்."[2]

மேற்கூறப் பெற்ற கருத்துக்களிலிருந்து கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவிலேயே தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்துக்கும் சீன நாட்டுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் அண்மையில் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனக் காசுகள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்திலிருந்து மூன்று முறை சீனக் காசுகளின் புதையல் கிடைத்திருக்கிறது. முதல் புதையல் பட்டுக்கோட்டை வட்டம் **விக்ரம்** என்ற ஊரிலிருந்தும், இரண்டாம் புதையல் மன்னார்குடி வட்டம் **தல்லிக்கோட்டை** என்ற

---

1. Pelliot in Toung Pao, xiii (1912) p. 457-9 of JA. 11:13, pp. 451-5.
2. ஜேஏ:11:14 ப. 45-6.

ஊரிலிருந்தும், மூன்றாம் புதையல் பட்டுக்கோட்டை வட்டம் ஓலயக்குன்னம் என்ற ஊரிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. முதல் புதையலில் 20 காசுகள் கிடைத்துள்ளன. அவை கி.பி. 713-க்கும் கி.பி. 1241-க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களாகும். இரண்டாம் புதையலில் 1822 காசுகள் இருந்திருக்கின்றன. இவை கி.பி. 1260லிருந்து 1268 முடிய உள்ள காலத்தைச் சார்ந்தவையாகும். மூன்றாம் புதையல் மிகமிக முக்கியமானதாகும். இப்புதையலில் 323 காசுகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கி.மு, 142 மற்றும் கி.மு. 126 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட காசுகளும் அடங்கியிருக்கின்றன. இவையனைத்தும் தற்போது சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் வைத்து பாதுகாக்கப் பட்டு வருகின்றன இவை பற்றி இவ்வருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் சங்கரநாராயணா ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.[1] மேற்குறிப்பிட்ட காசுகளை அவர் கல்கத்தாவுக்கு அருகிலுள்ள சாந்திநிகேதனத்தின் விஸ்வபாரதி சைனா பவனில் இருந்த பேராசிரியர் தன் யுன் ஷாவ் மற்றும் அவரது துணைவியார் ஆகியோருக்கு அனுப்பி அவர்கள் மூலம் அவற்றின் காலங்களைக் கண்டறிந்திருக்கிறார்.[2] அவர்கள் இக் காசுகளைக் காலவாரியாகவும் பட்டியலிட்டுத் தந்துள்ளனர். அப்பட்டியல் (ஆங்கிலத்தில் உள்ளவாறே) இறுதியில் தரப் பட்டுள்ளது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முடிய வழக்கில் இருந்த சீனக்காசுகள் இப்பட்டியலில் காணப்படுகின்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்குச் சமயப் பயணம் மேற்கொண்ட சீனப் பயணி ஹியூன் சுவாங் தமிழ் நாட்டுக்கும் வந்து, அப்பொழுது தமிழ்நாட்டில் இருந்த பௌத்தத் தூபிக்களைப் பற்றி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். காஞ்சிபுரத்தில் அசோகச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட நூறு அடி உயரம் உள்ள பௌத்த ஸ்தூபி இருந்ததையும்,

---

1. "Three Hoards of Chinese Coins in Madras Government Museum", Journal of Numismatic Society of India Vol. XXXIII (1971) Part II pp. 61-68.
2. Ibid., p. 64.

சோழ நாட்டிலே அசோகச் சக்கரவர்த்தி கட்டிய ஒரு பௌத்த விகாரை இருந்ததையும் இவர் குறிப்பிடுகிறார். அன்றியும் பாண்டி நாட்டின் தலைநகருக்கு (மதுரைக்கு) அருகிலே அசோகச் சக்கரவர்த்தியின் தம்பியாகிய மகேந்திரரால் கட்டப் பட்ட ஒரு சங்காராமம் (பௌத்த விகாரை) இருந்ததாகவும், அதற்குக் கிழக்கே அசோக மன்னரால் கட்டப்பட்ட ஒரு ஸ்தூபி இருந்ததாகவும் இவையிரண்டும் ஹ்யூன் சுவாங் காலத் தில் இடிந்து சிதைந்து புல் பூண்டு முளைத்துக் காணப் பட்டன என்றும் இவர் குறிப்பிடுகிறார்.''[1]

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சீன மன்னன் வேண்டு கோளுக்கிணங்கி சீன வணிகர்களுக்காகப் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன், நாகப்பட்டினத்தில் புத்த ஸ்தூபி ஒன்றை அமைத்தான் என்று அறிய முடிகிறது. பிற்காலத்தில் இக்கோயில் **சீனா கோயில்** என்று அழைக்கப் பெற்றது. வெனிசு நாட்டிலிருந்து சீன நாட்டுக்குப் பயணம் சென்ற **மார்க்கோபோலோ** நாகப்பட்டினத்தில் **சீனா கோயில்** என்னும் பெயருள்ள ஒரு கோயில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.[2]

சோழர்கள் ஆட்சியின் போது தமிழகத்திலிருந்து சீன நாட்டுக்கும், சீன நாட்டிலிருந்து சோழ நாட்டுக்கும், வணிகர் களும் தூதுவர்களும் சென்றும், வந்தும் இருக்கின்றனர் என்பது சீன நாட்டுப் பயணியர் குறிப்புக்களால் புலனாகிறது.

ஆதலால் அக்காலத்திய சீன நாட்டுக் காசுகளும், பானை ஓடுகளும் தமிழகத்தில் கணிசமான அளவில் கிடைத்து வரு கின்றன. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை கொற்கையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் நிகழ்த்திய அகழாய்வுகளின் போது சீன நாட்டுப் பீங்கான் ஓடுகள் கிடைத்தன. இவ்வோடுகள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல்

1. Beal Records of the Western World ii, p. 231; மயிலை சீனிவேங்கடசாமி, பௌத்தமும் தமிழும் (1980) பக்கம் 24.
2. மயிலை சீனிவேங்கடசாமி, 'பௌத்தமும், தமிழும்' ப.47'

13-ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தைச் சார்ந்தவை என்று அறிய முடிகிறது.[1] காயிதே மில்லத் மாவட்டம் தரங்கம்பாடியிலிருந்தும், இராமநாதபுரம் மாவட்டம் பெரியப் பட்டினத்திலிருந்தும் முறையே சீன நாட்டுக் குடுவையும் பானை ஓடுகளும் கிடைத்திருக்கின்றன. தரங்கம்பாடியில் கிடைத்திருப்பது கி.பி. பத்தாம் நூற்றாண்டையும்[2] பெரியப் பட்டினத்தில் கிடைத்திருப்பது கி.பி. 13-14ஆம் நூற்றாண் டையும் சார்ந்தவையாகும்.[3] புதுவை மாநிலம் அரிக்கமேட் டிலும் இத்தகைய பானை ஓடுகள் கிடைத்திருக்கின்றன.[4]

தரங்கம்பாடி அகழ் வைப்பகக் காப்பாட்சியராக இருந்த அ. இராசேந்திரன் மூன்று சீனக் காசுகளைச் சேகரித்து, இந்நூல் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார். அக்காசுகள் யார் காலத்தில் வெளியிடப்பட்டவை என்று அறியும் பொருட்டு டெல்லியில் உள்ள சீன நாட்டுத் தூதுவர் அலுவலகத்துக்கு அக்காசுகளின் நிழற் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றை ஆய்ந்து கீழ்க்காணும் தகவலை அத்தூதுவரகம் தெரிவித்துள்ளது.

"அளவில் பெரிய சீனக்காசு கி.பி. 1224-1236ஆம் ஆண்டு களுக்கு இடைப்பட்டது என்றும், இதில் ரீயுபின் டாங்க்போ (Ruipin-tongbao) என்று சீன மொழியில் எழுதப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். இதில் உள்ள ரீயுபின் (Ruipin) என்ற சீனமொழிச் சொல் 'மங்களகரமான' அல்லது 'அமைதி யான' என்ற பொருளையும் டாங்க்போ (Tongbao) என்பது 'பணம்' என்ற பொருளையும் தருகிறது. எனவே மங்களகர மான - அமைதியான பணம் என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது ஜின் (Jin) வம்சத்தினைச் சார்ந்தது.

1. Karashima. Noboru, "Trade relations between South India and China during the 13th and 14th centuries", Journal of East-West Maritime Relations, Vol. I, p. 62 (Pub. 1989)
2. Natana. Kasinathan, 'Achievements of Archaeology Department', Pub. 1994, Annexure-I, p. VI.
3. Karashima. Noboru, *op.cit.*, p. 63.
4. Ancient India, Bulletin of A.S,I, Vol. 2, 1946, pp. 17-124.

சிறிய அளவிலான காசுகள் மிங் (Ming) வம்சத்தினைச் சார்ந்தவையாகும், சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இக் காசில் பேரரசரின் பெயரான 'காங்ஸென்' என்பதோடு (Congzhen) 'பணம்' என்ற பொருள் தரும் டாங்க்போ என்ற சொல்லும் இணைந்து (Congzhen Tongbao) காங்ஸென் பணம் எனப் பொறிக்கப்பட்டுள்ளது. (இதன் காலம் கி.பி. 1628-1644).

மற்றொரு சீனக்காசும் (கி.பி. 1674-1676) மிங் வம்சத் தினைச் சார்ந்தது. இதில் 'யுமின் டாங்க்போ' (Yumin Tongbao) என்று காணமுடிகிறது. 'வளம் தரும்' என்ற பொருள் தரும் முதற்சொல்லும், 'பணம்' என்ற பொருள் தரும் இரண்டாம் சொல்லும் இணைந்து மக்களை வளமையாக்கும் பணம் என்று பொறிக்கப்பட்டுள்ளது."

மேற்காணும் காசுகள் தமிழகக் கடற்கரையோரப் பட்டினத்தில் கிடைத்துள்ளதால் சீனத்திற்கும், தமிழகத்துக்கும் பண்டைய காலந்தொட்டே இருந்து வந்த பண்பாட்டு வணிக உறவு கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு முடிய தொடர்ந்து நிலவி வந்ததை உணர்த்துவனவாயுள்ளன. சீனத் தூதுவரகம் அனுப்பியுள்ள குறிப்பில் உள்ளவாறே ஆங்கிலத்தில் கீழே தரப்பட்டுள்ளது.

A) read as 'RUIPIN TONGBAO' made in Jin Dynasty between (A.D. 1224-1236).
B) read as 'CONGZHEN TONGBAO' made in Ming Dynasty between (A.D. 1628-1644).
C) read as 'YUMIN TONGBAO' made in Ming Dynasty between (A.D. 1674-1676).

*Note* : 'Ruipin means to be auspicious and peaceful'
'Congzhen named after the emperor'
'Yumin means to enrich the people'
'Tongbao means money'

நாகை காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள தேரெழுந்தூரிலிருந்து நல்ல நிலையில் உள்ள சீனக் காசுகள் மூன்றும், சிதைந்த நிலையில் உள்ள சீனக் காசு

துண்டுகளும் மற்றும் ஒரு சிறிய வெண்கல மணியும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஆறுமுக சீதாராமன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்[1] இக்காசுகள் யார் காலத்தில் வெளியிடப் பெற்றவை என்பதை அவர் குறிக்கவில்லை. ஆனால் வெண்கல மணியில் காணப்பெறும் சீன எழுத்துக்கள் கி.பி. 11-12ஆம் நூற்றாண்டு எழுத்து வரி வடிவத்தில் உள்ளவையாக இருக்கலாம் என்றும், எழுத்துக்களின் பொருள் 'சாந்தி, சாந்தி' என்பதாகும் என்றும் ஜப்பான் நாட்டு டோக்கியோ பல்கலைக்கழகப் பேராசிரியை திருமதி மியோ கிஷிமோடோ என்பார் தெரிவித்திருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறார்.

மேலும் 1886-ல் வெளியிடப்பட்ட எல்லியட்டினுடைய அறிக்கையில் கடலூருக்கும் நெல்லூருக்கும் இடைப்பட்ட சோழ மண்டலக் கடற்கரையில் துளையோடு கூடிய சீனக் காசுகள் கிடைத்துள்ளதெனவும்; 1894-ல் எழுதப் பெற்ற தர்ஸ்டன் அறிக்கையில் மதுரையில் ரோமானியர் செப்புக் காசுகளோடு ஒரு சீனக்காசு கண்டெடுக்கப்பட்டதாகவும் காண முடிகிறது.[2]

மேலை நாடான ரோம் நாட்டுக் காசுகளும் கீழை நாடான சீன நாட்டுக் காசுகளும் தமிழகத்தில் கிடைத்து வருகையில், தமிழ்நாட்டின் பண்டையக் காசுகள் ஏன் அந்நாடுகளில் கிடைக்கப் பெறவில்லை என்ற ஒரு கேள்விக்குறி வரலாற்றாசிரியர்கள் மத்தியில் இருந்து வந்தது. அக்கேள்விக்கு விடை கிடைக்கும் வகையில் அண்மையில் கீழை நாடான தாய்லாந்தில் குவான் லுக் பட் என்னுமிடத்திலிருந்து சங்ககாலத்தைச் சார்ந்த ஒரு சதுர செப்புக்காசு கிடைத்திருக்கிறது. இக்காசில் ஒரு பக்கம் யானை இடப்பக்கம் திரும்பிய நிலையிலும், யானைக்கு முன்பாக இரதமும் குதிரையும் காணப்படுகின்றன.

---

1. தமிழகத்துத் தொல்லியல் சான்றுகள், தொகுதி 1, பக்கம் 21, தினமணி, 12-9-91 (சென்னைப் பதிப்பு).
2. Michael Mitchiner, 'The interpretation of foreign Coins found in Southern most India through the ancient to medieval period, Indian Institute of Research in Numismatic studies, Nasik.

மறுபக்கம் சோழர் சின்னமான புலி தம் வலக்காலைத் தூக்கிய நிலையில் இடப்பக்கம் திரும்பி நிற்கிறது. இக்காசு இரண்டு செ.மீ. அளவில் சதுர வடிவில் உள்ளது

இக்காசு கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையான பாள நிலையிலிருந்து அகழாய்வில் கிடைத்துள்ளதாக டாக்டர் சண்முகம் தெரிவிக்கிறார். மேலும் இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளார்.[1] கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் பாள நிலையாக இருப்பதால் கி.மு. முதல் நூற்றாண்டிலேயே இக்காசு அங்கு வணிகர்களால் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். மேலும் இக்காசு தேய்ந்த நிலையில் காணப்படுவதால், கி.மு. முதல் நூற்றாண்டுக்கு முன்பேயே அது புழக்கத்தில் இருந்திருக்கலாம். ஆதலால் இந்நூலாசிரியர் இந்நூலில் வேறு இடத்தில் கூறியுள்ளபடி. இத்தகைய காசுகள் கி மு. நான்காம்-மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கருதலாம்.[2]

---

1. Two Coins of Tamil origin from Thailand, Studies in South Indian Coins, Vol. IV, pp. 95-96.
2. சங்ககாலக் காசுகள், பிரிவு மூன்று, பக்கம். 16–19.

| Category (1) | Name of the Coin (2) | Date of Coinage (3) | Period of circulation (4) |
|---|---|---|---|
| 1. | San-Chu (Three Chu)[1] | B.C. 142 | B.C. 142-125. |
| 2. | Wu-Chu (Five Chu) | First issued by the Han Emperor Wu in B.C. 126 and later by the subse-quent rulers of Han, Wei, Tsin, Ch'en, Hou-Wei, Pei-Ch'i, Hou-Chou etc. | B.C. 126-620 A.D. |
| 3. | K'ai-Yuan-t 'ung - Pao (Treasure of the K'ai-Yuan etc.) | 621 A.D. | 621-665 A.D. |
| 4. | Sung-Yuan t'ung -Pao (Treasure of Sung dynasty) | 960 „ | 960-975 „ |

1. A Chu is twenty fourth part of a tael, equivalent to the weight of one hundred grains of millet.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | T'ai-Ping T'ung Pao<br>(Treasure of the T'ai-P'ing era) | 976 A.D. | 976-983 A.D. |
| 6. | Ch'un-hua Yuan-Pao<br>(Treasure of the Ch'un Hua era) | 990 ,, | 990-994 ,, |
| 7. | Chih-tao-Yuan - Pao<br>(Treasure of the Chih-tao era) | 995 ,, | 995-997 ,, |
| 8. | Hsien-P'ing-Yuan-Pao<br>(Treasure of the Hsien-P'ing era) | 998 ,, | 998-1003 ,, |
| 9. | Ching-leh-Yuan-Pao<br>(Treasure of the Ching-leh era) | 1004 ,, | 1004-1007 ,, |
| 10. | Hsiang-fu-Yuan-Pao<br>(Treasure of the Hsiang-fu era) | 1008 ,, | 1008-1010 ,, |
| 11. | T'ien-hsi t'ung-Pao<br>(Treasure of the T'ien-hsi era) | 1017 ,, | 1017-1021 ,, |
| 12. | T'ien-Sheng Yuan Pao<br>(Treasure of the T'ien-Sheng era) | 1017 ,, | 1017-1021 ,, |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 13. | Ming-tao Yuan-Pao<br>(Treasure of Ming Tao era) | 1032 A.D. | 1032-1033 A.D. |
| 14. | Ching-Yu- Yuan Pao<br>(Treasure of Ching-Yu era) | 1034 ,, | 1034-1037 ,, |
| 15. | Huang Sung-T'ung Pao<br>(Treasure of the Imperial Sung dynasty) | 1023 ,, | 1023-1040 ,, |
| 16. | Chih-ho Yuan Pao<br>(Treasure of the Chih-ho era) | 1054 ,, | 1054-1055 ,, |
| 17. | Chia-Yu-Yuan-Pao<br>(Treasure of the Chia-Yu era) | 1056 ,, | 1055-1063 ,, |
| 18. | Chih P'ing Yuan-Pao<br>(Treasure of the Chih P'ing era) | 1064 ,, | 1064-1067 ,, |
| 19. | Hsi-ning Yuan-Pao<br>(Treasure of the Hsi-ning era)<br>Hsi-ning Chung-Pao<br>(Heavy treasure of the Hsi-ning era) | 1068 ,, | 1068-1077 ,, |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 20. | Yuan-teng-t'ung Pao<br>(Treasure of the Yuan teng era) | 1078 A.D. | 1078-1085 A.D. |
| 21. | Yuan Yu t'ung Pao<br>(Treasure of the Yuan Yu era) | 1086 ,, | 1086-1093 ,, |
| 22. | Shao-Sheng Yuan-Pao<br>(Treasure of the Shao-Sheng era) | 1094 ,, | 1094-1097 ,, |
| 23. | Yuan-fu t'ung-Pao<br>(Treasure of the Yuan-fu era) | 1098 ,, | 1098-1100 ,, |
| 24. | Sheng-Sung Yuan Pao<br>(Treasure of the sacred Sung dynasty) | 1101 ,, | 1101-1102 ,, |
| 25. | Ta Kuan-t'ung Pao<br>(Treasure of the Ta Kuan era) | 1107 ,, | 1107-1110 ,, |
| 26. | Cheng-ho t'ung Pao<br>(Treasure of the Cheng-ho era) | 1111 ,, | 1111-1117 ,, |
| 27. | Hsuan-ho t'ung-Pao<br>(Treasure of the Hsuan-ho era) | 1119 ,, | 1119-1125 ,, |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 28. | Chien-yen t'ung Pao<br>(Treasure of the Hsuan-ho era) | 1127 A.D. | 1127-1130 A.D. |
| 29. | Shao-hsing Yuan-Pao<br>(Treasure of the Shao-hsing era)<br>Shao-hsing t'ung-Pao<br>(Treasure of the Shao-hsing era) | 1131 ,, | 1131-1162 ,, |
| 30. | Ch'un-hsi Yuan-Pao<br>(Treasure of the Ch'un-hsi era) | 1174 ,, | 1174-1189 ,, |
| 31. | Shao-hsi Yuan-Pao<br>(Treasure of the Shao-hsi era) | 1190 ,, | 1190-1194 ,, |
| 32. | Ch'ing-yuan t'ung-Pao<br>(Treasure of the Ch'ing-yuan era) | 1195 ,, | 1195-1200 ,, |
| 33. | Chia-t'ai t'ung-Pao<br>(Treasure of the Chia-t'ai era) | 1201 ,, | 1201-1204 ,, |
| 34. | K'ai-hsi T 'ung-Pao<br>(Treasure of the K'ai-hsi era) | 1205 ,, | 1205-1207 ,, |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 35. | Chia-ting t'ung Pao<br>(Treasure of the Chia-ting era) | 1208 A.D. | 1208-1224 A.D. |
| 36. | Shao-ting Pung-Pao<br>(Treasure of the Shao-ting era) | 1228 ,, | 1228-1233 ,, |
| 37. | Ch'un-yu Yuan-Pao<br>(Treasure of the Ch'un-yu era) | 1241 ,, | 1241-1252 ,, |

பிரிவு எட்டு

# பல்லவர் காசுகள்

களப்பிர மன்னர்களை அடுத்துத் தமிழகத்தின் வடபகுதியில் பல்லவ மன்னர்கள் சிறந்த நிர்வாகம் செய்யத் தலைப்பட்டிருக்கின்றனர். கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அவர்கள் காலத்தியச் செப்புப்பட்டயங்கள் கிடைத்துள்ளன. ஆனால் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தான் அவர்களது செப்புப்பட்டயங்களில் ஒரு பகுதியைத் தமிழ் எழுத்தில் காண முடிகிறது. இவற்றைக்கொண்டு பார்க்கையில் இப்பல்லவ மன்னர்கள் ஆந்திரப் பகுதியில் இருந்துதான் அதாவது நர்கார்ஜுனகொண்டா, அமராவதிப் பகுதியில் இருந்துதான் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

ஆனால் தமிழ் இலக்கியம் தொண்டைமான் இளந்திரையன் என்பான் காஞ்சிபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு சங்க காலத்திலேயே ஆட்சி செய்திருக்கிறான் என்று குறிப்பிடுகிறது அத்தொண்டைமான்களுக்கும், பல்லவர்களுக்கும் தொடர்பு உண்டா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. ஆனால் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு மேற்பட்ட பல்லவர் காலத்துச் செப்புப்பட்டயங்களிலே தங்களுடைய முன்னோர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், பல்லவக் கொடியால் சுற்றிக் கடலில் கரை சேர்ந்த ஒரு குழந்தையைப் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது. அதற்கும் தொண்டைமான் இளந்திரையன் கதைக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் முற்காலத்திய பல்லவர்களுக்கும் தமிழகத்துத் தொண்டைமான் இளந்திரையனுக்கும் நேரிடைத் தொடர்பு இருந்ததற்கான சான்றுகள் யாதும் கிடைக்கப் பெறவில்லை. ஆதலால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பல்லவர்கள் பெரும்பாலும் ஆந்திரப் பகுதி

யிலிருந்து வந்தவர்களாகவே கருத முடிகிறது. ஏனெனில் அவர்கள் வெளியிட்ட செப்புப் பட்டயங்களில் குறிப்பிடும் கொடையளிக்கப் பெற்ற இடங்கள் கூட ஆந்திரப் பகுதியில் உள்ளவையாகத்தான் காணப்படுகின்றன. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆட்சி செய்த பல்லவர்கள் தமிழகப் பண்பாட்டோடு ஒன்றிவிட்ட காரணத்தால் செப்புப் பட்டயங்களில் தமிழைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் கிராமப் பகுதிகளில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் எல்லாம் தூய தமிழ் மொழியிலும், வட்டெழுத்திலும் காணப்படுகின்றன. ஆனால் அதே காலத்தில் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் சமஸ்கிருதத்திலும், கிரந்த எழுத்திலும், பொறிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அவர்களது அரசு மொழியாகச் சமஸ்கிருதம் தான் இருந்திருக்கும் போன்று தெரிகிறது. அதே நேரத்தில் தமிழ்மொழியையும் அவர்கள் புறக்கணிக்கவில்லை என்பது உணரற்பாலது. அவர்கள் ஆட்சி செய்த கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு முடிய தமிழ் இலக்கியங்களும் சிறந்த வளர்ச்சி பெற்றிருந்தன. குறிப்பாக நாயன்மார்களும், ஆழ்வார்களும் வாழ்ந்த காலமும் இந்தக் காலமேயாகும். அவர்களால் பாடப்பெற்ற தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தும் தூய தமிழில் பொருள் செறிவு மிக்கதாக எழுதப்பட்டுள்ளன. எனவே அவர்கள் தமிழுக்கும் உயர்வு கொடுத்து அதனையும் ஊக்குவித்திருக்கிறார்கள் என்பது இதன்மூலம் புலனாகிறது.

அவர்கள் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகளாக இது வரை சில காசுகளே கிடைத்திருக்கின்றன.

சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பல்லவர் காலக் காசுகள் மிகவும் குறைந்த அளவிலேயே தெரிய வந்திருந்தன. டாக்டர் ஹூல்ஷ் என்பவரால் படித்து வெளியுலகுக்குத் தெரிவிக்கப்பட்ட ஸ்ரீபர, ஸ்ரீநிதி, மானபர என்று எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள காசுகள், அவற்றுள் முக்கியமானவை. ஸ்ரீபர என்பது மகேந்திரவர்மப் பல்லவனின் பட்டப் பெயராகும். ஸ்ரீநிதி என்பது இராஜசிம்மனின் பட்டப் பெயர். 'மானபரன்', தெள்ளாறெறிந்த நந்திவர்மனாகிய மூன்றாம் நந்திவர்மனின்

பட்டப் பெயர். ஆதலால் கி.பி. ஆறாம் - ஏழாம் நூற்றாண்டு களில் ஆட்சி செய்த மகேந்திரவர்மன், எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இராஜசிம்மன், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் காலக் காசுகள் கிடைத்துள்ளன.[1]

பல்லவர் காலத்திய வேறு சில காசுகளும் கிடைத்துள்ளன. அவற்றில் ஒரு புறம் காளை, மற்றொரு புறம் இரண்டு பாய் மரங்களோடு கூடிய கப்பல் உருவங்களையும், சிலவற்றில் ஸ்வஸ்திகா, விளக்கு, சக்கரம், வில், மீன், குடை, சைத்யம் குதிரை, சிம்மம், சங்கு, குடம், வேலியினுள் மரம் ஆகிய உரு வங்களில் யாதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதும் காணப்பெறும். இக்காசுகள் செம்பு அல்லது வெள்ளியினால் மட்டுமே உருவாக்கப் பெற்றவை. கிழக்காசிய நாடுகளில் இந்திய நாட்டின் பண்பாட்டு மற்றும் வர்த்தகத் தொடர்பை ஆய்வதற்காக டாக்டர் நொபுரு கராஷிமா தலைமையில் தாய்லாந்து சென்ற குழுவினர் தமிழ்நாட்டைச் சார்ந்த இரு காசுகளை அங்கு கண்டறிந்தனர்.[2] ஒன்று சங்க காலச் சோழர் காசு, மற்றொன்று பல்லவர் காலக் காசு. பல்லவர் காசு 1·5 சென்டிமீட்டர் விட்டம் உடையது. இக்காசில் முன்பக்கத்தில் நிற்கும் காளை உருவமும், பின்பக்கம் இரு பாய் மரங்களை யுடைய கப்பல் உருவமும் காணப்படுகின்றன. இக்காசில் எழுத்துக்கள் யாதும் இல்லை.

அண்மைக் காலங்களில் அகழாய்வின் மூலமும், எதிர்பாராக் கண்டுபிடிப்புக்கள் மூலமும் பல்லவர் காலத்திய சில புது வகையான காசுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பழமையானவை ஒரு புறம் நிற்கும் காளை உருவமும், மற்றொரு புறம் குடமும், வேலியினுள் மரமும் உடைய காசுகளாகும். இவை ஈயத்தால் செய்யப் பெற்றவை.

---

1. Sir T. Desikachari, South Indian Coins (Reprint 1984) p. 35; Tamil Coins - a study, p. 126.
2. Dr. P. Shanmugam, Two Coins of Tamil Origin from Thailand, S.S.I.C., Vol. VI, pp. 95-96.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை 1970-க்கும் 1976க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் காஞ்சி புரத்தில் மேற்கொண்ட அகழாய்வு மூலம் முற்காலப் பல்லவர் காலத்தில் காசுவார்ப்புக் கருவிகள் மூன்றினைக் கண்டு பிடித்துள்ளது.[1] மத்திய அரசு தொல்பொருளியல் துறையின் தென்வட்டம் காஞ்சிபுரத்தில் 1962ல் நடத்திய அகழாய்வில் எட்டு ஈயக் காசுகளை வெளிக்கொணர்ந்துள்ளது.[2] இக்காசு களில் ஒருபுறம் திமிலுடன் கூடிய நிற்கும் காளை உருவமும் காளைக்கு மேற்பகுதியில் ஸ்ரீவத்ஸம் அல்லது நந்திபாதமும் பின்புறம் தாமரை மலர் அல்லது யாதோ ஒரு குறியீடும் காணப் படுகின்றன. இக்காசுகளின் காலம் கி.பி. ஐந்தாம் - ஆறாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்கள். அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை சென்னையின் ஒரு பகுதியாகவுள்ள திருவான்மியூரில் பல்லவர்கால ஈயக்காசு ஒன்றைக் கண்டறிந்துள்ளது.[3] இக் காசிலும் ஒருபுறம் திமிலுடன் கூடிய நிற்கும் காளை உருவ மும், மறுபுறம் குடம் மற்றும் வேலியினுள் மரமும் காணப் படுகின்றன. இதன் காலமும் கி.பி. ஐந்தாம் - ஆறாம் நூற் றாண்டாகக் கருதப்படுகிறது.[4]

எழுத்துக்களோடு கூடிய வேறு சில பல்லவர் காலக் காசு களும் தெரிய வந்துள்ளன. ஒரு வகைக் காசில் வபு என்றும், மற்றொரு வகையில் லக்ஷித[5] என்றும், மற்றொரு வகையில்

---

1. Dr. K. V. Raman and Dr. P. Shanmugam, 'Pallava Coin Moulds from Kanchipuram Excavations, S.S.I.C. Vol. V, pp. 77–80.
2. Indian Archaeology - a review 1962 - 63 p. 12 PL XXXIX-B
3. இக்காசைப் பள்ளி தலைமை ஆசிரியை சாந்தா கண்ட றிந்து தொல்பொருள் ஆய்வுத்துறைக்குத் தெரிவித்தார். 17-8-89 இந்து நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது.
4. Natana. Kasinathan, Art Panorama of Tamils pp. 47-49
5. R. Krishnamurthy, Coins of Pallava King Mahendra-varman I (580-630 A.D.); Dr. R. Nagaswamy, 'Tamil Coins - A Study' p. 126.

**பரமேஸ்வர** என்றும் எழுதப்பெற்றுள்ளன.[1] முதல் வகையைச் சார்ந்த காசு ஒன்றை அண்மையில் தொல்பொருள் ஆய்வுத் துறை கரூரில் திரு அர்ச்சுனன், காப்பாட்சியர் உதவியால் கண்டுபிடித்துள்ளது.[2] 'இவ்வகைக் காசு கி.பி எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்காசு வெள்ளியால் செய்யப்பெற்றது. இவ்வகையைச் சார்ந்த செம்பினால் செய்யப்பெற்ற காசு ஒன்றைப் பற்றிய செய்தி 17-11-89-ல் தினமணியில் வெளி வந்துள்ளது.[3] தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை யால் கண்டெடுக்கப்பட்டுள்ள காசில் முன்பக்கம் **வபு** என்று கிரந்த எழுத்திலும், நிற்கும் காளை உருவமும், பின்பக்கம் சங்கு உருவமும் காணப்படுகின்றன.[4]

**லக்ஷித** என்று எழுதப் பெற்றுள்ள காசு முதலாம் மகேந்திரவர்மன் காலத்தையும் **பரமேஸ்வர** என்று பொறிக்கப் பெற்றுள்ள காசு பரமேஸ்வரவர்மன் காலத்தையும் சார்ந்தவை யாகும்

சிம்மம் உருவம் ஒரு பக்கமும், சங்கு உருவம் மறுபக்கமும் உள்ள காசுகள் சில பல்லவர் காலத்தவை என்று தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தியால் கூறப்பட்டுள்ளது.[5] சிம்மம் உருவம் பொறிக்கப் பெற்ற காசுகள் பல்லவக் காலத் தவையல்லவென்றும் விஷ்ணுகுண்டின் வம்சத்தைச் சேர்ந் தவை என்றும் டாக்டர் நாகசாமி கூறியுள்ளார்.[6] ஆனால்

---

1. K. A. Thirugnanasambandam, Kanchi Pallava Coin p. 9
2. Natana. Kasinathan, Achievements of Archaeology Department in five years from 1989-1993, Annexure I p. VII;
3. Alakkudi Arumugam Sitaraman, article in Dinamalar dated 17-11-89
4. K. Damodaran, 'Karur coins' paper presented in the first annual conference of South Indian Numismatics held at Thanjavur in the year 1991.
5. R. Krishnamurthy, Pallava coins with lion symbol.
6. Dr. R. Nagaswamy, Tamil coins-a study p. 126 (1981)

திருஞானசம்பந்தம், பல்லவர்களுக்குக் கொடியாக விடையும் சிம்மமும் இருந்தது என்று கூறி சான்றாக இலக்கியப் பாடல்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.[1]

"விடை மண்பொறியோலை விடேல் விடுகு"
(நந்திக்கலம்பகம், பாடல் 13)

"மல்கு வெண்குடைப் பல்லவர் கோளரி"
(நந்திக்கலம்பகம், பாடல் 59)

பல்லவ மன்னர்கள் சிம்மவர்மன், நரசிம்மன், இராஜசிம்மன் என்று பெயர்களைத் தாங்கியிருப்பதுவும் அவர்கள் சிம்மத்தையும், கொடியில் பொறித்திருப்பார்கள் என்று ஊகிப்பதற்கு உறுதுணை புரிகிறது. ஆனாலும் சிம்ம உருவம் உள்ள காசுகளில் பல்லவ மன்னர்களின் பெயரோ அல்லது பட்டப் பெயரோ கிடைக்காத வரை உறுதியாகச் சொல்ல முடியாது.

பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் காணம், கழஞ்சு, காசு, பழங்காசு, பொன், பணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. கழஞ்சு ஒரு நாணயமாக இல்லாமல் பொன்கட்டியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.[2] அதே நேரத்தில் காணம் நாணயமாக வழங்கியிருக்கிறது. காசு, பழங்காசு என்பவைகளும் தங்க நாணயங்கள் என்று டாக்டர் சண்முகம் கூறியுள்ளார்.[3] பல்லவர் காலக் காசுகள் பெரும்பாலும் செம்பு, வெள்ளி, ஈயம் ஆகியவற்றால் செய்யப் பெற்றவையே பெரும்பாலும் கிடைத்துள்ளன. இவர்கள் காலத்திய தங்க

---

1. K. A. Thirugnanasambandam *op.cit.* P. 7
2. Natana. Kasinathan "Use of currency as gleaned from Pallava inscriptions" article presented in Tamil nadu Numismatic Conference: Art Panorama of Tamils pp. 47-49.
3. P. Shanmugam, Some aspects of monetary system of the Pallavas, Studies in South Indian coins Vol. III p. 102

நாணயங்கள் இரண்டு கிடைத்துள்ளதாகத் திருஞானசம்பந்தம் தம் நூலில் வெளியிட்டுள்ளார்.[1] மேலும் இவர்கள் காலத்தியக் காசுகள் பெரும்பாலும் வட்ட வடிவிலேயே அமைந்திருக்கின்றன.

அண்மையில் மகேந்திரவர்மன் காலத்தியக் காசு ஒன்று கண்டறியப்பட்டு இருக்கிறது.[2] இக்காசு வெள்ளியால் செய்யப் பெற்று முன்பக்கம் நந்தி நின்ற நிலையிலும் அதன் மேல் பகுதியில் 'பகாபிடுகு' என்று பல்லவர்காலத் தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் கால்கள் உடைய சக்கரம் பூக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பகாபிடுகு, லளிதாங்குரன் என்பவை முதலாம் மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்களாகும் மேலும் அபராஜிதவர்மன் காலத்திய காசைக் கண்டுபிடித்துள்ளதாக கணேசன் ஒரு கட்டுரை படித்துள்ளார்.[3]

இவர்களது காசுகளில் காணப்பெறும் காளை, சங்கு, சக்கரம், கப்பல் உருவங்களைக் கொண்டு பல்லவர்கள் சைவம், வைணவம் ஆகிய சமயங்களை ஒருசேர ஆதரித்தவர்கள் என்பதும் கடல் வாணிபம் மேற்கொண்டிருந்தனர் என்பதும் தெளிவாகப்புரிகிறது. மேலும் நண்டு, சிம்மம், மீன், வில் உருவங்கள் இராசிகளைக் குறிப்பதாக இருக்கலாம் என்று கொள்ளப்படுகிறது.[4] சைத்யம், வேலியினுள் மரம் போன்ற உருவங்கள் இவர்கள் பௌத்த மதத்தையும் ஆதரித்தனர் என்பதைக் காட்டுகின்றன.

---

1. Thirugnanasambandam, *op.cit.* Pl.No.1 and 2 page. 88
2. Alakkudi Arumugam Sitaraman, 'Avanam' Vol. IV, P. 88.
3. T. Ganesan, 'A Rare Copper Coin of Pallava King Aparajitavarman'
4. Dr. R. Nagaswamy, *op.cit.* P. 124

பிரிவு ஒன்பது

# சோழர் காசுகள்

தமிழகத்தில் இடைக்காலச் சோழர் காலம் ஒரு பொற் காலமாகும். அரசியலில் நிலைத்தன்மை ஏற்பட்டு, கல்வி, கலை, பண்பாடு ஆகியவை தழைத்தோங்கிய நேரமாகும். தமிழகப் பண்பாடு கிழக்காசிய நாடுகளில் விரிந்து பரவத் தொடங்கிய சூழ்நிலை. பொருளாதாரம் ஏற்றம் பெற்று வாணிகம் வெளிநாடுகளோடு தொடர்பு கொள்ளத் தொடக்கம். பொருட்களின் உற்பத்திப் பெருக பெருக வாணிபம் மேலோங்கத் தொடங்கியது. அதன் காரணமாகக் காசுகளும் அதிக அளவில் நாட்டில் புழக்கத்தில் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சோழர் காலத்தில் பல்வகை நாணயங்கள் தங்கம், வெள்ளி, செப்பு ஆகிய உலோகங்களில் அச்சாக்கப்பட்டன. ஈயத்தில் மட்டும் காசு அச்சடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பல்லவர்களுக்கு அடங்கிய மன்னர்களாகத் தொடக்கக் காலத்தில் சோழர்கள் இருந்த காரணத்தால் பல்லவர் காலத் தில் வெளியிடப்பெற்ற காககளே பராந்தகன் காலம் முடிய புழக்கத்தில் இருந்திருக்கும் போன்று தெரிகிறது. இதுவரை கிடைத்துள்ள சோழர் காலக் காசுகளில் முதலாம் பராந்தகன் காலத்தியக் காசுதான் பழமையானதாக உள்ளது. இக்காசு தங்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

### முதலாம் பராந்தகன் காசு

| | |
|---|---|
| இக்காசில் முன்பக்கம்: | நடுவில் புலியும், ஒரு மீனும் காணப் படுகின்றன. இவ்வுருவங்களைச் சுற்றி லும் மதிராந்தகந் என்று தமிழ் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. |
| பின்பக்கம் : | முன்பக்கத்தில் உள்ளது போன்றே |

இக்காசு உத்தமசோழன் காலத்தில் வெளியிடப்பெற்ற காசாக இருக்கலாம் என்று நாகசாமி கூறியுள்ளார்.[1] இதற்குச் சான்றாக எலியட் தம் நூலில் படத்துடன் வெளியிட்டுள்ள உத்தமசோழன் காலத்திய காசிலும் ஒரு புலியும், ஒரு மீனும் தான் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளார். இக்காசிலுள்ள தமிழ் எழுத்துக்களின் எழுத்தமைதியைக் கொண்டு நோக்குகையில் பராந்தகன் காலத்தியதாகத்தான் இருக்கவேண்டும் போன்று தோன்றுகிறது. மேலும் முதலாம் பராந்தகன்தான் பிற்காலச் சோழ மன்னர்களில் முதன் முதலில் மதுரையை வெற்றி பெற்று "மதிரைகொண்ட கோப்பரகேசரி" என்ற பட்டத்தைத் தம் மூன்றாம் ஆட்சியாண்டிலேயே தரித்திருக்கிறான்.[2] உத்தம சோழனது வரலாற்றைப் பார்க்கையில் அவன் மதுரையை வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை.

மேலும் உத்தமசோழன் காசுகளில் ஒன்றில் 'உத்தம சோளந்' என்று தமிழ் கிரந்தத்திலும், மற்றொன்றில் 'உத்தமசோள' என்று நாகரியிலும் எழுதப்பட்டுள்ளது.

ஆதலால் 'மதிராந்தகன்' என்று எழுதப்பட்டுள்ள காசு பராந்தகன் காலத்தில்தான் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

### உத்தமசோழன் காசு

உத்தமசோழன் காலத்தில் இருவகைக் காசுகள் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிகிறது. ஒன்றில் 'உத்தம சோளந்' என்று தமிழ் கிரந்த எழுத்திலும், மற்றொன்றில் 'உத்தமசோள' என்று நாகரி எழுத்திலும் எழுதப்பெற்றிருக்கின்றன. முதலாவதில் முன்பக்கமும் பின்பக்கமும் உட்கார்ந்

---

1. Tomil Coins - a study, p. 36
2. K. A Nilakanta Sastri, 'Colas' p. 121 (Ed. 1955) ARE 157/1928 and 11/1931

திருக்கும் புலி, ஒரு மீன், உருவங்களோடு உத்தமசோளங் என்று தமிழ் கிரந்த எழுத்தில் எழுதப்பெற்றுள்ளது.

இரண்டாம் வகையில் முன்பக்கம் உட்கார்ந்திருக்கும் புலி, இரு கயல்கள், வில் ஆகியவை மேடைமீது உள்ளது போன்று காட்சி தருகின்றன வெண்கொற்றக்குடை, இரு சாமரம் ஆகியவைகளும் உள்ளன பின்பக்கம் 'உத்தமசோள' என்று நாகரி எழுத்தில் இரு வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது. காசுகளில் நாகரி எழுத்தை முதலாம் இராஜராஜன் காலம் முதல்தான் காணமுடிகிறது.

இக்காசை வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் முதலாம் இராஜேந்திரன் காலத்தைச் சார்ந்தது என்றும், டாக்டர் சட்டோபாத்யாய உத்தமசோழன் காலத்தியது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இக்காசில் 'உத்தம சோள' என்று ஒரு பக்கமே எழுதப்பெற்றிருப்பதாலும், ஒரு பக்கம் முழுவதும் உருவங்களாகவும் குறிப்பாக இருகயல் களும, குடை, சாமரங்கள் காணப்படுவதாலும், நாகரி எழுத்தில் பெயர் எழுதப்பட்டிருப்பதாலும் இது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிட்டுள்ளது போன்று முதலாம் இராஜேந் திரன் காலத்தில் வெளியிடப்பட்டதாக இருக்கலாம். இத்தகைய காசு வெள்ளி மற்றும் செம்பில் கிடைத்துள்ளது.

முதலாம் பராந்தகன் காலத்தியது என்று இந்நூலா சிரியரால் கொள்ளப்பட்டுள்ள காசு முதன் முதலில் 1934-ஆம் ஆண்டு மைசூர் தொல்லியல் அறிக்கையில் வெளியிடப் பட்டிருக்கிறது. அவ்வறிக்கையில் இக்காசில் உள்ள வாசகம் '**சந்த்ரசாந்த**' என்று படிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இக்காசு முதலாம் இராஜராஜன் காலத்தியதாக இருந்தாலும் இருக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இக்காசை மேலும் ஆய்ந்த டாக்டர் நாகசாமி உத்தமசோழன் காலத்தியது என்று தமது 'மதுராந்தகன் மாடை' என்ற கட்டுரையில் எழுதியுள்ளார்.[1]

---

1. R. Nagaswamy, 'Damilica' Vol. I Part 11 pp. 101-103

உத்தமசோழன் காலத்தியக் காசின் வரைபடத்தை ஸர் வால்டர் எல்லியட் தம் நூலில் வெளியிட்டுள்ளார். இது தங்கக் காசு. இதன் எடை 50 முதல் 60க்குள்ளான நெல் எடை.[1]

## முதலாம் இராஜராஜன் காசுகள்

உத்தமச்சோழனுக்குப் பின்பு பேரரசனாக விளங்கிய முதலாம் இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் பன்னிரண்டு வகையான காசுகள் வெளியிடப் பெற்றிருப்பதாக அறிய முடிகிறது.

முதலாம் இராசராசன் காலத்தில்தான் காசுகளில் முதன் முதலில் தேவநாகரி பயன்படுத்தப்பட்டதாகத் தோன்றுகிறது மேலும் ஒரு கயலுக்குப் பதிலாக இரு கயல்களையும், அரசு இலச்சனைகளோடு கொற்றக்குடையையும் இரு சாமரங்களையும் பொறித்தருவும் இம்மன்னன் கால முதலேயாகும். சோழர் காலக் காசுகளில் மனித உருவம் காணப்படுவதும் இவ்வரசன் காலத்திலிருந்தே தொடங்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவத்தைக் காசு இயல் ஆய்வாளர்கள் ஈழ மனிதன் என்று எழுதி வந்தனர். நாகசாமி தம் நூலில் இவ்வுருவம் மன்னனின் உருவமாக இருக்கலாம் என்று எழுதியுள்ளார். இவ்வுருவம் மன்னனது உருவம் எனில் இவ்வுருவத்தையே இம்மன்னனுக்குப் பின்பு ஆட்சிபுரிந்த சோழ, பாண்டிய, பிற்காலச் சேர, நாயக்க மன்னர்களும் மற்றும் ஈழ மன்னர்களும் பயன்படுத்தியிருப்பார்களா என்பது சந்தேகமாக உள்ளது. ஆதலால் இவ்வுருவம் தமிழகத்துக்கும், ஈழத்துக்கும் பொதுவான ஒரு தெய்வத்தின் உருவமாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சோழர்களின காசுகளில் தமிழ் எழுத்தை முதலாம் குலோத்துங்கன் காலம் முதல்தான் காண முடிகிறது. இவன் காலத்துக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ள காசுகளில் தமிழ் கிரந்த எழுத்தையும் நாகரி எழுத்தையும்தான் பயன்படுத்தியுள்ளனர்.

முதலாம் இராஜராஜன் தம் ஆட்சிக் காலத்தில் பல துறைகளிலும் பல்வித புதுமைகளைப் புகுத்தியது போல்

1. Walter Elliot, 'Coins of South India', p. 152 G

காசுகளை வழக்கில் கொண்டு வருவதிலும் சில புதுமைகளைக் கையாண்டிருக்கிறான். தாம் மும்முடிச்சோழன் எனப் பெயர் சூட்டிக் கொண்டதை நினைவு கூறும் வண்ணம் சோழநாடு பாண்டிய நாடு மற்றும் சேர நாடு ஆகிய ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு வகைக் காசை அச்சடித்துப் பழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறான். சோழ நாட்டில் புலி உருவம் பொறித்த காசும், பாண்டிய நாட்டில் மீன் உருவம் பொறித்த காசும் சேர நாட்டில் திருவடி உருவம் பொறித்த காசும் புழக்கத்தில் விடப்பட்டிருக்கின்றன. தம் அண்டை நாடான சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றியதின் அடையாளமாக அந்நாட்டில் வழக்கில் இருப்பதற்காகப் பன்றி உருவம் பொறித்தக் காசை அச்சடித்திருக்கிறான்.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இராமநாதபுரம் மாவட்டம், நீராவியில் உரக என்று தேவநாகரியில் எழுதப் பெற்றுள்ள தங்கக்காசு ஒன்றைக் கண்டெடுத்துள்ளது [1] முதலாம் இராஜராஜனின் பட்டப் பெயரான (ரவி)குலமாணிக்கம் என்று எழுதப் பெற்ற வெள்ளிக்காசு ஒன்றை அளக்குடி ஆறுமுக சீதாராமன் என்பவர் சேகரித்துள்ளார்[2]

இராஜராஜன் வேறு சில காசுகளையும் வெளியிட்டிருக்கிறான். உதாரணமாக முரளிதரன் உருவம் பொறித்த காசையும், குதிரை மீது ஒருவர் அமர்ந்தவாறு உள்ள காசையும் குறிப்பிடலாம்.[3]

---

1. எஸ். சாந்தலிங்கம், தொல்பொருள் அலுவலர் கண்டு பிடித்தார், Achievements of the Archaeology, Dept., 1989 - 1993, Annexure - I, p. VII.

2. ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள் தொகுதி I, பக்கம். 25.

3. Dr. R. Nagaswamy, 'Tamil Coins - A study' p. 40

**முதலாம் இராசேந்திரன் காசுகள்**

நாட்டை விரிவுபடுத்துவதில் தந்தைக்கு மிஞ்சிய தனயனாக இருந்தாலும், மற்ற துறை மேம்பாடுகளில் தந்தை செய்து வைத்திருந்ததையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறான் முதலாம் இராஜேந்திரன் போன்று தெரிகிறது. ஏனெனில் முதலாம் இராஜராஜன் ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்திய புதுமை போன்று இவன் யாதும் செய்து விடவில்லை. காசு வெளியிடுவதில் இராஜராஜன் பதினொரு வகையான காசுகளை வெளியிட்டிருக்கையில், இவன் காலத்தியது என்று கூறுவதற்கு ஏழு வகைக் காசுகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆந்திர மாநிலம் தவளேசுவரத்தில் கிடைத்துள்ள காசுக் குவியலில் உள்ள தங்க நாணயங்களில், **கங்கை கொண்ட சோழன்**, என்று தமிழ் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள காசுகள் முதலாம் இராசேந்திரனுடையது என்று கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியால் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.[1]

அண்மையில் சென்னை அருங்காட்சியகம் **முடிகொண்ட சோள** என்று தமிழ் கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றுள்ள தங்கக்காசு ஒன்றைச் சேகரித்துள்ளது. இக்காசில் உள்ள வாசகத்தை இந்நூலாசிரியர் படித்துத் தந்துள்ளார். இக்காசும் முதலாம் இராசேந்திரன் காலத்தில் வெளியிடப்பட்டதாகும். மேலும் இதுவும் தவளேசுவரம் காசு அச்சாக்கப் பெற்றுள்ள முறையிலேயே அச்சாக்கப் பெற்றுள்ளது.[2] மேலும் **யுத்தமல்ல** என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ள காசு இவன் காலத்தியதுதானா என்பது சந்தேகமாக உள்ளது. இத்தகைய காசு ஒன்றைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அண்மையில் கங்கைகொண்ட சோழபுரத்தில் கண்டெடுத்துள்ளது [3] இம்மன்னனால் வெளியிடப்பட்ட காசுகளில் நான்கு வகைக் காசுகள் நாகரி எழுத்திலும் இரு வகைக் காசுகள் தமிழ் கிரந்த எழுத்திலும் எழுதப்பெற்றுள்ளன.

---

1. Dr. R. Nagaswamy, 'Tamil Coins - A study' p. 36
2. Shanti, Curator, Govt. Museum had submitted a paper on this Coin.
3. கா. நெடுஞ்செழியன், காப்பாட்சியர், கண்டெடுத்துள்ளார்.

**இராஜாதிராஜன் காசு**

இம்மன்னன் தாம் அரசுப்பட்டம் புனைந்ததிலிருந்து தம் இறுதி மூச்சு வரை போர் போர் என்றே போர் புரிந்தவன். ஆதலால் தம் காலத்தில் புதுவகையான காசுகளை வெளியிடு வதில் அக்கறை செலுத்தவில்லை போலும். இவன் காலத்தியது என்று கருதக்கூடிய ஓரேயொரு காசு மட்டும் கிடைத்துள்ளது.[1] இது தங்கக் காசாகக் காணப்படுகிறது.

**குலோத்துங்கன் காசு**

இம்மன்னன் காலத்தில் வெளியிடப்பட்ட மூன்று வகை யான காசுகள் இதுவரை கிடைத்துள்ளன. இக்காசுகள் அனைத்தும் தங்கக் காசுகள். இவை ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம் கவிலயதாவல்லி என்ற ஊரிலிருந்து கிடைத்துள்ளன.[2]

முதல் வகைக் காசில் வழக்கமான அரசுச் சின்னம் (புலி, இருகயல்) முன்பக்கம் பின்பக்கம் **சுங்க** என்ற தமிழ் வாசகத்தோடு ஒரு சிலவற்றில் 27, மேலும் சிலவற்றில் 31, இன்னும் சிலவற்றில் 34 ஆகிய எண்ணும் காணப்படுகின்றன. முதலாம் குலோத்துங்கன் கி.பி 1070 முதல் 1120 முடிய 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறான். ஆதலால் இக்காசுகளில் காணப்பெறும் எண்கள் முறையே அவனது 27, 31, 34–ஆம் ஆட்சியாண்டுகளில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.[3]

இரண்டாம் வகைக் காசில் முன்பக்கம் அரசுச் சின்னங் களோடு **காஞ்சி** என்று தமிழிலும்; மூன்றாம் வகைக் காசில் முன்பக்கம் **காஞ்சி** என்பதற்குப் பதிலாக **நெ** என்று தமிழிலும் எழுதப்பட்டுள்ளன காஞ்சி என்பது காஞ்சிபுரத்தில்

1. K. A. Nilakanta Sastri, 'The Colas', Second Edition p. 615
2. JAHRS, 1, Part III, 1927, pp. 141-143; IA, LVI, 1922, pp. 193-94.
3. B. Chattopadhyaya, Coins and Currency Systems in South India, p. 60.

அக்காசு அச்சாக்கப் பெற்றதையும், நெ என்பது நெல்லூரின் சுருக்கம் என்றும், அக்காசு ஆந்திர மாநிலம் நெல்லூரில் அச்சடிக்கப் பெற்றதையும் குறிக்கின்றன என்று சட்டோபாத் யாயா கருத்துத் தெரிவித்துள்ளார்.[1] இக்கூற்று ஏற்றுக் கொள்ளப்படுமானால் தமிழகத்துக் காசுகள் அச்சடிக்கப்பட்ட இடத்தைத் தெரிவித்து காசுகள் வெளியிட்டவன். என்ற பெருமையை முதலாம் குலோத்துங்கன் பெறுகிறான். காசு களில் ஆட்சி ஆண்டைப் பொறிக்கும் முறை ஆந்திர மன்னர் களைப் பார்த்துக் கையாண்ட முறையாகும். ஆந்திர மாநிலம் தவளேசுவரத்தில் கிடைத்துள்ள சாளுக்கிய மன்னன் இராஜ ராஜன் காசுகளிலும், சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் காசுகளிலும் ஆட்சியாண்டுகள் குறிக்கப்பட்டுள்ளன.[2]

---

1. Op. Cit, p. 60
2. Dr. R. Nagaswamy, 'Tamil Coins - A study' p. 43

# சோழர் காசுகள்

## முதலாம் பராந்தகன்

1. முன்பக்கம் : 'மதிராந்தகந்' என்று தமிழ் கிரந்த எழுத்தில் - நடுவில் புலி ஒரு கயல்

   பின்பக்கம் : முன்பக்கம் உள்ளது போன்றே. தங்கம்.

## உத்தமசோழன்

1. முன்பக்கம் : 'உத்தமசோளந்' தமிழ்க் கிரந்த எழுத்தில் உட்கார்த்திருக்கும் புலி, ஒரு கயல்

   பின்பக்கம் : முன்பக்கம் உள்ளது போன்றே தங்கம்

## முதலாம் இராஜராஜன்

1. முன்பக்கம் : வில், இருகயல், புலி
   கீழே 'ஸ்ரீராஜராஜ', தேவநாகரி எழுத்தில்

   பின்பக்கம் . முன்பக்கத்தில் உள்ளது போன்றே

2. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

   பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம் - இடது கைக்குப் பக்கத்தில் 'ஸ்ரீராஜராஜ' - நாகரி எழுத்தில்

3. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம் - இடது கைக்குக் கீழ் அமர்ந்திருக்கும் புலி

   பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம்

4. முன்பக்கம் : நிற்கும் மனிதன் - இடது கைக்குக் கீழ் செங்குத்தான மீன்

   பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம்

5. முன்பக்கம் : நிற்கும் மனிதன்-இடக்கைக்குக் கீழ் பாதம்

   பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம்

6\. முன்பக்கம் : நிற்கும் மனிதன் - இடக்கைக்குக் கீழ் பாதம், வில்

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம்

7\. முன்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம் - இடது கைக்குக் கீழ் அமர்ந்திருக்கும் புலி

பின்பக்கம் : வில், புலி, இரு கயல் - மேலே குடை, சாமரம், கீழே நாகரி எழுத்தில் 'ஸ்ரீராஜ ராஜ'

8\. முன்பக்கம் : முரளிதரகிருஷ்ணன்

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம் - இடக் கரத்துக்குக் கீழ் 'ஸ்ரீராஜராஜ' தேவநாகரி.

9\. முன்பக்கம் : பாயும் குதிரை மீது போர் வீரன் அமர்ந் துள்ளான்.

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம் - இடக் கரத்துக்குக் கீழ் 'இராஜராஜ' தேவநாகரி

10\. முன்பக்கம் : 'உரக' என்று தேவநாகரியில் எழுதப் பட்டுள்ளது.

பின்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை, தங்கம்

11\. முன்பக்கம் : வில், அமர்ந்த புலி, செங்குத்தான இரு கயல், புலிக்கு மேல் வெண்கொற்றக்குடை

பின்பக்கம் : '(ரவி)குலமாணிக்கம்' என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. வெள்ளி.

12\. முன்பக்கம் : வரம்பையொட்டி 'மலநாடு கொண்ட சோளந்' என்று தமிழ் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. நடுவில் வில், புலி, இருகயல். தங்கம்.

பின்பக்கம் : முன்பக்கத்தில் உள்ளது போன்றே

முதலாம் இராஜேந்திரன்

1. முன்பக்கம் : வில், உட்கார்ந்திருக்கும் புலி, இரு கயல்கள் - ஒரு மேடை மீது இவை இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளன. மேற்பகுதியில் குடை, இரு சாமரம்

பின்பக்கம் : 'உத்தமசோள' என்று நாகரி எழுத்தில், வெள்ளி.

2. முன்பக்கம் : வில், புலி, இரு கயல், கீழே 'ஸ்ரீராஜேந்த்ர' நாகரி எழுத்தில்

பின்பக்கம் : முன்பக்கத்தில் உள்ளது போன்றே.

3. முன்பக்கம் : வில், புலி, இரு கயல் கீழே 'ஸ்ரீகங்கைகொண்ட சோள' நாகரி எழுத்தில்

பின்பக்கம் : முன்பக்கத்தில் உள்ளது போன்றே.

4. முன்பக்கம் : வில், புலி, இரு கயல். இரு புறமும் விளக்கு, மேலே குடை, சாமரங்கள்; கீழே நாகரி எழுத்தில் 'ஸ்ரீராஜராஜேந்த்ர'

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம். உருவத்தின் வலப்பக்கம் உட்கார்ந்த நிலையில் புலி

5. முன்பக்கம் : வில், புலி, இருமீன்

பின்பக்கம் : 'யுத்தமல்ல' இருவரிகளில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. தங்கம், வெள்ளி.

6. முன்பக்கம் : மத்தியில் அரசு முத்திரை வில், புலி, கயல் சுற்றிலும் 'கங்கைகொண்டசோளன்' தமிழ் கிரந்த எழுத்தில், தங்கம் - ஆட்சியாண்டு 28 முதல் 33 முடிய

பின்பக்கம் : முன்பக்கத்தில் உள்ளது போன்றே

7\. முன்பக்கம் : நடுவில் புலி, கயல், வரம்பையொட்டி 'முடிகொண்ட சோள' என்று தமிழ் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

பின்பக்கம் : முன்பக்கத்தில் உள்ளது போன்றே, தங்கம்.[1]

## முதலாம் இராஜாதிராஜன்

1\. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம், இடக்கரத்துக்குக் கீழ், 'ஸ்ரீராஜாதிராஜ'

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம் முன்பாக உட்கார்ந்திருக்கும் புலி. தங்கம்

## முதலாம் குலோத்துங்கன்

1\. முன்பக்கம் : புலி, கயல்

பின்பக்கம் : 'சுங்க' தமிழ் எழுத்தில், எண் 27 (அ) 31, (அ) 33, (அ) 34, தங்கம்

2\. முன்பக்கம் : புலி, கயல், தமிழ் எழுத்தில் 'காஞ்சி';

பின்பக்கம் : தமிழ் எழுத்தில் 'சுங்க'

3\. முன்பக்கம் : புலி, கயல், 'நெ' தமிழ் எழுத்தில்

பின்பக்கம் : 'சுங்க' தமிழ் எழுத்தில்

---

1\. இக்காசு தருமபுரி மாவட்டம், தென்கனிக் கோட்டை வட்டம் தொட்டமஞ்சு என்னும் ஊரிலிருந்து சில தங்க ஆபரணங்களோடு கிடைத்துள்ளது.

பிரிவு பத்து

# பாண்டியர் காசுகள்

சங்க காலத்துக்குப் பின்பு ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களில் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கடுங்கோன் (கி பி. 560-590) என்ற மன்னன் முதல்தான் நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இவன் களப்பிர மன்னர்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றியவன் என்று வேள்விக்குடிச் செப்பேடு புகலுகிறது. இவனையடுத்து, மாறவர்மன் அவனிசூளாமணி (கி. பி. 590-620) செழியன் சேந்தன் (கி. பி. 620-650), அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி. பி. 650-700) கோச்சடையன் இரணதீரன் (700-730) மாறவர்மன் இராஜசிம்மன் (730-768) பராந்தக நெடுஞ் சடையன், (முதலாம் வரகுணன்) (கி. பி. 768-815), ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (815-862) இரண்டாம் வரகுணன் (கி. பி. 862 - 907) பராந்தக வீரநாராயணன் (862-907) இரண்டாம் இராஜசிம்மன் (கி. பி. 907-925) ஆகிய மன்னர்கள் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் கி. பி. 13-ஆம் நூற் றாண்டின் தொடக்கப் பகுதி முடிய பாண்டி நாடு சோழர் களின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டிருந்திருக்கிறது. 13-ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலம் முதல் மீண்டும் பாண்டியராட்சி தலைதூக்கி ஒரு நூற்றாண்டு காலம் செம்மாந்து விளங்கியது. பின்னர் பாண்டிய மன்னர் களுக்குள்ளே ஏற்பட்ட பகைமையின் காரணமாக, டெல்லி சுல்தான் படையெடுப்பினால் பாண்டியர் ஆட்சி வீழ்ந்தது.

கடுங்கோன் முதல் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர் களில் பராந்தக நெடுஞ்சடையன் முதலாம் வரகுணன் காலம் முடிய உள்ள காலத்தில் பாண்டியர்கள் எத்தகைய காசுகளை

வெளியிட்டிருந்தார்கள் என்று அறிய இயலவில்லை. இம் மன்னர்களது சமகாலத்தவராகிய பல்லவர்கள் காசுகூட கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த முதலாம் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து தான் மன்னன் பட்டப் பெயருடன் கிடைத்துள்ளது. இக்காலக் கட்டத்தில் (அதாவது கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பகுதியைப் பல்லவர்களும் தென் பகுதியைப் பாண்டியர்களுமே ஆட்சி புரிந்திருக்கின்றனர். மகேந்திரவர்மன் காலத்துக்கு முன்பாகப் பல்லவர்கள் சில ஈயக்காசுகளை உருவங்கள் மட்டுமே பொறித்து வெளியிட்டிருக் கின்றனர். ஆனால் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபப் பாண்டியனுக்கு (கி..பி. 815 – 862) முன்பாக ஆட்சி புரிந்த பாண்டியர்கள் வெளியிட்ட காசு ஒன்றுகூட இதுவரை கிடைக்கப் பெறவில்லை. (சங்க காலப் பாண்டியர் காசு தவிர). ஒருவேளை சங்ககாலப் பாண்டியர்கள் வெளியிட்ட காசே இப்பகுதியில் தொடர்ந்து பழக்கத்தில் இருந்திருக்கலாம். இக்காலத்தியக் கல்வெட்டுகள் கழஞ்சு, தினார் ஆகிய காசுகளைக் குறிப்பிடுகின்றன. கழஞ்சின் உருவம் எவ்வாறு இருந்தது என்பது தெரியவில்லை. தினார் என்பது ரோமானிய காசாக இருக்கலாம்.

### அவனிபசேகரன் காசு

இக்காசில் முன்பக்கம் இரு கயல்களும் பின்பக்கம் **ஸ்ரீஅவநிபசேகரன் கொளக** என்று தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றும் காணப்படுகின்றன. இது செப்புக் காசு. இக்காசை டி. தேசிகாச்சாரி தம் நூலில் வெளியிட்டுள்ளார். அவர் இதிலுள்ள மூன்று வரி வாசகத்தை **அவநிபசேகரன் கோளன்** என்று படித்து, பின்னர் **அவநிபசேகரன் சோளக** என்றும் படிக்கலாம் என்றும் தெரிவித்து, இக்காசு பாண்டிய நாட்டை அடிமைப்படுத்திய ஒரு சோழ மன்னனால் வெளியிடப் பட்டிருக்கலாம் என்று கூறியுள்ளார்.[1]

இக்காசை மேலும் ஆய்வு செய்த டாக்டர் இரா.நாகசாமி தம் நூலில் **ஸ்ரீஅவனிபசேகர கோளக** என்று படித்து,

---

1. T. Desikachari, South Indian Coins, p. 176 plate III Nos. 65-66

கோளக என்பது தமிழ் வார்த்தையான **குளிகையைக்** குறிக்கும் என்று குறித்துள்ளார்.[1] பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்குச் சித்தன்னவாசல் குடைவரைக் கோயில் கல்வெட்டில் **அவனிபசேகரன்** என்ற பட்டப் பெயர் வழங்கப் பெற்றுள்ளது என்றும்; ஆதலால் இது ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் காலத்தியக் காசாகவும் இருக்கலாம் என்று தேசிகாச்சாரி கொண்டதுதான் சரியானது என்று நாகசாமி எழுதியுள்ளார்.

இக்காசில் காணப்பெறும் வாசகம் ஸ்ரீ **அவனிபசேகர கோளக** என்பதை, ஸ்ரீ **அவனிபசேகர கொளக** என்றும் படிக்கலாம். **கொளக** என்பது **குளிகை** என்பதின் மரூஉவாக இருக்கலாம். குளிகை என்பதற்கு மந்திர சக்தியுள்ள மாத்திரை என்றும் உலோகத்தகடு என்றும் தமிழ் லெக்சிகனில் பொருள் தரப்பட்டுள்ளது. உலோகத்தால் செய்யப்பட்ட மாத்திரை போன்ற வடிவில் அமைந்த காசு என்று இங்கு பொருள் கொள்ளலாம். கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் **வீரச்சம்பன் குளிகை** என்று வீரச்சம்பன் என்ற சம்புவராய மன்னரால் வெளியிடப் பெற்ற காசுக்குப் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைக் கல்வெட்டுக்களினால் அறிய முடிகிறது.[2]

**இரண்டாம் வரகுணன் காசு**

டி. என். சுப்பிரமண்யம், நாணய இயல் பருவ இதழில் வரகுணன் காசு என்று ஒரு காசைப் பற்றி எழுதியுள்ளார்.[3] இது தங்கக் காசு. முன்பக்கம் இரு கயல்களையும் பின்பக்கம் 'ஸ்ரீவரகுண'' என்று கிரந்த எழுத்திலும் காண முடிகிறது. இது இரண்டாம் வரகுணன் வெளியிட்ட முக்கிய

1. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study p 83.
2. Dr. Avvai Natarajan and Natana. Kasinathan, Art Panorama of Tamils, pp. 54-55 and S. I I. Vol.I, No.52, ARE. 102 of 1932-33, 162 of 1939-40.
3. JNSI, XXXII, I, pp. 85-86; plate III, No. 13.

காசு என்று டாக்டர் சட்டோபாத்யாயாவும் தெரிவித்துள்ளார்.[1] இக்காசு மிகவும் புத்தம் புதிய நிலையில் காணப்படுவதால் இதன் பழமைத் தன்மை பற்றி சந்தேகம் எழுகிறது என்றும், இதைப்பற்றி எந்தவித முடிவுக்கும் வர இயலாது என்றும் டாக்டர் நாகசாமி தம் நூலில் எழுதியுள்ளார்.[2] காசு புத்தம் புதிதாக இருக்கிறது என்று அதன் பழமைத் தன்மை மீது சந்தேகம் கொள்வது சரியாகத் தோன்றவில்லை. ஏனெனில் அண்மையில் தமிழகத்தில் திருக்கோயிலூருக்கருகில் கிடைத்துள்ள உரோமானியக் குவியலில் அனைத்துக் காசுகளும் புத்தம் புதியவைகளாகத்தான் காணப்படுகின்றன. அதனால் அவை மீது சந்தேகம் கொள்ள இயலாது. காசு வெளியிட்ட உடனேயே யாராவது ஒருவர் அக்காசை ஒரு இடத்தில் பத்திரப்படுத்தி வைத்து விடுவதாலும், தங்கக் காசாக இருப்பதாலும் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் புத்தம் புதிதாகக் காட்சி தருவதற்கு வாய்ப்புண்டு எனலாம். ஆதலால் மேற்காணும் காசை இரண்டாம் வரகுணன் காசாகவே கொள்வதில் தவறில்லை.

**சுந்தரபாண்டியன் காசு**

முன்பக்கம் தமிழ் எழுத்தில் '**சுந்தர பாண்டியன்**' என்று எழுதியிருப்பதோடு, கீழே கயல்களுக்கிடையில் செண்டு ஆகியவையும்; பின்பக்கத்தில் இடப்பக்கம் முகம் வைத்து நிற்கும் பன்றியோடு சங்கு, சக்கரம், சூரியன், சந்திரன் ஆகிய உருவங்களும் காணப்படும். இவ்வகைச் செப்புக் காசு கணிசமான அளவில் தமிழகத்தில் கிடைத்துள்ளன. அண்மைக் காலங்களில் இராமேசுவரத்துக்கருகில் உள்ள வொலாந்தருவையில் இரண்டு முறை இவ்வகைக் காசுகள் குவியல்களாகக் கிடைத்துள்ளன.[3]

---

1. B. Chattopadhyaya, 'Coins and Currency Systems in South India, p. 64; Plate VI, No. 290.
2. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study p. 79.
3. கணேசன். காப்பாட்சியர், இராமேசுவரம் அகழ்வைப் பகம், கண்டறிந்து துறைக்குத் தகவல் அளித்துள்ளார்.

இக்காசில் பின்பக்கம் பன்றிச் சின்னம் காணப்படுவது முக்கியத்துவம் வாய்ந்தது. பன்றிச் சின்னத்தைச் சாளுக்கியர்களும் விஜயநகர மன்னர்களும் கொண்டிருந்திருக்கிறார்கள். **"சுந்தர பாண்டியன்"** என்பதன் எழுத்தமைதியைப் பார்க்கையில், கி.பி. 12-13ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு கொண்டு வர முடியாது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் விஜயநகர வேந்தர்கள் தமிழகத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். ஆதலால் இக்காசில் காணப்பெறும் பன்றிச் சின்னம் விஜய நகர அரசர் காலத்தைக் குறிக்காது. அவ்வாறெனில் சாளுக்கிய மன்னர்களைத்தான் குறித்தல் வேண்டும். ஆதலால் சாளுக்கியர்களை அடக்கிய அல்லது தோழமையாகக் கொண்ட ஒரு சுந்தரபாண்டியனால் இக்காசு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பார்க்கையில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னன் முதலாம் இராஜாதிராஜனின் சமகாலத்தவனாக விளங்கி, சிறிது காலம் தன்னாட்சி புரிந்த சுந்தரபாண்டியனாக இம்மன்னன் இருக்கலாம் என்று டாக்டர் நாகசாமி கருதியுள்ளார்.[1]

அவரது கருத்துக்கு ஆதாரமாகக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சோழபுரத்தில் உள்ள கல்வெட்டினைச் சான்று காட்டியுள்ளார். அக்கல்வெட்டு கி.பி. 1027-ல் எழுதப் பெற்றுள்ளது. அதில் சாளுக்கிய மன்னன் "விஷ்ணுவர்த்தன மஹாராஜா சாளுக்கி விஜயாதித்த விக்கியண்ணன்" வைத்த நொந்தா விளக்கு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

இதே மன்னன் காலத்தைச் சார்ந்த மற்றொரு வகைக் காசுகளில் முன்பக்கத்தில் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் ஒரு உருவமும் அவ்வுருவத்தைச் சுற்றி **"சுந்தரபாண்டியன்"** என்று தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுமுள்ளது. பின்பக்கம் இரு கயல், நடுவில் சாட்டை, மேலே கொற்றக்குடை

1. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study p. 89
2. கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், தொகுதி 3, எண். 265; T.A.S. Vol. VIII

மற்றும் சாமரங்கள் காணப்படுகின்றன. (டி. தேசிகாச்சாரி எண் 50, 51)[1] இத்தகைய காசு ஒன்றை அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. தற்பொழுது துறையின் பாதுகாப்பில் இருக்கிறது.

இக்காசின் முன்பக்கத்தில் அஞ்சலி செலுத்தும் நிலையில் நிற்கும் மனிதனின் உருவம் உள்ளதாக தேசிகாச்சாரி தம் நூலில் எழுதியுள்ளார்.[2] ஆனால் உண்மையில் உருவம் அமர்ந்தநிலையில்தான் உள்ளது.

முன்பக்கத்தில் அமர்ந்த நிலையில் காணப் பெறும் உருவம் புத்தரின் உருவமாக இருக்கலாமோ என்று எண்ணத் தூண்டுகிறது. இராமேசுவரத்தில் புத்தஸ்தூபா ஒன்று கி.பி. 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. இராமேசுவரத்தின் ஒரு பகுதியான அரியாங்குண்டு என்ற இடத்திலிருந்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்றையும் அதற்கு அருகாமைப் பகுதியிலிருந்து புத்தர் மற்றும் அவலோகிதீசுவரர் செப்புத்திருமேனிகளையும் மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.[3] ஆனால் இவ்வுருவம் அஞ்சலி செலுத்தும் நிலையில் இருப்பதால் புத்தராக இருக்கமுடியாது.

இம்மன்னன் காலத்தில்தான் காசுகளில் இருகயல்களுக்கிடையில் சாட்டை (செண்டு) பொறிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

**வீரபாண்டியர் காசு**

ஒரு வகை செப்புக் காசுகளில்[4] முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவமும், அவனது இடக்கரத்துக்குக் கீழ் மூன்று

1. South Indian Coins, pp. 174-175, Plate III, No. 50, 51.
2. Ibid, pp. 174-175.
3. Natana. Kasinathan, Achievements of the Archaeology Department in five years (from 1989-1993) Annexure-I (p-VI, Serial No. 25)
4. T. Desikachari, South Indian Coins, Plate III, No. 46, 47 and 48

அல்லது அதற்கு மேலான புள்ளிகளும், பின்பக்கத்தில் "வீரபாண்டியன்" என்று தமிழ் எழுத்தில் எழுதியிருப்பதோடு கீழே இருகயல்களும், நடுவில் சாட்டையும் பொறிக்கப் பட்டுள்ளன. இக்காசில் காணப்பெறும் எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கையில் இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த வீரபாண்டியன் காலத்தியக் காசாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[1]

**மாறவர்மன் சுந்தர பாண்டியன் காசு**

பிற்காலப் பாண்டியர்களில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி. பி. 1216-1238) மிகச் சிறந்த மன்னனாக விளங்கினான். இவன் சோழ மன்னன் மூன்றாம் இராசராசன் மீது படையெடுத்துச் சென்று, சோழ அரசனை வென்று, தஞ்சையையும், உறந்தையையும் செந்தழலுக்கு உட்படுத்தியதோடு சிதம்பரம் வரை சென்று பொன்னம்பல நாதரைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வருகின்ற போது, காவிரிப்பூம்பட்டினத்தில் உருத்திரங்கண்ணனார் சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தான் மீது பட்டினப்பாலை பாடியமைக்காகப் பரிசாக வழங்கப் பெற்ற 16 கால் மண்டபத்தை மட்டும் விட்டுவிட்டு மற்றப் பகுதிகளையும் அழித்தான்.[2] அதற்குப் பிறகு சோழர்களின் இரண்டாம் தலைநகராக விளங்கிய ஆயிரத்தளியிலுள்ள சோழர் மாளிகையை அடைந்து ஆங்கு வீராபிஷேகம் செய்து கொண்டு தம் நாடு திரும்பினான். அதன் பின்னர், தம்முடைய சோழ நாட்டு வெற்றிக்கு உறுதுணையாக இருந்த வாணகுல மன்னனுக்குச் சோழர் தம் முடியை வழங்கினான் என்பதை இம்மன்னனின் மெய்க்கீர்த்தி கீழ்வருமாறு புலப் படுத்துகிறது.

---

1. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study, p. 94
2. "வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்ட [தொன்றும்
அறியாத செம்பியன் காவிரிநாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய்பட்டினப்பாலைக் [கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமேயங்கு நின்றனவே".
— (திருவெள்ளறைக் கல்வெட்டு, செந்தமிழ்-தொகுதி 41, பக்கம். 215)

'செம்பியனைச் சினமிரியப் பொழுதுசுரம் புகவோட்டிப்
பைம்பொன் முடிபறித்துப் பாணனுக்குக் கொடுத்தருளி'

என்று புலப்படுத்துகிறது.[1]

சோழர் நாட்டை வெற்றிக் கொண்டு மீண்டும் அதைச் சோழ மன்னனிடமே ஒப்படைத்ததின் அடையாளமாக இப்பாண்டிய மன்னன் **'சோணாடு கொண்டருளிய' 'சோணாடு வழங்கி அருளிய'** என்ற பட்டங்களைத் தரித்துக் கொண்டான். சோழ நாட்டை வெற்றி பெற்றதன் அடையாளமாக **சோணாடு கொண்டான்** என்று பொறிக்கப் பட்டுள்ள ஒரு காசையும் இவன் வெளியிட்டு இருக்கிறான். இக்காசு கி. பி. 1220-ஆம் ஆண்டு அளவில் வெளியிடப் பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது[2]. இக்காசில் முன்பக்கம் **சோணாடு கொண்டான்** என்று தமிழில் எழுதப் பெற்றும், பின்பக்கம் நிற்கும் மனித உருவமும் காணப்படு கின்றன.

**ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காசுகள்**

இம்மன்னன் கி. பி. 1251லிருந்து 1274 முடிய ஆட்சி செய்தவன். பிற்காலப் பாண்டிய மன்னர்களிலேயே மிகவும் வலிமை பொருந்திய மன்னனாக இவன் விளங்கி இருக்கிறான். இம்மன்னன் பிற்காலச் சோழர் ஆட்சியின் இறுதி மன்னனாக விளங்கிய மூன்றாம் ராஜேந்திரனை வெற்றி கொண்டு மேலும் வடக்கே சென்று தெலுங்குச் சோழ மன்னனது ஆட்சிக்குட்பட்டிருந்த காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினான். அத்தோடு நில்லாமல் ஆந்திர மாநிலம் நெல்லூர் வரை படையெடுத்துச் சென்று அந்நெல்லூரில் வீராபிஷேகம் செய்து கொண்டான்.[3] ஆந்திர மாநிலம் நெல்லூரிலிருந்து தமிழகத் தின் கடைக்கோடியான கன்னியாகுமரி வரை இவனது ஆட்சி

---

1. T. V. சதாசிவபண்டாரத்தார், 'பாண்டியர் வரலாறு' (வெளியீடு 1969), பக்கம், 214
2. Tamil Coins - A Study, p. 97
3. ARE. 361 of 1913; S.I.I. Vol. IV, No. 624, 631

பரவியிருந்தது. தமிழகத்தில் சோழர்களுக்கு உறுதுணையாக இருந்த போசள மன்னன் வீர சோமேசுவரனை இவன் தோற்கடித்தான். மற்றும் சேர மன்னனையும் இவன் வெற்றி பெற்றான். இவ்வெற்றிகளின் காரணமாக இம்மன்னன் பல பட்டங்களைத் தரித்து இருக்கிறான். குறிப்பாகக் 'காஞ்சிபுரம் கொண்டான், காஞ்சிபுரவராதீஸ்வர, எல்லாம் தலையான பெருமாள், எம்மண்டலமும் கொண்டருளிய' போன்ற பட்டங்கள் இவனது வெற்றிக்குச் சான்றுகள். மேலும் இம் மன்னன் தில்லை மற்றும் திருவரங்கக் கோயில்களுக்குப் பொன் வேய்ந்து பல கொடைகளையும் அளித்து, துலாபாரமும் செய்திருக்கிறான்.[1] கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகக் கீழ்வரும் காசுகள் கூறப்படுகின்றன.[2]

1. 'சுந்தர பாண்டியன்'
2. 'வீர பாண்டியன்'
3. 'சோணாடு கொண்டான்'
4. 'கச்சி வழங்கும் பெருமாள்'
5. 'கோதண்ட ராமன்'
6. 'எல்லாம் தலையானான்' மற்றும்
7. 'குலசேகர'

என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்ற நாணயங்களாகும்.

இம்மன்னனின் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள காசுகளில் 'கச்சி வழங்கும் பெருமாள்' என்று எழுதப்பட்டுள்ள காசு, நாணயவியல் தந்தை என்று வழங்கப்பெறும் சர் வால்டர் எலியட் அவர்களின் நூலில் 145-ஆம் எண் உள்ள படமாக வெளியிடப்பட்டுள்ளது.[3]

---

1. S.I.I. Vol. IV, No 620, 628, 629, 630; Epi. Ind. Vol. III; pp. 7-17
2. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study, pp. 98-99
3. Coins of South India, (Pub. 1975) Plate IV, No. 145

இக்காசின் பின்பக்கத்தில் **'கச்சி வழங்கும் பெருமாள்,** என்று மூன்று வரிகளில் எழுதப்பட்டிருப்பதாக நாகசாமி எழுதியுள்ளார்.[1] ஆனால் அக்காசில் நான்கு வரிகளில் எழுதப் பட்டிருப்பதாகத்தெரிகிறது. இது ஒரு செப்புக் காசு. தேசிகாச் சாரி எழுதியுள்ள நூலில் 39லிருந்து 43-ஆம் எண் உள்ள வரை யான படங்கள் இக்காசின் படங்களாகும். இவ்வகைக்காசுகள் கி.பி. 1260க்கும் 1365க்கும் இடைப்பட்ட காலத்தில் வெளி யிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.[2] மற்றொரு வகைக் காசில் குறுக்கும் நெடுக்குமாக உள்ள இருகயல் களுக்கிடையில் உள்ள 'சு' என்ற எழுத்தைச் சுந்தர பாண்டியன் என்பதின் சுருக்கம் என்று கருதி இக்காசைச், காசுயியல் வல்லுநர்களில் சிலர் மாறவர்மன் சுந்தர பாண்டிய னால் வெளியிடப்பட்டது என்றும்; சிலர் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனால் வெளியிடப்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

இம்மன்னனது மற்றொரு காசில் **'எல்லாம் தலை யானான்'** என்று எழுதப்பட்டு இருக்கிறது. இக்காசு ஐந்து வகைகளில் காணமுடிகிறது.

முதலாம் வகை **எல்லாம் தலையானான்'** என்று மூன்று வரிகளில் எழுதப்பெற்றுக் காணப்படுவது

இரண்டாம் வகைக் காசில் ஒரு மீன் குத்திட்டு நிற்கும் நிலையிலும் இரு பக்கங்களிலும் விளக்கும், அதனைச் சுற்றி தமிழ் எழுத்தில் **'எல்லாம் தலையானான்'** என்றும் எழுதப் பெற்று உள்ளது.

மூன்றாம் வகையில் இரண்டு மீன்கள் குத்திட்டு நிற்கின்ற நிலையிலும் அதனைச் சுற்றி **'எல்லாம் தலையானான்'** என்று தமிழ் எழுத்தில் எழுதப்பெற்று இருக்கிறது.

நான்காம் வகையில் இரண்டு மீன்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் சாய்ந்த நிலையில் ஆங்கில எழுத்து 'வி'

---

1. Tamil Coins - A Study, p. 101
2. Ibid, P. 101.

வடிவம் போன்று காணப்படுவதும்; இரு மீன்களுக்கு இடையில் **'எல்லாம் தலையானான்'** என்று எழுதப் பெற்றிருப்பதும் ஆகும்.

ஐந்தாம் வகையில் இரு மீன்களும் தலைப்பகுதியில் அருகருகாமையிலும்; வால்பகுதி ஒவ்வொரு பக்கம் சாய்ந்தும் காணப்படுவதோடு; அம்மீன்களின் இடைப்பகுதியில் **'எல்லாம் தலையானான்'** என்று எழுதப்பெற்று இருப்பதும் ஆகும்.

இவ்வாறு ஐந்து வகைகளில் காணப்படுவது, இக்காசை வெளியிட்ட மன்னன் வேண்டுமென்றே இம்மாதிரி சிறுசிறு வேறுபாடுகளோடு வெளியிட்டிருப்பான் போன்று தெரிகிறதாக ஊகிக்கப்படுகிறது.[1]

இவன் காலத்திய மற்றொரு வகையான காசில் முன்பக்கம் இரண்டு மீன்கள் குத்திட்டு நின்ற நிலையிலும் நடுவில் செண்டும் (சாட்டை) காணப்படுகிறது. பின்பக்கம் **'கோதண்டராமன்,** என்று மூன்று வரிகளில், குடை மற்றும் சாமரங்களுக்குக் கீழே எழுதப்பெற்று இருக்கிறது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுக்குக் **கோதண்டராமன்** என்ற பட்டப்பெயர் இருந்தது என்பது கடலூர் வள்ளலார் மாவட்டத்தைச் சார்ந்த தீர்த்தநகரி என்ற ஊரில் காணப்பெறும் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. அக்கல்வெட்டு ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தைச் சார்ந்ததாகும். அதில் "நம் பேரால் கட்டின கோதண்டராமன் சந்திக்கு" என்று பொறிக்கப் பெற்று இருப்பதால் தெளிவாகிறது. ஆதலால் கோதண்டராமன் என்று எழுதப்பெற்றிருக்கும் இக்காசும் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனாலேயே வெளியிடப்பட்டு இருக்கும் என்று டாக்டர் நாகசாமி கருதுகிறார்.[2] ஆனால் சேதுராமன் இக்காசை

1. Tamil Coins - A Study, p. 102
2. Ibid., p. 103

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சடையவர்மன் சுந்தரனாகிய கோதண்டராமனே வெளியிட்டிருக்க வேண்டும் என்கிறார்.[1]

**குலசேகரன் காசு**

தனிப்பட்ட ஒருவரிடமிருந்து ஒரு காசைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பெற்று ஒளிப்படம் எடுத்த தாகவும் அதில் கீழ்க்காணுமாறு உருவங்கள் மட்டும் காணப் படுகின்றன என்றும் நாகசாமி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[2] இக்காசின் முன்பக்கம் இருகயல் மற்றும் சாட்டை, புலி, வில் ஆகியவற்றின் உருவங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக உள்ளன. புலியின் முன்பக்கம் வாளின் உருவமும் பின்பக்கம் பிறைச் சந்திரன் உருவமும் காணப்படுகின்றன. (இவை முன்பக்கம் உள்ளன என்று நூலில் மையப்பகுதியிலும்; பின்பக்கம் உள்ளன என்று படம் வெளியிட்டிருக்கும் இடத்திலும் கூறியுள்ளார்.) பின்பக்கம் நிற்கும் மனித உருவமும், இடக்கரத் தின் கீழ் ஒரு விளக்கும் ஆகும். (படம் வெளியிடப்பட்டுள்ள இடத்தில் மனித உருவத்தின் இடக்கரத்துக்குக் கீழ் தலையில் லாத ஒரு நடன மங்கையின் உருவமாக இருக்கலாமோ என்று எழுதியுள்ளார்)

இக்காசு மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு முன்பாக ஆட்சிபுரிந்த குலசேகர பாண்டியனால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இம்மன்னனின் 'பூதல வனிதை' எனத்தொடங்கும் மெய்க்கீர்த்தியில் 'வெஞ்சின வேங்கை வில்லுடன் ஒளிப்ப' என்று குறிப்பிடப்படுவதால், இவன் சோழனையும், சேரனையும் வென்றிருக்கிறான் என்பது புலப்படுகிறது; ஆதலால் இவன் காலத்தில் இக்காசு வெளி யிடப்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.[3]

---

1. இராமன் பெயரில் பாண்டியன் காசுகள், தினமலர், 23-5-89
2. Tamil Coins - A Study, p. 99
3. Ibid., p. 99-100

'குலசேகர' என்று எழுதப்பட்டு காணப்பெறும் காசுகள் சிலவும் கிடைத்திருக்குன்றன. நான்கு வகைகளில் இக்காசு காணப்படுகிறது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு முடிய குலசேகரன் என்று பெயர் பெற்றிருந்த பாண்டிய மன்னர்களில் எந்த மன்னனால் இவை வெளியிடப் பட்டன என்று இனம் காணுவதில் குழப்பம் ஏற்படுகிறது. இருப்பினும் தம்மால் ஓரளவுக்கு இனம் காண முடிந்ததைத் தெரிவித்திருப்பதாக நாகசாமி தம் நூலில் தெரிவித்துள்ளார். மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் இருவகைக் காசுகளை 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆட்சி செய்த மாறவர்மன் குலசேகரன் வெளியிட்டிருக்க வேண்டும் என்றும்; மற்ற இருவகைகளில் ஒரு வகையில் யானை உருவம் இருப்பதால் சேரமன்னன் குலசேகரன் காலத்தையும் மற்றொன்று கி.பி. 14-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை என்றும் கூறியுள்ளார்[1] மூன்றாம் வகை கூட பாண்டிய மன்னனுடையதாகவே கருதலாம். ஏனெனில் பாண்டியர்களின் சங்க காலக் காசுகளில்கூட யானையின் உருவம் முன்பக்கமும், மீனின் உருவம் பின்பக்கமும் காணப்படுவதாலாகும். யானை உருவம் வலிமையைத்தான் குறிக்கும். சங்ககாலச் சோழர் காசுகளிலும் முன்பக்கம் யானை உருவம் உள்ளது. சேரர் காசாகக் கொள்ள வேண்டுமெனில் **வில்** உருவம் காணப்படுதல் வேண்டும். அது இக்காசில் இல்லை.

### சுந்தரபாண்டியன் காசு

**'சுந்தரபாண்டியன்'** என்று பொறிக்கப்பட்ட பல காசுகள் தமிழகத்தில் கிடைத்து வருகின்றன. இக்காசுகளில் ஒரு வகைக் காசில் பின்பக்கம் பன்றி உருவமும், மற்றொரு வகையில் புத்தர் போன்ற உருவமும் காணப்படுகின்றன. அக்காசுகளைப் பற்றி இந்நூலில் வேறோரிடத்தில் விளக்கப்பட்டுள்ளது.[2] பிற வகையான காசுகள் சிலவும் கிடைத்துள்ளன. சுந்தரபாண்டியன் என்ற பெயரில் பல பாண்டிய மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களில் எந்த சுந்தரபாண்டியனால் இவை வெளியிடப்

---

1. Tamil Coins - A Study, p. 105-106
2. *Op. cit.* p. 74-76.

பட்டன என்று அறிவது சிக்கலாக உள்ளது. அவை இப்பிரிவின் (Chapter) இறுதியில் தரப்பட்டுள்ள பாண்டியர் காசுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

**அவனிபேந்திரன் காசு**

சர். டி. தேசிகாச்சாரி தம் 'தென்னிந்திய காசுகள்' என்னும் நூலில் படம் எண் 63-ல் ஒரு காசின் படத்தைப் போட்டு அதில் முன்பக்கம் ஒரு கயல், கயலின் இரு பக்கங்களிலும் விளக்கு அல்லது செங்கோல், இவைகளுக்கு மேலே கொற்றக் குடை ஆகியவையும், பின்பக்கம் கொற்றக் குடைக்குக் கீழ் இரு விளக்குகளுக்கு நடுவில் 'அவனிபேந்திரன்' என்று எழுதியிருப்பதாகவும் குறிப்பிட்டு, இதனை ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் வெளியிட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.[1] இக்காசை ஆய்ந்த நாகசாமி முன்பக்கத்தில் இருகயல்கள் காணப் படுவதாகச் சரியாகக் கூறியுள்ளார். மேலும் இக்காசைக் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டு காலத்தில் வெளியிடப்பட்ட தாகக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.[2] கல்வெட்டு சான்றுகளோடு ஒப்பிட்டு இக்காசை மேலும் ஆய்வு செய்த குடந்தைச் சேதுராமன், குலசேகரபாண்டியனின் இரண்டாம் மகனான சடையன் சுந்தரபாண்டியன் காலத்தியது என்று எழுதியுள்ளார்.[3] இதையே வசந்தி, கி. பி. 1303ல் ஆட்சிக்கு வந்த நான்காம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கூறியுள்ளார்.[4] **'அவனிபேந்திர'** என்ற பட்டம் கொண்ட சுந்தரபாண்டியன் உத்திரட்டாதி என்ற நட்சத்திரத்தில் பிறந்தவனாகவும் குறிக்கப்படுகிறான். மூல நட்சத்திரத்தில் பிறந்த முதலாம் ஜடாவர்மனும், புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்த ஐந்தாம் ஜடாவர்மனும் இக்காசை வெளியிட்டிருக்க முடியாது என்று கொள்ளப்பட்டிருக்கிறது.

---

1. South Indian Coins p. 176, Plate III No. 63
2. Tamil Coins - A Study, p. 84.
3. இராமன் பெயரில் பாண்டியன் காசுகள், தினமலர், 23-5-89.
4. Studies in South Indian Coins, Vol. I, (1991) pp. 95-97

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவனும், அவனி வேந்தராமன் என்ற பட்டம் பூண்டவனுமான சுந்தர பாண்டியன் 23 ஆண்டுகள் வரை ஆட்சி செய்திருக்கிறான். நான்காம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனும் 23 ஆண்டுகள் முடிய ஆட்சி செய்துள்ளான். ஆதலால் அவன் காலத்தில்தான் இக்காசு வெளியிடப்பட்டிருக்கக் கூடும் என்றும்; கி. பி. 1277 முதல் 1294 முடிய ஆட்சி புரிந்த இரண்டாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியனாலும் கி.பி. 1278 முதல் 1301 முடிய ஆட்சி செய்த மூன்றாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியனாலும் இக்காசு வெளியிடப்பட்டிருக்க முடியாது என்றும் தீர்மானித்துள்ளனர்.

நான்காம் சுந்தரபாண்டியன் 23 ஆண்டுகள் ஆட்சி செய்தது போன்றே, கி. பி. 1278 முதல் ஆளத்தொடங்கிய மூன்றாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியனும் கி பி. 1301 வரை 23 ஆண்டுகள் ஆண்டிருக்கிறான். ஆதலால் நான்காம் ஜடாவர்ம சுந்தரபாண்டியனோ அல்லது மூன்றாம் சுந்தர பாண்டியனோ இக்காசை வெளியிட்டிருக்க வாய்ப்பு காணப் படுகிறது.

# பாண்டியர் காசுகள்

**அவனிபசேகரன்**
*(கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு)*

1. முன்பக்கம் : குத்திட்டு நிற்கும் நிலையில் இரு கயல்கள்

 பின்பக்கம் : **ஸ்ரீஅவநிபசேகரன் கொளக** என்று மூன்று வரிகளில் தமிழில். செம்பு

**இரண்டாம் வரகுணன்**
*(கி.பி. 9-10 - ஆம் நூற்றாண்டு)*

1. முன்பக்கம் : படுத்த நிலையில் இரு கயல்கள்

 பின்பக்கம் : **'ஸ்ரீவரகுண'** என்று ஒரு வரியில் கிரந்த எழுத்தில். தங்கம்.

**சுந்தரபாண்டியன்**
*(கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு)*

1. முன்பக்கம் : **'சுந்தரபாண்டியன்'** என்று இரு வரிகளில் தமிழ் எழுத்தில், கீழே இருகயல்கள், இடையில் சாட்டை.

 பின்பக்கம் : இடப்பக்கம் திரும்பிய பன்றி, மேலே சக்கரம், பிறைச்சந்திரன், சூரியன், சங்கு, செம்பு.

2. முன்பக்கம் : பத்மாசனத்தில் அமர்ந்து அஞ்சலித்த நிலையில் உருவம். அதனிரு பக்கங்களிலும் கீழும் **'சுந்தர பாண்டியன்'** என்று மூன்று வரிகளில் தமிழில்

 பின்பக்கம் : இருகயல், நடுவில் சாட்டை. மேலே கொற்றக்குடை மற்றும் சாமரங்கள். செம்பு

**வீரபாண்டியன்**
**(கி.பி. 12 - ஆம் நூற்றாண்டு)**

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம். இடக்கரத்துக்குக் கீழ் மூன்று அல்லது அதற்கு மேலான புள்ளிகள்.

பின்பக்கம் : 'வீரபாண்டியன்' என்று தமிழ் எழுத்தில், கீழே இருகயல், இடையில் சாட்டை, பக்கங்களில் விளக்கு. செம்பு

**மாறவர்மன் சுந்தரபாண்டியன்**
**(கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு)**

1. முன்பக்கம் : 'சோணாடு கொண்டான்' என்று மூன்று வரிகளில் தமிழில்

பின்பக்கம் : நிற்கும் மனித உருவம். செம்பு.

**ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்**
**(கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு)**

1. முன்பக்கம் : குறுக்கும் நெடுக்குமாக (Cross) இருகயல், பிறைச்சந்திரன், மூவிலைவேல் (திரிசூலம்)

பின்பக்கம் : 'கச்சி வழங்கும் பெருமாள்' என்று நான்கு வரிகளில், தமிழில். செம்பு. (எலியட் நூலின் படம், எண். 145)

2. முன்பக்கம் : குறுக்கும் நெடுக்குமாக இருகயல், மற்ற சின்னங்களில் சில வேறுபாட்டுடன் (தேசிகாச்சாரி நூலில் 39 முதல் 43a முடிய)

பின்பக்கம் : 'கச்சி வழங்கும் பெருமாள்' என்று மூன்று வரிகளில் தமிழில் (எண் 43a), செம்பு.

3. முன்பக்கம் : குறுக்கும் நெடுக்குமாக இருகயல், வகை 1-ல் உள்ள சில சின்னங்கள், புதிதாக '**சு**' என்ற எழுத்து.
**'கச்சி வழங்கும் பெருமாள்'** என்று மூன்று வரிகளில் தமிழில். செம்பு.

4. முன்பக்கம் . மனித உருவம் நின்ற நிலை
பின்பக்கம் : **'எல்லாந்தலை'** என்று மூன்று வரிகளில், தமிழில். செம்பு

5. முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை
பின்பக்கம் : நடுவில் ஒரு கயல், இரு பக்கங்களிலும் விளக்கு, சுற்றிலும் **'எல்லாந்தலை யானான்'** தமிழில். செம்பு.

6. முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை
பின்பக்கம் : V போன்ற வடிவில் காணப்பெறும் இரு கயல்களுக்கு நடுவில் **'எல்லாந்தலை யானான்'** என்று தமிழில். செம்பு.

7. முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை
பின்பக்கம் : நடுவில் இருகயல், சுற்றிலும் **'எல்லாந் தலையானான்'**.

8. முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை.
பின்பக்கம் : தலைகள் சேர்ந்து சாய்ந்து வால் பக்கம் விலகி உள்ள இரு கயல்களுக்கு நடுவில் **'எல்லாந்தலையானான்'** என்று தமிழில். செம்பு.

9. முன்பக்கம் : இரு கயல் குத்திட்டு நிற்கும் நிலை அவைகளுக்கிடையில் சாட்டை.
பின்பக்கம் : **'கோதண்டராமன்'** என்று மூன்று வரி களில், தமிழில். மேலே கொற்றக்குடை மற்றும் சாமரங்கள். செம்பு.

குலசேகரன் ?

(கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு)

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம். இடக்கரத்தின் கீழ் ஒரு விளக்கு.

பின்பக்கம் : இரு கயல், சாட்டை, புலி, வில் ஆகிய வற்றின் உருவங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாக உள்ளன. புலியின் முன்பாக வாள், பின்பாகப் பிறைச்சந்திரன்.

2 முன்பக்கம் : புலி இடப்பக்கம் திரும்பிய நிலை, இதன் மேல்பகுதியில் இருகயல், நடுவில் சாட்டை.

பின்பக்கம் : மனித உருவம்.

சுந்தரபாண்டியன் :

(கி.பி. 11-14-ஆம் நூற்றாண்டு)

1. முன்பக்கம் : குத்திட்டு நிற்கும் இரு கயல், சாட்டையின் நுனிப்பகுதி வலப்பக்கம் வளைந்தும் அடிப்பகுதியில் கைப்பிடியோடும் காணப் படுகிறது. சாட்டைக்கு மேல்பகுதியில் பிறைச் சந்திரன்.

பின்பக்கம் : **'சுந்தரபாண்டியன்'** என்று மூன்று வரிகளில் தமிழில். சாட்டையும், அதற்கு மேல் பகுதியில் பிறைச்சந்திரனும் சாட்டைக்குக் கீழே ஒரு புள்ளியும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது. செம்பு

2\. முன்பக்கம் : குத்திட்டு நிற்கும் நிலையில் இரு கயல், நடுவில் சாட்டை. சாட்டையின் நுனி இடப்பக்கம் திரும்பிய நிலை. சாட்டைக்கு மேல் பகுதியில் பிறைச்சந்திரன். சாட்டைக்கும் பிறைக்கும் நடுவில் இரு புள்ளிகள். வலக்கோடியில் ஒரு எழுத்து இருப்பது போன்று தெரிகிறது. இது 'ஸ்ரீ' யாக இருக்கலாம் என்று நாகாாமி கூறியுள்ளார்[1]

பின்பக்கம் : 'சுந்தரபாண்டியன்' என்று தமிழில் செம்பு.

3\. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : 'சுந்தரபாண்டியன்' என்று தமிழில் செம்பு. சிறிய அளவில் இக்காசுகள் கிடைப்பதால் குறைந்த மதிப்புடையனவாக இருக்கலாம் என்றும்; கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் கொள்ளப்படுகிறது.

---

1\. இவ்வெழுத்து 'கு' அல்லது 'சு' ஆக இருக்கலாம். அல்லது வரம்பையொட்டி காணப்பெறும் புள்ளியாகவும் இருக்கலாம், பாண்டியர் காசுகளில் 'ஸ்ரீவரகுண' என்ற காசைத் தவிர மற்றவை அனைத்தும் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. ஒரே ஒரு வகைக் காசில் 'ஸ்ரீஅவநிபசேகரகொளக' என்று முதல் எழுத்து மட்டும் கிரந்தத்தில் உள்ளது. இவ்விரு காசுகளும் முற்காலப் பாண்டியர் வழி வந்தவர்களைச் சேர்ந்தவை. பிற்காலப் பாண்டியர் காசுகளில் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. குறிப்பாகச் சுந்தரபாண்டியன் காசுகளில் தமிழில்தான் எழுதப்பட்டிருக்கின்றன.

4. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம். இடக்கரத்துக்கு மேல் விளக்கு (கீழ் இல்லை)

பின்பக்கம் : குத்திட்டு நிற்கும் ஒரு கயல். இடப்பக்கம் மேல் பகுதியில் பிறை; அதற்குக் கீழ் 'சுந்தர' என்று வரம்பையொட்டி இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளது. கி.பி. 1300ல் வெளியிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. (நாகசாமி, வலப்பக்கம் எழுதப் பட்டுள்ளதாக கூறியுள்ளார்).

5. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம், இரு பக்கங்களிலும் விளக்கு.

பின்பக்கம் : உட்காந்திருக்கும் மனித உருவம் இடக் கரத்துக்குக் கீழ் 'சுந்தரபாண்டியன்' என்று தமிழில். செம்பு. 13 - ஆம் நூற்றாண்டு.

6. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம். இரு பக்கங்களிலும் விளக்கு

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் நிலையில் மனித உருவம். இடக்கரத்துக்குக் கீழ் 'சுந்த' என்று தமிழில். செம்பு. கி.பி. 14 - ஆம் நூற்றாண்டு

குலசேகரன்

கி. பி. 12-14 ஆம் நூற்றாண்டு

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : 'குலசேகர' என்று தமிழில், கீழே இரு கயல்கள், வலப்பக்கம் நுனி இரு வளைவுகளாகத் திரும்பி உள்ள சாட்டை. செம்பு

2. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : கொற்றக்குடை, சாமரம். இவைகளுக்குக்கீழ் 'குலசேகரன்' என்று தமிழில். செம்பு.

3. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்.

பின்பக்கம் : உட்கார்ந்திருக்கும் மனித உருவம். 'குல' என்று தமிழில், செம்பு. 14-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.

4. முன்பக்கம் : இடப்பக்கம் திரும்பி நிற்கும் யானை.

பின்பக்கம் : 'குலசேகர' என்று தமிழில். கீழே சாட்டையை நடுவில் கொண்ட இரு கயல்கள்

**அவனிவேந்தராமன்**
**(கி.பி. 14 - ஆம் நூற்றாண்டு)**
**(அவனிபேந்திரன்)**

1. முன்பக்கம் : கொற்றக்குடை, ஒரு கயல், இரு பக்கங்களிலும் விளக்கு.

பின்பக்கம் : 'அவனிவேந்தராமன்' என்று மூன்று வரிகளில் தமிழில். செம்பு.

பிரிவு பதினொன்று

# கண்ட கோபாலன் மாடை

தமிழகத்தின் தென் பகுதியில் நடைபெற்ற பாண்டிய ராட்சி உறுதியற்ற நிலைமையில், தாயாதிப் போரில் சிக்கித் தவித்திருந்த நிலையில் தமிழகத்தின் வடபகுதி பல அரச வமிசத்தின் ஆதிக்கத்திற்கு உள்ளாகியது. குறிப்பாகக் காகதீய மன்னர்கள், தெலுங்குச் சோழ மன்னர்கள் மற்றும் சேர அரசின் இரவிவர்மன் குலசேகரன் ஆகியோர் காஞ்சி புரத்தைத் தலைநகரமாகக் கொண்டு மாறிமாறி ஆட்சி புரிந் ததைக் கூறலாம். இந்தகாலக் கட்டத்தில் தெலுங்குச் சோழ மன்னர்களில் ஒருவனான கண்டகோபாலன் என்பவன் தன் பெயரில் **கண்டகோபாலன் மாடை** என்ற தங்கக் காசை வெளி யிட்டுருக்கிறான் இச்செய்தி கல்வெட்டுக்களினால் புலனா கிறது **கண்டகோபாலன் பழமாடை, கண்டகோபாலன் புதுமாடை**[1] என்று இருவகை நாணயங்கள் புழக்கத்தில் இருந்த தாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. **கண்டகோபாலன் வாசிபடா புதுமாடை** என்றும்; கண்டகோபாலன் புதுமாடை ஒன்றைக் கல்வெட்டு குறிக்கிறது.[2]

அண்மையில் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் குறிஞ்சிப்பாடிக்கருகில் உள்ள வரதராஜன்பேட்டை என்னும் ஊரிலிருந்து அக்கிராமத்தைச் சார்ந்த விவசாயி ஒருவரால் தங்கக் காசுகளும், சில தங்கக் கட்டிகளும், தங்க அணிகலன்

1. A.R.E. No. 561 of 1912
2. Ibid. Nos. 432 and 434 of 1919

களும் கண்டெடுக்கப்பட்டன.[1] இவற்றில் **கண்ட** என்று தமிழ் எழுத்தில் எழுதப் பெற்ற 70 தங்கக் காசுகளும், கங்கர் காலத்தியக் காசுகள் ஆறும் இருந்தன.[2]

இக்காசின் முன்புறம் விளிம்புப் பகுதியில் **கண்ட** என்று சோழர் காலத் தமிழ் எழுத்திலும், **வேணுகோபாலன்** உருவம் தலைகீழாகவும், இவ்வுருவத்துக்கு இரு புறங்களிலும் ஸ்ரீ என்று தெலுங்கு எழுத்திலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. வேணு கோபாலன் உருவத்தின் தலைப் பகுதிக்கு மேல் சந்திரன், வெண்கொற்றக் குடை மற்றும் சூரியன் உருவங்களும் காணப் படுகின்றன. பின்புறத்தில் குறுக்கும் நெடுக்குமாகச் சில கோடுகள் உள்ளன. இக்காசுகள் தக்கணப் பகுதியில் பழக் கத்தில் இருந்த காசுகள் போன்று அச்சுகுத்தப் பெற்று (Die) காணப்பெறுகின்றன. ஆதலால் இவை ஆந்திரப் பகுதியில் தயாரிக்கப் பெற்றவைகளாக இருக்கலாம்.

இக்காசின் முன்புறத்தில் காணப்பெறும் **கண்ட** என்ற வாசகத்தையும் வேணுகோபாலனது உருவத்தையும் இணைத்து பார்த்தோமானால் **கண்டகோபாலன்** என்ற பெயர் தெளி வாகும். கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் **கண்டகோபாலன் வாசிபடாபுது மாடை** என்பது இதுவேயாகும் என்பது ஆசிரியரின் கருத்து.[3]

**கண்டகோபாலன் மாடை** என்னும் காசு கல்வெட்டுக் களில் கி. பி. 1181லிருந்து 1259 முடிய குறிக்கப்படுகிறது. அவ்வாறெனில் கி. பி. 12-13-ஆம் நூற்றாண்டில் இக்காசு தமிழகத்தில் வடக்குப்பகுதியில் புழக்கத்தில் இருந்திருக்கிறது

---

1. இப்புதையல் பற்றி நாளிதழ்களில் செய்தி வெளியானதும் இவற்றை இத்துறையின் பதிவு அலுவலர் திரு மா.சந்திர மூர்த்தி ஆய்ந்து அறிக்கை அனுப்பினார்:
2. இக்கட்டுரையாசிரியர் முதன்முதலில் இவற்றை ஆய்வு செய்தபோது இவை காகதியமன்னன் கணபதியின் காசு என்று தெரிவித்தார் 'ஹிண்டு' நாள் 10-3-89 (சென்னைப் பதிப்பு)
3. Natana. Kasinathan, Kandagopalan Madai, Studies in South Indian Coins. Vol. I, also see Art Panorama of Tamils, pp. 51–53

என்பது புலனாகும். தெலுங்குச் சோழ மன்னர்களில் மூவரின் பெயரில் கண்டகோபாலன் என்ற பெயர் ஒட்டு காணப்படுகிறது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதலாம் திக்கன் என்னும் திருக்காளத்திதேவன் என்னும் கண்டகோபாலன் என்பவன் ஒருவன். இம்மன்னன் கி.பி. 1223 முதல் 1250 முடிய ஆட்சி செய்துள்ளான். கி.பி. 1250 முதல் 1291 முடிய ஆட்சி புரிந்த மன்மசித்தி என்னும் விஜய கண்டகோபாலதேவன் மற்றொருவன். கி.பி. 1291 முதல் 1297 முடிய ஆட்சிக் கட்டிலிருந்த வீரகண்டகோபாலதேவன் மூன்றாமவனாவான். பின்னிருவர்களும் விஜய, வீர என்ற முன்னொட்டுக்களை முறையே கொண்டிருந்ததால் இவர்களால் இக்காசு வெளியிட்டிருக்கலாகாது முதலாம் திக்கனாகிய திருககாளத்திதேவன் என்ற கண்டகோபாலனாலேயே வாசிபடாபுது மாடை வெளியிடப்பட்டிருக்கும் என்று திடமாகக் கொள்ளலாம்.

முதலாம் திக்கன் தீவிர வைணவப் பற்றாளன். இவன் தம் பெயரில் **கண்டகோபாலன் சந்தி** என்ற வழிபாட்டைக் காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் ஏற்படுத்தி அதற்குக் கொடை அளித்திருக்கிறான்.[1] இவனது மனைவி இலக்ஷ்மிதேவியும் ஒரு தீவிர வைணவப் பற்றாளர். அருளாளப் பெருமாள் கோயிலுக்கு இவரும் நிலக்கொடையளித்து, அந்நிலத்தின் எல்லைக் கற்களில் **கண்டகோபாலனது** உருவத்தைப் பொறிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறாள்.[2] முதலாம் திக்கன் காலத்திலேயே **கண்டகோபாலன் சதுர்வேதி மங்கலம்** என்று ஒரு ஊரும் இருந்திருக்கிறது.[3]

தமிழகத்தில் வரதராஜப்பேட்டையில் கிடைத்துள்ள காசுக்குவியலில்தான் இவ்வகைக் காசு இவ்வளவு அதிகமாகக் கிடைத்துள்ளது. இக்காசுகள் இன்னமும் கடலூர் துணைக் கருவூலத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

---

1. ARE No. 607 of 1919
2. Ibid. No. 415 of 1919
3. K.A. Nilakanta Sastri 'The Cholas' pp. 367-388

இதறகு முன்பாக ஒரேயொரு காசு திருசசியைச சார்ந்த திரு. ஆறுமுகம என ற காசு சேர்ப்பாளரிடமிருநது பெறப்பட்டு தமிழ்நாடு அரசு தொலபொருள் ஆயவுத துறையால் ஒளிப் படம் எடுககபபட்டு துறை ஒளிப்படத தொகுப்பில உள்ளது. அப்பொழுது இது யாருடைய காசு எனறு கண்டறியப்பட விலலை தெனனிநதியக காசியல தந்தையான சர் வால்டர் எலியட அவர்களின சிறநத நூலான **தென்னிந்தியக் காசுகள** (Coinage of South India) எனற நூலிலும் இததகைய ஒரு காசு தஞசாவூரிலிருநது கிடைததிருப்பதாகக கூறபபட்டுளளது. ஆனால அநநூலிலும இது யாருடைய காலததில வெளியிடப் பட்டது எனபது பறறியோ, காசில காணப்பெறும தமிழ் வாசகம பறறியோ குறிப்புகள யாதும காணப் பெறவிலலை [1]

---

1 Elliot, Coinage of South India, page 150, Plate I, No. 12

பிரிவு பன்னிரண்டு

# வீரச்சம்பன் குளிகை

செங்கல்பட்டு எம் ஜி.ஆர். வடார்க்காடு அம்பேத்கார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங் களில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் **வீரச் சம்பன் குளிகை** என்று ஒருவகைக் காசு பேசப்படுகிறது. காசின் பெயரைக் கொண்டு பார்க்கையில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் படைவீட்டு இராச்சியத்தை ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னன் ஒருவரால் இது வெளியிடப் பெற் றிருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. ஆனால் இக்காசு பற்றி பாண்டியர் மற்றும் விசய நகர மன்னர் காலத்துக் கல்வெட்டுக் களும் குறிப்பிடுகின்றன.[1]

மேலும் எந்தச் சம்புவராய மன்னனால் இது வெளியிடப் பட்டது என்று அடையாளம் காணுவது சிறிது சிரமமாக உள்ளது. **வீரச்சிம்பன் குளிகை** என்னும் இக்காசு சம்புவ ராயர் கல்வெட்டுக்களில் மூன்றில் குறிக்கப் பெறுகிறது. அதாவது கி.பி. 1332-1339 - ல் ஆட்சி புரிந்த வென்று மண் கொண்ட சம்புவராயன் காலத்தியக் கல்வெட்டு ஒன்று. இரண் டாம் கல்வெட்டும் மூன்றாம் கல்வெட்டும் கி.பி. 1337 முதல் 1373 முடிய தனியாட்சி புரிந்த இராஜநாராயண சம்புவராயன் காலத்தியது ஆகும். வென்றுமண்கொண்ட சம்புவராயன் கல் வெட்டு 1339-ஆம் ஆண்டில், திருவேங்கடமுடையான் என்பவன், நீலக்கண்ட சதுர்வேதி மங்கலம் மற்றும் மல்லிநாதச் சதுர்வேதி மங்கலத்தாரிடமிருந்து அன்று வழக்கிலிருந்த பணம் 170 வாசி படா வீரச்சம்பன் குளிகை பெற்றுக் கொண்டு தம் காணியை விற்றுத் தந்ததற்கான இரசீது அளித்ததைத் தெரிவிக்கிறது.[2]

1. A R,E. 491 of 1921, 45 of 1922 81 of 1940-41
2. S.I.I. Vol. I No. 52

இங்கு வாசிபடா பணம் என்பது கொல்லரின் வாசி என்னும் உளி படாத காசு என்று பொருள் கொள்ளுதல் சிறப்பாகத் தோன்றுகிறது. வாசி என்ற உளியால் வெட்டுப் பட்டால் அக்காசுக்கு மதிப்பு இல்லாது போய்விடும். அது நாணயமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆதலால் அவ்வாறு உளி படாமல் புழக்கத்தில் உள்ள காசைப் பெற்றுக் கொண்டான் என்பதையே அது சுட்டும். சம்புவராயர் கல்வெட்டுக்களில் வரிகளைப் பற்றிக் குறிப்பிடும் பல கல்வெட்டுக்களில் '**ஊர்க் கணக்கர், தட்டார் பேரால் ஊசி, வாசி வரி** என்று குறிக்கப் பெற்று காணப்பெறும்'.[1] **ஊசி** என்பது கணக்கனின் எழுத்தாணியையும், **வாசி** என்பது கொல்லரது உளியையும் குறிக்கும். மேற்காணும் இருவரிடமிருந்தும் வரி வசூலிக்கப் பெற்றிருக்கின்றன.

மற்ற இரண்டு கல்வெட்டுக்களும் வென்றுமண்கொண்டானின் மகனான சகல லோகச் சக்கரவர்த்தி இராஜ நாராயணச் சம்புவராயனின் ஐந்து மற்றும் 20–ஆம் ஆட்சியாண்டுகளில் எழுதப் பெற்றவையாகும். இவற்றில் ஒன்று செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் புதுப்பட்டினத்திலும், மற்றையது வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் உக்கலிலும் பொறிக்கப்பட்டுள்ளன. புதுப்பட்டினத்தில் வாழ்ந்து வரும் உறையூர் வியாபாரிகள், திருஞானசம்பந்தன் என்பானிடம் நிலம் விற்று **550 வீரச்சம்பன் குளிகை** பெற்றுக் கொண்டதையும்[2] உக்கல் பிடாகைப் பாதரித்தாங்கல் என்னும் ஊரை இருவரிடம் விற்று **200 வீரச்சம்பன் குளிகை** பெற்றுத் தம் ஊர்க் குளத்துக் குமிழியைப் பழுது பார்த்ததையும்[3] மேற்காணும் கல்வெட்டுக்கள் முறையே தெரிவிக்கின்றன. நிலத்துக்கு மாறாகப் பெரும் அளவில் இக்காசு கொடுக்கப் பட்டிருப்பதைக் கருத்தில் கொள்கையில் செப்புக் காசாக இது இருக்கலாம் என்று ஊகிக்கலாம். ஆனால் இது எந்த மன்னனால் வெளியிடப் பெற்றிருக்கும் என்பதைத் தெளிவாக அறிய இயலவில்லை.

---

1. A.R.E. 306 of 1919, 157 of 1939-40
2. A.R.E. 102 of 1932-33
3. Ibid 162 of 1939-40

மாறவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தர பாண்டிய தேவன் காலத்தில் **வீரச்சம்பன்னாயன்** என்னும் சம்புவ ராயன் ஒருவன் இருந்திருக்கிறான்.[1] இச்சுந்தரபாண்டியனை, கல்வெட்டறிஞர் வெங்கையா கி.பி. 1310-ல் முகம்மதியர் உதவி கோரி டெல்லிக்கு ஓடிய வீரபாண்டியனின் எதிரியான சுந்தர பாண்டியனாக இருக்கலாம் என்று கூறியுள்ளார். கி.பி. 1305-ல் வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் எழுதப் பெற்றுள்ள ஒரு கல்வெட்டில் **வீரச்சம்பன் எதிரிலிசோழச் சம்பன்** என்பான் குறிக்கப்படுகிறான்.[2] மாறங்கியூரில் உள்ள மற்றொரு கல்வெட்டு இராஜநாராயணச் சம்புவராயனால் ஏற்படுத்தப்பட்டிருந்த **வீரச்சம்பன் சந்தியைப்** பற்றிப் பேசு கிறது.[3]

மேற்காணும் கல்வெட்டுச் சான்றுகளை ஆய்த்து பார்த்த தில் கீழ்க்காணும் முடிவுக்கு வரவேண்டுவது அவசியமாகிறது.

1. இக்காசு வென்றுமண்கொண்ட சம்புவராயன் காலத் திலேயே புழக்கத்தில் இருந்ததால் இராஜநாராயண சம்புவராயனால் இது வெளியிடப்பட்டிருக்க முடியாது.

2. வென்று மண்கொண்ட சம்புவராயன் காலத்தில் இக்காசு பேசப்படுவதாலேயே இவனால் இது வெளி யிடப்பட்டிருக்கும் என்ற முடிவுக்கும் வர முடியாது. காரணம் இம்மன்னனுக்கு வீரச்சம்பன் என்ற பட்டப் பெயர் ஒரு கல்வெட்டில் கூட காணப் பெறவில்லை

3. ஆதலால் இக்காசு வீரச்சம்பன்னாயன் சம்புவ ராயனாலோ அல்லது வீரச்சம்பன் என்னும் எதிரிலிச் சோழச்சம்பனாலோ வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம்.[4]

---

1. A.R.E. 87 of 1990
2. Ibid 183 of 1939-40
3. Ibid 91 of 1935-36
4. பார்க்க Dr. Avvai Natarajan and Natana. Kasinathan, Art Panorama of Tamils. pp. 54–55

பிரிவு பதின்மூன்று

# விசயநகர வேந்தர் காசுகள்

தமிழ்நாட்டில் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்களின் வழித்தோன்றல்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட அரசுரிமைப் போராட்டத்தின் காரணமாகக் கி.பி. 1310-ல் தில்லி சுல்தானின் தளபதியான மாலிக்காபூர் பாண்டியர்களை வீழ்த்தி மதுரையில் முகமதியரின் ஆட்சியைத் தோற்றுவித்தான். இந்த நிலையைப் பார்க்கையில் தமிழகத்தின் அரசியல் நிலைமை கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பெரும் அளவு தாழ்ந்து விட்டதென்பதை ஊகிக்கமுடிகிறது. அதேநேரத்தில் தமிழகத்துப் பண்டைய மன்னர்கள் தாம் இமயத்தின் சிகரத்தில் தம் இலச்சினையைப் பொறித்ததாகக் கூறிக் கொண்டிருப்பது புலவர்களின் வெறும் கற்பனையாக மட்டும் கொள்ள முடியாதென்பதும் உறுதியாகிறது. முடிவேந்தர் மூவரின் காலம் முதல் தமிழகத்துப் படைதான் வடநாட்டுக்குச் சென்று வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறதே தவிர, வடநாட்டு அரசாட்சி தமிழகத்தைத் தன்னாட்சிக்குக்கீழ் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. மௌரியப் பெரும் பேரரசன் அசோகன் காலத்திலாயினும், குப்தப் பேரரசன் சந்திரகுப்தன் காலத்திலாயினும், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஹர்ஷவர்த்தனனின் காலத்திலாயினும் தமிழகத்தை அவர்களால் கைப்பற்ற இயலவில்லை. ஒரேயொரு முறை கலிங்க வேந்தன் காரவேலன் பாண்டிய மன்னனை வென்றதாகத் தெரிகிறது அவ்வெற்றிகூட நிலைத்த வெற்றியாக இல்லாமல் உடனேயே தென்பகுதி மன்னர்களின் கூட்டெதிர்ப்பை அவன் எதிர்கொண்டு தம் ஆட்சிப் பகுதியை சுருக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று என்பது வரலாற்றுண்மை. ஆனால் மத்தியகாலச் சோழ மன்னர்கள் ஒவ்வொருவராக மாறி மாறி தமிழக எல்லையைக் கடந்து வடபகுதியில் இருந்த பல நாடு

களை வெற்றி கொண்ட செய்தியினை முதலாம் இராசராசன் முதல் முதலாம் குலோத்துங்கன் காலம் முடியவும், பின்னர் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலும் நிகழ்ந்திருக் கிறது. ஆனால் நிலைமை முற்றிலும் மாறி வட கோடியில் ஆட்சிபுரிந்த டில்லி சுல்தான், தென் கோடியில் ஆட்சிபுரிந்த பாண்டியனை வெற்றி கொண்ட நிகழ்ச்சி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில்தான் நிகழ முடிந்திருக்கிறது. காரணம் பாண்டிய மன்னர்களுக்குள் ஏற்பட்ட அரசுரிமைப் போரேயாகும்.

இந்நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விசயநகர வேந்தன் முதலாம் புக்கன் தன் மகன் குமார கம்பணன் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தான். குமார கம்பணன் தமிழகத்தின் வடபகுதியில் தனியாட்சி செலுத்தி வந்த சம்புவராயர்களை முதலில் வென்று, பின்னர் மதுரைக்குச் சென்று, சுல்தானோடு போரிட்டு முகமதிய ஆட்சிக்கு முடிவு ஏற்படுத்தினான். இந்நிகழ்ச்சி குமார கம்பணனின் பட்டத்தரசி கங்காதேவியால் எழுதப்பெற்ற 'மதுரா விஜயம்' என்ற நூலில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது.[1] மதுரைத் தலவரலாறும் குமாரகம்பணனின் மதுரை வெற்றியைப் படம்பிடித்துக் காட்டு கிறது.[2] இவ்வாறு தமிழகத்தில் ஏற்பட்ட விசயநகர வேந்தர் ஆட்சி, தொடர்ந்து கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முடிய நடைபெற்றது. இக்காலக் கட்டத்தில் விசயநகர வேந்தர் களால் வெளியிடப்பெற்ற காசுகள் தமிழகத்தில் பல பகுதி களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள காசுகளில் பெரும்பகுதி சென்னை அரசினர் அருங் காட்சியகத்தில் பாதுகாப்பாக வைத்து பாதுகாக்கப்படு கின்றன. அக்காசுகளின் பட்டியலை அக்காட்சியகத்தின் காப்பாட்சியராகப் பணியாற்றிய டாக்டர் சங்கரநாராயணா

---

1. S. Tiruvenkatachari, Madura Vijayam, Gangadevi, Canto IV.
2. மதுரைத் தலத்தார் வரலாறும் மதுரைக் கோயில் திருப்பணி மாலையும், மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியீடு

1977-ல் பதிப்பித்துள்ளார்.[1] விசயநகர வேந்தர்களால் வெளியிடப்பெற்ற காசுகள் பற்றி பொதுவாகப் பரமேஸ்வரி லால் குப்தா 1969-லேயே தம் நூலில் எழுதியுள்ளார்.[2] ஆந்திரப் பிரதேசத்தில் விஜயநகரக் காசுகள் என்ற ஒரு நூலை என். இரமேசன் வெளியிட்டார்.[3] அண்மையில் தமிழ்நாட்டுக் காசுகள் பற்றி ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ள டாக்டர் நாகசாமியும் தம் நூலில் இவ்வேந்தர்களின் காசுகள் பற்றி தனிப்பிரிவாகத் தந்திருக்கிறார்.[4]

விசயநகர வேந்தர்களின் ஆட்சி சங்கம குலத்தைச் சார்ந்த முதலாம் ஹரிஹரன் (கி. பி. 1336) காலம் தொடங்கி, சாளுவ குலம், துளுவ குலம், ஆரவீடு குலம் என நான்கு குலத்தைச் சார்ந்த மன்னர்கள் ஆட்சிக்காலம் முடிய நிகழ்ந்திருக்கிறது. மேற்குறிப்பிட்ட நான்கு குல மன்னர்களில் சாளுவ குல மன்னர்கள் காசுகளை வெளியிட்டனரா? அல்லது அவர்களால் வெளியிடப்பட்ட காசுகள் இதுவரை கிடைக்கவில்லையா என்பது விடை காண முடியாத புதிராக உள்ளது.

சங்கம குலத்து முதல் மன்னன் முதலாம் ஹரிஹரன் வெளியிட்ட காசுகளில் **அனுமன், கருடன்** சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வாசகம் **கன்னட** எழுத்தில் உள்ளது. முதலாம் புக்கனின் (கி.பி. 1356 - 1377) காசிலும் கருடன் உருவம்தான் காணப்படுகிறது. இவரது காசிலும் **கன்னட** எழுத்துதான் எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டாம் ஹரிஹரனின் (கி.பி. 1377 - 1404) தங்கக் காசுகளில் **உமா மகேசுவரர், லட்சுமி நாராயணர், லட்சுமி நரசிம்மர், சரசுவதி, பிரம்மன்** உருவங்களும், செப்புக் காசில் **காளையின்** உருவமும் காணமுடிகிறது. நந்தி நாகரியில்

1. N. Sankaranarayana, Bulletin of the Madras Govt. Museum, New Series-Gerneral Section, Vol. XIV, No.1
2. நாணயங்கள், பக்கங்கள் 127–129
3. N. Ramesan, Vijayanagar Coins in Andhra Pradesh Museum.
4. Dr. R. Nagaswamy, Tamil Coins A Study, p.p. 148-159

வாசகம் உள்ளது. இவர் காசுகளில்தான் முதன் முதலில் 'வீர' என்பதற்குப் பதிலாக 'ப்ரதாப' என்ற வாசகம் காணப் படுகிறது. தேவராயர் (கி.பி 1422-1466) வெளியிட்ட தங்கக் காசுகளில் **உமா மகேசுவரர்** உருவமும், செப்புக் காசுகளில் முதன்முதலாக **யானையின்** உருவமும் காணப்படுகின்றன. இக்காசுகளில், தங்கக்காசுகளில் **தேவநாகரியையும்**, செப்புக் காசுகளில் **கன்னடத்தையும்** பயன்படுத்தியுள்ளனர்.

சாளுவ குல மன்னர்கள் காசுகளைப் புதிதாக வெளி யிட்டார்களா அல்லது முன்பு வழக்கிலிருந்த காசுகளையே பயன்படுத்திக் கொண்டார்களா என்பது தெரியவில்லை.

துளுவ குல மன்னர்கள் வெளியிட்ட காசுகளில் சங்கம குலத்தினரால் பயன்படுத்தப்பட்ட உமாமகேசுவரர் மற்றும் காளை உருவங்களைத் தம் காசுகளில் பொறித்ததோடு, **வெங்கடேசர்** மற்றும் **கிருஷ்ணர்** உருவங்களும் புதிதாகப் புகுத்தப்பட்டன.

கிருஷ்ண தேவராயரால் வெளியிடப்பட்ட காசுகளில் **வெங்கடேசர், சிவபார்வதி, பாலகிருஷ்ணர், காளை, கருடன்** ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவரால் வெளியிடப்பட்ட செப்புக் காசுகளில் **கன்னட** எழுத்தும் மற்ற நாணயங்களில் **நாகரி** எழுத்தும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அச்சுதராயர்தான் (கி.பி. 1530-1542) முதன்முதலில் **கண்ட பேருண்டப் பறவையின்** உருவம் பொறித்த காசை வெளி யிட்டார். இக்காசுகள் தங்கத்திலும் செம்பிலும் கிடைத் துள்ளன.

ஆரவீடு குலத்தைச் சார்ந்த மன்னர்களில் திருமலை ராயரால் வெளியிடப்பட்ட காசுகளில் **ஸ்ரீராமர், சங்கு, சக்கரம், கருடன், பன்றி, யானை, காளை; திருமால், இலக்குமி** உருவங்களுக்கு நடுவில் மன்னன் கூப்பிய கரங்களுடன் அமர்ந்த நிலை ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் வெங்கடராயர் (கி.பி. 1542) காலத்தியக் காசுகளில் **நாகரி** வாசகங்களோடு ஒரு வரியில் மட்டும் **கன்னடம்** பயன் படுத்தப்பட்டிருக்கிறது.

சிக்கராயர் வெளியிட்ட காசுகளில் தெலுங்கு வாசகம் மட்டுமே காணப்படுகிறது. ஆதலால் இவர் விசயநகரப் பேரரசின் வடகிழக்குப் பகுதியில் அரசுப்பிரதிநிதியாக இருந்த போது இவை வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதப் படுகிறது.[1]

விசயநகர வேந்தர்கள் காலத்தியக் காசுகளின் பெயர் களை இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் கீழ்வருமாறு தெரிவிக்கின்றன.[2]

**தங்கக் காசுகள்**

1. கத்யனா
2. வராஹன்
3. பொன்(அ)பகோடா
4. பணம்
5. ஹக

**வெள்ளிக் காசு**

1. தாரா

**செப்புக் காசுகள்**

1. பணம்
2. ஜிடல்
3. காசு

---

1. டாக்டர். பரமேஸ்வரி லால் குப்தா, நாணயங்கள்,பக்.120
2. Panchamukhi, Vijayanagar SexCentenary Volume.

இரண்டாம் தேவராயர் ஆட்சிக் காலத்தில் கீழ்வரும் காசுகள் பயன்பாட்டில் இருந்ததாக அந்நாட்டுக்கு வருகை புரிந்த அப்துல் ரசாக் தெரிவித்துள்ளார்.[1]

**தங்கக் காசுகள்**

1. வராஹன்
2. பர்தப் = $\frac{1}{2}$ வராஹன்
3. பணம் = 10 பர்தப்

**வெள்ளிக் காசு**

1. தர் = $\frac{1}{6}$ பணம்

**செப்புக் காசு**

1. $\frac{1}{3}$ தர்

---

1. N. Sankaranarayana, Op. cit, p. 11.

# விஜயநகர வேந்தர் காசுகள்

## சங்கம குலம்

### முதலாம் ஹரிஹரன்
### (கி.பி. 1336-1357)

1. முன்பக்கம் : அனுமனின் உருவம்

   பின்பக்கம் : கோடுகள் நடுவில் மூன்று வரிகளில் ஸ்ரீவீர ஹரிஹர என்று கன்னட எழுத்தில்

2. முன்பக்கம் : அனுமனின் உருவம்

   பின்பக்கம் : ஹரி ஹர என்று இரு வரிகளில், நாகரி எழுத்தில்

3. முன்பக்கம் : கருடனின் உருவம்

   பின்பக்கம் : ஸ்ரீ வீர ஹரி ஹர என்று கோடுகள் நடுவில் மூன்று வரிகளில் கன்னட எழுத்தில்

### முதலாம் புக்கன்
### (கி.பி. 1356-1377)

1. முன்பக்கம் : அனுமனின் உருவம்

   பின்பக்கம் : வீர புக்கராய என்று கன்னட எழுத்தில் மூன்று வரிகளில்

2. முன்பக்கம் : அனுமனின் உருவம்

   பின்பக்கம் : வீர புக்க பதி ராய என்று நாகரி எழுத்தில் மூன்று வரிகளில்

### இரண்டாம் ஹரிஹரன்
### (கி.பி. 1377-1404)

1. முன்பக்கம் : நான்கு கரங்களுடன் சிவனும், பார்வதியும் அமர்ந்த நிலை, தலையில் கிரீடமகுடம் சந்திரன், சூரியன் உருவங்கள்

   பின்பக்கம் : ஸ்ரீப்ரதாபஹரிஹர என்று கோடுகள் நடுவில் மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

2. முன்பக்கம் : நான்கு கரங்களுடன் விஷ்ணுவும், லக்ஷ்மியும் அமர்ந்த நிலை

பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாப ஹரிஹர** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

3. முன்பக்கம் : லக்ஷ்மி நரசிம்மர் அமர்ந்த நிலை

பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபஹரிஹர** என்று நாகரி எழுத்தில் (தற்பொழுது இலண்டன் அருங்காட்சியகத்தில் உள்ளது)

4. முன்பக்கம் : வட்டத்துக்குள் திமிலோடுடைய காளை

பின்பக்கம் : **ப்ரதாபஹரிஹர** என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில்

முதலாம் தேவராயர்
(கி.பி. 1406-1422)

1. முன்பக்கம் : உமை சிவபெருமானின் இடது தொடை மீது அமர்ந்த நிலை

பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபதேவராயர்** என்று மூன்று வரிகளில், நாகரி எழுத்தில்

2. முன்பக்கம் : பத்மாசனத்தில் அமர்ந்துள்ள நாராயணரின் மடியில் இலக்ஷ்மி அமர்ந்த நிலை

பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபதேவராய** என்று மூன்று வரிகளில், நாகரி எழுத்தில்

3. முன்பக்கம் : புள்ளிகளால் அமையப் பெற்ற வட்டத்தினுள் காளை

பின்பக்கம் : **ஸ்ரீ தேவராயா** என்று இரு வரிகளில், நாகரி எழுத்தில்

4. முன்பக்கம் : திமில் கொண்ட காளை. மேல் பகுதியில் சந்திரன், சூரியன்

பின்பக்கம் : ஸ்ரீ தேவராயர் என்று கன்னட எழுத்தில் (இவ்வகைக் காசுகள் சிலவற்றில் காளைக்கு மேற்பகுதியில் 'தே' என்று எழுதப்பெற்றுக் காணப்பெறும். 'தே' என்பது தேவராயர் என்பதன் சுருக்கமாகவும் இருக்கலாம் அல்லது அச்சடிக்கப் பட்ட இடத்தைக் குறிப்பதாகவும் இருக்கலாம்).

5. முன்பக்கம் : புள்ளிகளால் ஆன வட்டத்தினுள் காளை. 'தே' என்னும் நாகரி எழுத்து. மேற்பகுதியில் சந்திரன், சூரியன்.

பின்பக்கம் : ஸ்ரீ நீலகண்ட என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்.

## இரண்டாம் தேவராயர்
(கி பி. 1422-1446)

1. முன்பக்கம் : புள்ளிகளாலான வட்டத்தினுள் யானை உருவம்

பின்பக்கம் : குறுவாள், தேவராயர் என்று இருவரிகளில் நாகரி எழுத்தில்

2 முன்பக்கம் : புள்ளிகளாலான வட்டத்தினுள் யானை

பின்பக்கம் : ஸ்ரீதேவராயர் என்று மூன்று வரிகளில் கன்னட எழுத்தில்

3. முன்பக்கம் : இரண்டிலுள்ளது போன்றே. மேலும் 'ல' என்னும் எழுத்து.

பின்பக்கம் : ஸ்ரீதேவராயர் என்று இரு வரிகளில் நாகரி எழுத்தில்

4. முன்பக்கம் : இரண்டிலுள்ளது போன்றே
பின்பக்கம் : குறுவாள், 'யதா' (அ) 'கஜம்' என்று எழுதப்பெற்றுள்ளது.

5. முன்பக்கம் : யானையின் உருவம்
பின்பக்கம் : நடுவில் குறுவாள், இருபக்கங்களிலும் சங்கு, சக்கரம், மேற்பகுதியில் 'ஸ்ரீதேவ் என்றும், கீழ்ப்பகுதியில் ராய என்றும் எழுதப்பட்டுள்ளது.

6 முன்பக்கம் : புள்ளிகளாலான வட்டத்தில் அலங்கரிக்கப் பட்ட யானை, மேற்பகுதியில் 'தே' என்னும் கன்னட எழுத்து.
பின்பக்கம் : ப்ரதாபதேவராய என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

7. முன்பக்கம் : யானை, மேற்பகுதியில் சூரியன்
பின்பக்கம் : ஸ்ரீதேவராயகஸபேதகர என்று நாகரி எழுத்தில்

8. முன்பக்கம் : யானை, மேற்பகுதியில் 'தே' என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்
பின்பக்கம் : ராய கஜ கண்ட பேருண்ட என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

9. முன்பக்கம் : மன்னன் ஈட்டியைக் கொண்டு யானை யோடு பொருதுதல்
பின்பக்கம் : எட்டில் உள்ளவாறே.

10. முன்பக்கம் : சிவனும், பார்வதியும்
பின்பக்கம் : ஸ்ரீ ப்ரதாப தேவராய என்று மூன்று வரி களில் நாகரி எழுத்தில்

## துளுவ குலம்

*வீரநரசிம்மன்*
*(கி.பி. 1505-1509)*

1. முன்பக்கம் : நரசிம்ஹ உருவம்
   பின்பக்கம் : 'நரசிம்ஹ' என்று கன்னட எழுத்தில்

*கிருஷ்ணதேவராயர்*
*(கி.பி. 1509-1529)*

1. முன்பக்கம் : வெங்கடேஸ்வரர் உருவம்
   பின்பக்கம் ; **ஸ்ரீக்ரிஷ்ணதேவராய** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்
2. முன்பக்கம் : சிவனும் உமையும் அமர்ந்த நிலை
   பின்பக்கம் : **ஸ்ரீக்ரிஷ்ணராய** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்
3. முன்பக்கம் : பாலகிருஷ்ணனின் உருவம்
   பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாப க்ரிஷ்ணராய** என்று மூன்று வரிகளில்
4. முன்பக்கம் : புள்ளிகளாலான வட்டத்தில் காளை
   பின்பக்கம் . **ஸ்ரீக்ரிஷ்ணராய** என்று இரு வரிகளில் நாகரி எழுத்தில்
5. முன்பக்கம் : கருடனின் உருவம்
   பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபக்ரிஷ்ணராய** என்று நாகரி எழுத்தில்

*அச்சுதராயர்*
*(கி.பி, 1529-1542)*

1. முன்பக்கம் ; கண்டபேருண்ட பறவை தன் மூக்கினாலும் நகங்களாலும் யானையைத் தூக்கிப் பிடித்திருத்தல்
   பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபச்யுதராய** என்று மூன்று வரிகளில், கிரந்த எழுத்தில்

**சதாசிவராயர்**
**(கி.பி. 1542-1576)**

1. முன்பக்கம் : மேடை மீது விஷ்ணுவும் லக்ஷிமியும் அமர்ந்த நிலை
   பின்பக்கம் : **ஸ்ரீப்ரதாபசதாசிவராய** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

2. முன்பக்கம் : சிவன், உமை அமர்ந்த நிலை
   பின்பக்கம் : **ஸ்ரீசதாசிவராய** என்று மூன்று வரிகளில், நாகரி எழுத்தில்

3. முன்பக்கம் : கருடனின் உருவம்
   பின்பக்கம் : **ஸ்ரீசதாசிவராய** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்.

## ஆரவீடு குலம்

**திருமலராயர்**
**(கி.பி. 1570-1572)**

1. முன்பக்கம் : இராமர், சீதை அமர்ந்த நிலை, அனுமன் அருகில் நின்ற நிலை.
   பின்பக்கம் : **ஸ்ரீதிருமலராய** என்று மூன்று வரிகளில், நாகரி எழுத்தில்

2. முன்பக்கம் : 1ல் உள்ளவாறே
   பின்பக்கம் : அனுமன் உருவம்.

3. முன்பக்கம் : கருடன், அதன் முன்பு குறுவாள், இரு பக்கங்களிலும் சங்கு, சக்கரம்
   பின்பக்கம் : **ஸ்ரீதிருமலராய** என்று இருவரிகளில், நாகரி எழுத்தில்

4. முன்பக்கம் : பன்றியின் உருவம்
   பின்பக்கம் : **ஸ்ரீதிருமலராய** என்று மூன்று வரிகளில் நாகரி எழுத்தில்

5. முன்பக்கம : யானையின் உருவம்
பின்பக்கம் : ஸ்ரீசலமராய என்று மூன்று வரிகளில், நாகரி எழுத்தில்

ஸ்ரீரங்கராயர்
(கி.பி. 1572-1585)

1. முன்பக்கம் : பிரபையின் நடுவில் வெங்கடேசர் உருவம்
பின்பக்கம் : ஸ்ரீரங்கராய என்று நாகரி எழுத்தில்

பிரிவு பதினான்கு

# மாவலிவாணாதிராயர் காசுகள்

தமிழகத்தின் வடக்குப் பகுதியில் சம்புவராயர்களும், தென்பகுதியில் கி.பி. 1310-ல் நிகழ்ந்த இசுலாமிய மன்னன் மாலிக்காபூரின் படையெடுப்பால் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்ட இசுலாமியரும் ஆட்சி செய்து கொண்டிருந்ததை, ஒடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் விஜயநகர சாம்ராச்சிய வேந்தன் குமார கம்பணன் கி.பி 14-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் தமிழகம் நோக்கிப் படையெடுத்து வந்து முதலில் சம்புவராயர்களைத் தொண்டை மண்டலத்தில் தோற்கடித்து விட்டு, நேரே மதுரைக்குச் சென்று இசுலாமியர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தான். இச்செய்தி இவ்வேந்தனின் பட்டத்தரசியால் எழுதப் பெற்ற **'மதுரா விஜயம்'** என்னும் நூலில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது[1] இச்செய்தியைக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன.[2]

இசுலாமியர் ஆட்சியை நீக்கிவிட்டு மாவலிவாணாதிராயர்களிடம் ஆட்சியை விஜயநகர அரசு ஒப்படைத்ததாகத் தெரிகிறது. குமாரகம்பணன் படையெடுப்பிற்குப் பிறகு இப்பகுதியில் மாவலிவாணாதிராயர்களின் கல்வெட்டுக்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வாணாதிராயர்கள் விஜயநகர வேந்தர்களைப் போன்றே வைணவ மதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கியிருக்கின்றனர். இவர்கள் தங்களது குலக் கடவுளாக மதுரைக்குப் பக்கத்தில் உள்ள சோலை மலைத் (அழகர்மலை) திருமாலையே கொண்டிருந்தனர். அத்தோடு கருடக் கொடியைத் தங்களது அரசுக் கொடியாகப்

1. S. Tiruvenkatachari, Madhura Vijayam, Gangadevi. Canto IV, Slokas 67 to 83
2. A.R.E. 267 of 1919

பெற்றிருந்தனர். இம்மன்னர்களில் சிலர் மிகுந்த செல்வாக்குப் பெற்ற மன்னர்களாகவும், சுயாட்சி நடத்துபவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். இவர்கள் காலத்தில் சில செப்புக் காசுகளையும் வெளியிட்டிருக்கின்றனர்.

சர் வால்டர் எலியட் தம் "தென்னிந்தியக் காசுகள்" என்ற நூலில் வெளியிட்டுள்ள சில காசுகளில் முன்பக்கம் கருடனின் மனித உருவம் காலை மடித்து மீன் உருவத்தின் மீது அமர்ந்த நிலையிலும், சங்கு, சக்கரமும், பின்பக்கம் **சமர கோலாகலன்** என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றும் காணப்படுகின்றன. சமரகோலாகலன் எனில் போர் புரிவதில் பெருவிருப்பம் உள்ளவன் என்று பொருள் மற்றொரு வகைக் காசுகளில் முன்பக்கம் மனித உருவில் கருடன் காலை மடித்து பறக்கின்ற நிலையிலும், தலைக்கு வலப்பக்கத்தில் சங்கின் உருவமும், பின்பக்கம் **புவனேகவீரன்** என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றும் காட்சி தருகின்றன. இக்காசுகள் பாண்டியர் காலத்தவையாக இருக்கலாம் என்று சர் வால்டர் எலியட்டும்[1] சர் டி. தேசிகாச் சாரியும்[2] கூறியுள்ளனர். ஆனால் டாக்டர் டி.வி. மகாலிங்கம், இவை பாண்டியர்களை வாணாதிராயர்கள் வெற்றி கொண்டதின் நினைவாக வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதியுள்ளார்.[3] எந்த வாணாதிராய மன்னனால் இவை வெளியிடப்பட்டன என்று அவர் கூறவில்லை. இக்கட்டுரையாசிரியர் 1971-ல் இக்காசுகளைப் பற்றி ஆழ்ந்து ஆய்வு செய்தபோது, இவை சுந்தரத்தோளுடைய மாவலி வாணராயன் என்னும் வாணாதிராய அரசனால் வெளியிடப் பெற்றிருக்க வேண்டும் என்று அறுதியிட்டுக் கருத்துத் தெரிவித்துள்ளார்.[4] அவ்வாறு கூறியதற்குக் காரணங்களாகக் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

---

1. Elliot, Coins of South India, 126, 152 F, Plate, III, No. 134, 135 and 138
2. T. Desikachari, South Indian Coins, pp. 16-17
3. T.V. Mahalingam, Journal of History, Vol. XXIX.1951
4. Natana. Kasinathan, Professor K.A.N. Sastri, Felicitation Volume (1971). pp. 322-324

1. பாண்டியர்களது இருகயல், நடுவில் செண்டு (சாட்டை) இக்காசுகளில் காணாமை.

2. மீன் சின்னத்தின் மீது கருட மனித உருவம் அமர்ந்த நிலை.

3. வைணவத்தின் மீது மாவலி வாணாதிராயர் கொண்டிருந்த பற்று.

4. **சமரகோலாலகன்** என்ற பட்டமும் **புவனேகவீரன்** என்ற பட்டமும் வாணாதிராயர்களும் பெற்றிருந்தது.

5. கி.பி. 14-15ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதி

இக்கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு மேலும் ஆழ்ந்து ஆய்ந்த டாக்டர் நாகசாமி, இக்காசுகள் வாணாதிராயர்களால் வெளியிடப்பட்டவையே என்றும்; வாணாதிராயர்கள் **கருடகேதனன்** என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தனர், ஆதலால்தான் அவர்களது காசுகளில் கருடன் உருவத்தை முன்பக்கத்தில் காண முடிகிறது என்றும் கூறியுள்ளார். மேலும் இவர்கள் காலத்தில் ஆறு வகையான காசுகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.[1] இவற்றில் முன்பக்கம் படுக்கை வாட்டில் இருபுறமும் இருகயல்களும் நடுவில் செண்டும், பின்பக்கம் எழுத்து ஏதும் இல்லாமல் இருப்பவை வாணாதிராயர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் வெளியிடப்பட்டவை என்றும் எழுதியுள்ளார்.[2] இந்த வகைக் காசுகள் சிலவற்றில் பின்பக்கம் **புவனேகவீரன்** என்ற வாசகம் தமிழ் எழுத்தில் மூன்று வரிகளில் எழுதப்பெற்றிருப்பதாக வேதாசலம் தம் நூலில் படத்துடன் வெளியிட்டுள்ளார்.[3]

அண்மையில், வ.உ.சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வட்டம் கொற்கையைச் சார்ந்த கே.எஸ். நாராயண பிள்ளை என்பவரிடமிருந்து, **புவனிகவீர** என்று தேவநாகரி

---

1. கல்வெட்டு, காலாண்டிதழ், எண் 6

2. Dr. R. Nagaswamy, Tamil Coins - A Study, p. 162.

3. பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள், பக்கம் 212

எழுத்தில் எழுதப் பெற்றுள்ள காசைக் கண்டறிந்ததாக எஸ். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அத்தோடு இக்காசு மாறவர்மன் குலசேகரனால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகிறார்[1] இக்காசு வாணாதிராயர்களின் ஆட்சிக்கு முன்பாக ஆட்சி புரிந்த பாண்டிய மன்னனால் வெளியிடப்பட்டதாகும்.

## வாணாதிராயர் காசுகள்

1. முன்பக்கம் : இரு கயல், நடுவில் செண்டு

   பின்பக்கம் : கருட மனித உருவம் (anthropoid) கால்களை மடித்துப் பறக்கும் நிலை, சங்கு, சக்கரம்.

2. முன்பக்கம் : கருட மனித உருவம் இடப்பக்கம் திரும்பிய நிலையில் கால்களை மடித்துப் பறக்கும் நிலை, இறக்கை காணப்படுகிறது. தலையின் இருபுறங்களிலும் சங்கு, சக்கரம்.

   பின்பக்கம் : சமர
   கோலா
   கலன்
   என்று தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

3. முன்பக்கம் : கருட மனித உருவம் மீன் மீது அமர்ந்து வலப் பக்கம் திரும்பிய நிலையில் கால்களை மடித்துப் பறக்கும் நிலை. இறக்கை காணப் படவில்லை.

   பின்பக்கம் : இரண்டாம் வகையில் காணப்படுவது போன்றே.

4. முன்பக்கம் : இரு கயல் படுத்த நிலையில், நடுவில் செண்டு.

   பின்பக்கம் : இரண்டாம் வகையில் காணப்பெறுவது போன்றே.

---

1. ஆய்வு வட்டக் கட்டுரைகள், பக்கங்கள், 309-312

5. முன்பக்கம் : கருட மனித உருவம் கால்களை மடித்துப் பறக்கும் நிலை, இடக்கையில் பாம்பு, சங்கு, சக்கரம் மற்றும் கொற்றக் குடை.

பின்பக்கம் : புவ
னேக
வீரன்
என்று மூன்று வரிகளில் தமிழில் எழுதப் பட்டுள்ளது.

6. முன்பக்கம் : படுத்த நிலையில் இருகயல், நடுவில் செண்டு (சாட்டை)

பின்பக்கம் : ஐந்தாம் வகைக் காசுகளில் உள்ளவாறே

இக்காசுகளில் முதல் வகைக காசு பாண்டியர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக வாணாதிராயர்கள் இருந்து ஆட்சி செய்த போது முதல் வாணாதிராயனான வானவன் சுந்தரன் காலத்தில் வெளியிடப்பட்டவையாக இருக்கலாம். மூன்றாம் வகைக் காசுகளில் ஒரு சிறப்பு காணப்படுகிறது. அதாவது கருட மனித உருவம் இடக்கரத்தில் பாம்பை (சர்ப்பம்) பிடித்திருப்பதாகத் தெரிகிறது. சுந்தரத் தோளுடையான் திருமாலிருஞ்சோலை நின்றானுக்குக் காணப்பெறும் பல பட்டப் பெயர்களோடு **இராஜகுல சர்ப்ப கருடன்** என்பதும் ஒன்று. இராஜகுல நாகர்களுக்கு கருடன் எப்படியோ அவ்வாறே இம்மன்னன் மற்ற அரசர்களுக்கு என்பது அதன் பொருள். அதாவது இம்மன்னன் மற்ற அரசர்களுக்கு பேரச்சமாக விளங்குபவன் என்பதாகும். இக்காசுகளில் (முதல் வகையைத் தவிர) காணப்பெறும் எழுத்தமைதியைப் பார்க்கையில் அனைத்துமே சுந்தரத் தோளுடைய மாவலிவாணாதிராயன் காலத்தில்தான் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உறுதி. ஆனால் வேதாச்சலம், சில காசுகள் மாவலி வாணாதிராயர் உறங்காவில்லிதாசனான சமரகோலாகலனாலும், சில சுந்தரத்தோளுடைய மாவலிவாணாதிராயனாலும் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்.[1]

1. Op. cit., p. 116

## பிரிவு பதினைந்து

# வேணாட்டார் காசுகள்

முடியுடை மூவேந்தர்களில் ஒருவரான சேரர் தமிழகத்தின் மேற்குப் பகுதியை ஆண்டு வந்தனர். சங்க காலம் முதல் கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு வரை சேரரின் ஆட்சி தமிழகத்தின் யாதாவதொரு பகுதியில் இருந்து வந்திருக்கிறது. சங்க காலத்தில் மேற்குக் கடற்கரையோரப் பகுதியில இருந்த வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள் பின்னர் இருபிரிவினராகப் பிரிந்து, ஒரு பிரிவினர் தொடர்ந்து வஞ்சியையும், மற்றொரு பிரிவினர் தற்போதைய கருவூரையும் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்திருக்கின்றனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழகத்தில் தென்கோடிப் பகுதியான கன்னியாகுமரிப் பகுதியினையும் சேர்த்து வேணாடு என்ற பெயரில் கி.பி. 16-ஆம் நூறறாண்டு முடிய ஆட்சி செய்தனர்.

ஒவ்வொரு காலக் கட்டத்திலும் சேர மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவைபற்றி இந்நூலில் முன்னமேயே விளக்கப்பட்டுள்ளன. கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த சேரர்களான வேணாட்டு மன்னர்களால் வெளியிடப்பட்ட சில காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கலியுகராமன், சேரகுலராமன், பாஸ்கரவர்மன், மார்த்தாண்டவர்மன் ஆகியோர் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகள் அவையாகும். இக்காசுகள் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பிற்காலப் பாண்டியர்களால் வெளியிடப்பட்டவை என்று கருதப்பட்டு வந்தன.[1] அண்மைக்காலத்தில்தான் இவை சேர மன்னர்களால் வெளியிடப்பட்டவை என்று நிரூபிக்கப்பட்டன.[2]

---

1. தேசிகாச்சாரி, டி. தென்னிந்திய காசுகள் பக்கம். 163-164
2. கல்வெட்டுக் காலாண்டு இதழ், டாக்டர். இரா. நாகசாமி

மேற்கூறியவற்றில் 'கலியுகராமன் என்று பொறிக்கப்பட்டுக் காணும் காசு மட்டும் பாண்டிய மன்னனைத்தான் சார்ந்திருக்க வேண்டும் போன்று தோன்றுகிறது. ஏனெனில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் 'அன்றாடு வழங்கும் நென்மேலி கலியுகராமன் பணம்' என்று குறிப்பிடப்படுகிறது. நென்மேலி என்று இங்கு குறிப்பிடப்படுவது நெல்வேலி என்ற ஊரைக் குறிப்பிடுவதாகும். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலிப் பகுதியில் பாண்டியர்களில் ஒரு பிரிவினர் ஆண்டு வந்தனர். ஆதலால் நெல்வேலியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் இந்நாணயம் பாண்டியர்களால் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். நெல்வேலி மாறன் என்னும் பாண்டிய மன்னன் கி.பி. 1552 முதல் 1564 வரை ஆட்சி புரிந்துள்ளான். அவனால் இக்காசு வெளியிடப்பட்டிருக்கலாம். இக்காசில் 'திருவடி' உருவம் காணப்படுவது சேர நாட்டில் புழக்கத்தில் உள்ளது என்று காட்டுவதற்காக இருக்கலாம். சோழ மன்னர் முதலாம் இராஜராஜன்கூட தம் காசுகளில் 'திருவடி' பொறித்து சேர. நாட்டில் பழக்கத்தில் புகுத்தியிருக்கிறான். 'பூதலவீர' என்று பொறிக்கப்பட்டுள்ள சில காசுகளும் சேரர் காலத்தியதே என்று கூறப்படுகிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பூதல வீர சிறீவீர உதையமார்த்தாண்டவர்மன் அல்லது பூதலவீரவிசிறீ இரவிவர்மர் ஆகிய இருவரில் ஒருவரால் வெளியிடப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[1]

அண்மையில் எமது துறை அலுவலர் திரு வெ. வேதாசலம் தாம் சேகரித்து வைத்திருந்த சில காசுகளைக் காண்பித்து யார் காலத்தியதாக இருக்கலாம் என்று கூறும்படி என்னைக் கேட்டார் அவர் காண்பித்த காசுகளில் ஒரு காசில் ஒரு பக்கம் ஈழ மனிதன் இடப்பக்கம் திரும்பி நின்ற நிலை உருவமும், மறுபக்கம் ஈழ மனிதன் அமர்ந்த நிலை உருவமும் அவ்வுருவத்தின் இடப்பக்கம் தமிழ் எழுத்தில் **பூதல வீர ராமன்** என்று மூன்று வரிகளில் எழுதப்பெற்றும் உள்ளது. எழுத்துக்களின் மேல் பகுதியில் பனை மரம் அல்லது விளக்கு மற்றும் நான்கு புள்ளிகள் காணப்படுகின்றன.

---

1. கல்வெட்டுக் காலாண்டு இதழ், பக்கம் 3.

இந்தப் புதிய காசு கிடைத்திருப்பதன் மூலம் **பூதல, பூதல வீர** என்று பொறிக்கப்பட்டுக் காணப்பெறும் பிற காசுகளும் **பூதல வீர இராமன்** என்பவராலேயே வெளியிடப் பட்டிருக்கலாம் என்று கருதலாம். இக்கருத்தை ஒரு யூகமாக புடால்ப்ஃ அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.[1] அப்பொழுது அவர்களால் உறுதியாகக் கூறிட போதிய சான்றுகள் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தாணுமாலயக் கோயில் கோபுர வாயிலின் வடக்குச் சுவரில் கொல்லம் ஆண்டு 722-இல் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.[2] இது செய்துங்க நாட்டு சங்கர நாராயணமூர்த்தி வேளைக்காரன் என்ற பெயருடைய வென்று மண்கொண்ட **பூதல வீர இராமவன்மர்** என்பவர் விட்டலேசுவர மகாராசாவின் நன்மைக் காகப் பெருமான் தென் திருவேங்கட விண்ணவர் எம்பெரு மானுக்கு அமுது படிக்கும், திருவாராதனைக்குமாகப் பணமும் நெல்லும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இக்கல் வெட்டின் காலம் கி. பி. 1516 ஆகும். மேலே குறிப்பிட்ட காசுகளில் காணப்பெறும் எழுத்தமைதியும் கி. பி. 16-ஆம் நூற்றாண்டினதாகவே காணப்படுகிறது. ஆதலால் **பூதல, பூதல வீர** என்று பொறிக்கப்பெற்றிருக்கும் காசுகளும், **பூதல வீர ராமன்** என்று பொறிக்கப்பெற்றிருக்கும் காசும் சங்கர நாராயணமூர்த்தி வேளைக்காரன் என்னும் வென்றுமண் கொண்ட பூதல வீர இராமவன்மராலேயே வெளியிடப் பட்டிருத்தல் வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். இம்மன்னர் வேணாட்டைச் சேர்ந்த சேர மன்னராவார்.

---

1. புடால்ப், சி. எச்., பாண்டியர் காசுகள் (1966) பக்கம் 15
2. நடன. காசிநாதன், கன்னியாகுமரி கல்வெட்டுகள், இரண்டாம் தொகுதி, தொடர் எண். 1968/241

பிரிவு பதினாறு

# நாயக்கர் காசுகள்

விசயநகர வேந்தர் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்திலேயே செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் நாயக்கர்களது சீர்மை உருவாகத் தொடங்கிவிட்டது. இந் நாயக்கர்கள் விசயநகரப் பேரரசுக்குக் கட்டுப்பட்டவர்களே யாயினும் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் தங்களது தனித்த ஆட்சியை நிலைநாட்டும் முயற்சியை மேற்கொண்ட வண்ணமே இருந்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில் தங்கள் ஆட்சிப் பகுதியில் விசயநகர வேந்தர்களால் வெளியிடப்பெற்ற காசுகள் புழக்கத்தில் இருக்கையிலேயே இவர்களும் சில காசுகளை வெளியிட்டிருக்கின்றனர் என்று அறியமுடிகிறது

செஞ்சிப் பகுதியை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்களில் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1567-1575) ஒரு வகைக் காசை வெளியிட்டிருக்கிறார். இக்காசில் **கிட்டிணப்ப நாயக்கர்** என்று நான்கு வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக்காசின் முக்கியத்துவம் யாதெனில் **நாயக்கர்** என்று தம் குலப்பெயரையும் எழுதி வெளியிடப்பட்டிருப்பதாகும்.[1]

தஞ்சைப் பகுதியில் நாயக்கராட்சி அச்சுததேவராயரின் காலத்தில் ஏற்பட்டது. தஞ்சை நாயக்க வமிசத்தின் முதல் மன்னர் செவப்பநாயக்கராவார். இவருக்கு இப்பகுதி ஸ்ரீதன மாக வழங்கப் பெற்றதாகும். இவர் சிறந்த கொடையாள ராகவும் திறமைமிக்க ஆட்சியாளராகவும் விளங்கியிருக்கிறார். இவரது காலத்தில் வெளியிடப் பெற்ற காசாக ஒரு காசு அண்மையில் நாகசாமியால் இனம் காண முடிந்திருக்கிறது.[2]

1. ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், பக்கம் 28.
2. Tamil Coins - A Study, p. 164.

இக்காசில் முன்பக்கம் புள்ளிகளாலான வட்டத்தில் சங்கின் உருவமும், பின்பக்கம் இரு வரிகளில் நாகரி எழுத்தில் **சவப்பா** என்று எழுத பெற்றும் காணப்படுவதாகக் கூறியுள்ளார். கல்வெட்டுக்களில் செவப்பாவினுடைய பெயர் **செவன்றபதி செவபூப, சின்னசெவ** மற்றும் **சிறுசெவ** என்றும்; இலக்கியத்தில் '**சவப்பா**' என்றும் குறிக்கப் பெறுவதாகவும் தெரிவித்துள்ளார். ஆதலால் **சவப்பா** என்று எழுதப்பெற்றுள்ள இக்காசு தஞ்சை நாயக்க மன்னன் **செவப்பா**வினால் வெளியிடப்பெற்றதாக இருக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறார்.

செவப்ப நாயக்கரின் பெயரனும் அச்சுதப்ப நாயக்கரின் மகனுமான விசைய இரகுநாத நாயக்கன் (கி. பி. 1600 - 1634) தஞ்சை நாயக்க மன்னர்களிலேயே மிகச் சிறந்த போர் வீரராகவும், நிர்வாகத்திறமை பெற்றவராகவும் விளங்கி பல அருஞ்செயல்களைச் செய்திருக்கிறார். இவரது நற்பணிகளின் சிகரமாக விளங்குவது கும்பகோணத்தில் அமைந்துள்ள இராமசாமி கோயிலாகும். இவர் காலத்தில் வெளியிடப் பெற்ற இரண்டு வகை செப்புக் காசுகளை அளக்குடி ஆறுமுக சீதாராமன் அறிஞர்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். ஒரு காசு தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் கிடைத்ததாகவும், இதில் மன்னனது பெயர் நாகரி எழுத்தில் **ரகுநாத** என்று இரு வரிகளில் எழுதப் பெற்றிருப்பதாகவும், ஒளிப்படத்தோடு வெளியிட்டுள்ளார்.[1] இரண்டாம் காசு தஞ்சையை அடுத்துள்ள திருவையாற்றுப் பகுதியில் கிடைத்திருப்பதாகவும், இக்காசின் பின்பக்கத்தில் **விசைய ரகுநாதன்** என்று தமிழ் எழுத்தில், தமிழ் மொழியில் காணப்பெறுவதாகவும் எழுதியுள்ளார்.[2]

தஞ்சை நாயக்க மன்னர்களான செவப்ப நாயக்கன், அச்சுதப்ப நாயக்கன், விசைய ரகுநாத நாயக்கன் ஆகியோர் காலத்தில் அமைச்சராக இருந்து அரும்பணியாற்றியவர்

---

1. Coinex 94 Madras, Special Bulletin, Madras Coin Society, (1994), பக்கம் 16.
2. தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி I, (1994), பக்கம் 29.

கோவிந்த தீட்சதராவார். குறிப்பாக விசைய இரகுநாதன் காலத்தில் அம்மன்னனுக்கு அமைச்சராகவும், அரச குருவாகவும், ஆலோசகராகவும் விளங்கி மன்னரின் அளப்பரிய வெற்றிகளுக்குப் பக்க பலமாக இருந்திருக்கிறார். ஆதலால் மன்னன் இத்தீட்சதரின் சீரிய பணிகளைப் பாரட்டும் முகத்தான் தஞ்சை மாவட்டத்தில் **கோவிந்தக்குடி, கோவிந்த புத்தூர், ஐயன் பேட்டை, ஐயன் கடைவீதி, ஐயன்குளம், ஐயன் வாய்க்கால்** எனப் பல ஊர்களையும். நீர்நிலைகளையும் மற்றும் கடைவீதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறான். அத்தோடு இவரது நினைவாக ஒரு செப்புக் காசையும் வெளியிட்டு இந்திய நாட்டு வரலாற்றிலேயே ஒரு புது சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கிறான். அவன் காலம் வரை இந்தியாவில் ஆட்சி புரிந்த எந்த மன்னரும் நினைத்துப் பார்க்காத ஒரு புதுமையை இவன் செய்து முடித்து, இந்திய வரலாற்றில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்துக் கொண்டிருக்கிறான்.

இக்காசின் முன்பக்கத்தில் தோரண வாயிலுக்கு நடுவே மன்னர் நின்ற நிலையிலுள்ள உருவமும், பின்பக்கத்தில் மூன்று வரிகளில் தமிழில் **கோவிந்தய்யா** என்று எழுதப் பெற்றும் காணப்பெறுவதாகவும்; இக்காசு கும்பகோணம் காவிரி ஆற்றுப்படுகையில் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.[1]

டாக்டர் நாகசாமி தம் நூலில் விசைய இரகுநாதனால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று ஒரு காசைக் குறிப்பிட்டுள்ளார். இக்காசில் முன்பக்கம் இராமர், இலக்குவன் (சீதை) மற்றும் அனுமன் உருவங்கள் நிற்கும் நிலையிலும்; பின்பக்கம் மன்னன் தம் இடையில் நீண்ட வாளினைச் செருகிக் கொண்டு நிற்கும் உருவமும் காணப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். இராமர் மீது அடங்காப் பற்றும் பணிவும் கொண்டிருந்த காரணத்தால் இரகுநாதன் இக்காசை வெளியிட்டிருக்கலாம்

1. Op. cit, பக்கம். 30.

என்று கருதியுள்ளார்.[1] இவ்வகைக் காசு தஞ்சைப் பகுதியில் மிகுந்த அளவில் கிடைத்து வருவதாகவும் குறிப்பட்டிருக்கிறார்.

மதுரையில் ஏற்பட்ட கொந்தளிப்பை அடக்கி பாண்டி நாட்டு மன்னனை அரசு கட்டிலில் அமர்த்தும் பொருட்டு நாகம நாயக்கரை, கிருஷ்ண தேவராயர் அனுப்பி வைத்தார். கொந்தளிப்பை அடக்கிய நாகம நாயக்கர் பாண்டியனுக்கு அரசுரிமையைத் தராமல் தாமே அதை ஏற்று விட்டார். இதையறிந்த கிருஷ்ண தேவராயர் நாகமனை வீழ்த்த அவரது மகனான விசுவநாத நாயக்கனை அனுப்பி வெற்றி காணச் செய்தார். அப்போது நிலவிய பாண்டிய நாட்டின் சூழ்நிலையையுணர்ந்த கிருஷ்ணதேவராயர் விசுவநாத நாயக்கரையே மதுரையில் ஆட்சி செலுத்தும்படி அனுப்பி வைத்தார். இவ்வாறு மதுரை நாயக்கர் ஆட்சி தொடங்கப் பெற்றது விசுவநாத நாயக்கர் விசைய நகரப் பேரரசுக்கு அடங்கியவர் என்றாலும் தம்மைப் பாண்டியன் என்றே அழைத்துக் கொண்டார். அதற்குச் சான்றாக இவரால் வெளியிடப்பெற்ற ஒரு காசு இன்றும் காணப்படுகிறது இக்காசில் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும், பின்பக்கம் இருகயல், இடையில் சாட்டை, பிறைச்சந்திரன் மற்றும் இடப் பக்கமிருந்து வலப்பக்கமாகத் தமிழில் **விசுவநாதன்** என்று எழுதப்பெற்று காணப் பெறுகின்றது.

இவனால் வெளியிடப் பெற்ற மற்றொரு வகைக் காசை டாக்டர் நாகசாமி தாம் குற்றாலத்தில் ஒருவரிடம் பார்த்ததாகவும்; அக்காசில் முன்பக்கத்தில் **பாண்டியன்** என்று தமிழில் எழுதப்பெற்றும், அதற்குக் கீழ்ப்பகுதியில் இரு கயல்களும்: பின்பக்கத்தில் **விசுவநாதன்** என்று தமிழிலும் எழுதப்பெற்றுள்ளதாகக் கூறியுள்ளார்.[2]

தமிழகத்தில் சிறுவடிவிலான சில செப்புக் காசுகள் பெரும் அளவில் கிடைத்து வருகின்றன. இவற்றில்

1. Op. cit, p. 166.
2. Op. cit- p. 168.

ஓரெழுத்து அல்லது ஈரெழுத்துக்களே காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களைக் கொண்டு அண்மைக் காலத்தில் மதுரை நாயக்க மன்னர்கள் சிலரால் இவை வெளியிடப் பட்டிருக்கலாம் என்ற கருத்து கொள்ளப்பட்டிருக்கிறது.[1]

வி என்று நாகரி எழுத்தில் ஒருவகையும், தெலுங்கு கன்னட எழுத்தில் மற்றொரு வகையும் எழுதப் பெற்றிருக்கும் காசு வீரப்ப நாயக்கராலும், சொ என்று தெலுங்கு-கன்னட எழுத்தில் எழுதப் பெற்று காணப்படுவது சொக்க நாத நாயக்கரால் வெளியிடப்பட்டது என்றும், தி என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டிருப்பது திருமலை நாயக்கரால் வெளியிடப் பெற்றிருக்கலாமென்றும் ஊகிக்கப் பட்டிருக்கிறது.

தேசிகாச்சாரி தம் நூலில் ஒரு காசின் ஒளிப்படத்தை வெளியிட்டு அதில் கீழ்க்காணுமாறு காணப்படுவதாக எழுதி யுள்ளார். முன்பக்கத்தில் மேடை மீது படுத்திருக்கும் காளை உருவமும், பின்பக்கம் நான்கு சதுரங்களில் மங்கம்மா என்று தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றும் காணப்படுகிறது.[2] இக்காசு மதுரையை ஆட்சி புரிந்த இராணி மங்கம்மாவால் வெளியிடப்பட்டது என்று கருதப்படுகிறது.

---

1. Ibid pp. 171-172.
2. South Indian Coins, Plate IV, No. 82.

# நாயக்கர் காசுகள்

## செஞ்சி நாயக்கர் காசு

**முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்**
**(கி.பி. 1567-1575)**

1. **முன்பக்கம் :** இடப்பக்கம் திரும்பி நிற்கும் காளை

   **பின்பக்கம் :** **கிட்டிணப்ப நாயக்கர்** என்று நான்கு வரிகளில், தமிழில்.

## தஞ்சை நாயக்கர் காசுகள்

**விசையரகுநாதன்**
**(கி.பி. 1600-1634)**

1. **முன்பக்கம் :** திருமகள் அமர்ந்த நிலை

   **பின்பக்கம் :** **விசையரகுனாதன்** என்று நான்கு வரிகளில் தமிழில்

2. **முன்பக்கம் :** சிவன், பார்வதி அமர்ந்த நிலை

   **பின்பக்கம் :** **ரகுநாத** என்று இரண்டு வரிகளில், நாகரியில்

3. **முன்பக்கம் :** தோரண வாயிலுக்குள் நாயக்க மன்னர் உருவம் நிற்கும் நிலை

   **பின்பக்கம் :** **கோவிந்தய்யர்** என்று மூன்று வரிகளில், தமிழில்.

## மதுரை நாயக்கர் காசுகள்

**விசுவநாத நாயக்கர்**
**(கி.பி. 1529-1564)**

1. **முன்பக்கம் :** நிற்கும் மனித உருவம்

   **பின்பக்கம் :** இரு கயல், நடுவில் சாட்டை, இடப்புறமிருந்து வலப்புறமாக **விசுவநாதன்** என்று தமிழில்.

2. முன்பக்கம் : இரு கயல், இவைகளுக்கு மேல் பகுதியில் **பாண்டிய** என்று தமிழில்

பின்பக்கம் : **விசுவநாதன்** என்று தமிழில்.

**வீரப்ப நாயக்கர் (?)**
**(கி.பி. 1572-1595)**

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம். இடக்கரத்துக் கீழ் குறுவாள் போன்று தெரிகிறது.

பின்பக்கம் : நிற்கும் காளை, **வி** என்று நாகரி எழுத்தில்

2. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : நிற்கும் காளை. காளைக்கு முன்பு சங்கும் **வி** என்று தெலுங்கு-கன்னட எழுத்தும்.

**சொக்கநாத நாயக்கர் (?)**
**(கி.பி. 1659-1682)**

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : நிற்கும் காளை. காளையின் முன்பு சங்கு காளைக்கு மேற்பகுதியில் **சொ** என்று தெலுங்கு-கன்னட எழுத்தில்.

**திருமலை நாயக்கர் (?)**
**(கி.பி. 1623-1659)**

1. முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்

பின்பக்கம் : **தி** என்று தெலுங்கு எழுத்தில். வலப்பக்கம் திரும்பி நிற்கும் காளை. முன்பக்கம் குறுவாள். மேற்பகுதியில் பிறைச்சந்திரன்.

**மங்கம்மாள்**
**(கி.பி. 1689-1706)**

1. முன்பக்கம் : மேடை மீது படுத்திருக்கும் காளை.

பின்பக்கம் : நான்கு சதுரங்கள். **மங்கம்மாள்** என்று சதுரங்களில் தெலுங்கில்.

பிரிவு பதினேழு

# மராட்டியர் காலக் காசுகள்

தஞ்சையில் கி.பி. 1676-ல் மராட்டியர் அரசு வெங்காஜி என்னும் ஏகோஜிதலைமையில் தொடங்கியது ஏகோஜி மற்றும் சத்ரபதி சிவாஜி ஆகிய இருவரும் ஷாஹஜியின் புதல்வர்கள் ஆவர். ஷாஹஜியின் முதல் மனைவி ஜிஜாபாயின் மகன் சிவாஜி. ஷாஹஜியின் இரண்டாம் மனைவி துக்காபாயி மோஹிதேயின் மகன் வெங்காஜி என்னும் ஏகோஜி. ஏகோஜியின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1676-1684) ஆட்சிப் பகுதி பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆங்காங்கு பாளையக்காரர்கள் நியமிக்கப்பட்டனர் மராட்டியர் ஆளுகைப் பகுதியின் தென்புறம் கள்ளர் பாளையக்காரர்களும், வடபுறம் வன்னியப் பாளையக்காரர்களும் காவல் மற்றும் இறை வசூல் பொறுப்பேற்றிருந்தனர். ஏகோஜிக்குப் பிறகு சகஜி (கி.பி. 1684-1711), முதலாம் சரபோஜி (கி.பி. 1711-1729), துக்கோஜி (கி.பி. 1729-1735), பிரதாப்ஜிங் (கி.பி. 1739-1763), துளஜா (கி.பி. 1763-1787), அமர்சிங் (கி.பி. 1787-1798), இரண்டாம் சரபோஜி (கி.பி. 1798-1832), சிவாஜி (கி.பி. 1832-1855), ஆகியோர் தொடர்ந்து ஆட்சி செய்திருக்கின்றனர். இம் மன்னர்கள் காலத்தில் தமிழகத்தில் பல துறைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

உதாரணங்களாகத் தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றமை, திருவாரூர்க் கோயில் புதுப்பிக்கப்பட்டமை, நாகூர் தர்காவின் 11 நிலைக் கோபுரம் கட்டப் பெற்றமை, தஞ்சை அரண்மனை வளாகத்தில் புதிதாகச் சில பகுதிகள் எழுப்பிக்கப்பட்டமை, ஒரத்த நாட்டில் முக்தாம்பாள் சத்திரம், சாளுவ நாயக்கன் பட்டினத்தில் மனோரா எனப்படும் உப்பரிகை ஆகியவை கட்டியமை, தஞ்சை மராட்டிய மரபின் பண்டைய வரலாற்றை, 1803-ஆம் ஆண்டு

வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தஞ்சைப் பெரிய கோயில் பிரகாரத் தெற்குச் சுவரின் உட்புறத்தில் கல்வெட்டாக வெட்டிவைத்தமை, உலகின் தலை சிறந்த சிற்பியான ஃபிளாக்சு மேனைக் கொண்டு இரண்டாம் சரபோஜியின் உருவச்சிலையையும். சுவார்ட்சு பாதிரியாருக்கு நினைவுச் சின்னத்தையும் வெண் பளிங்குக் கற்களில் வடிக்குமாறு செய்தமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவர்களது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு மற்றும் புற நாட்டு வணிகம் சிறப்புற விளங்கியிருக்கிறது. அதுபோழ்து பயன்படுத்தப் பெற்ற சில காசு வகைகள், இவர்கள் காலத்தியக் கல்வெட்டுகள், மோடி ஆவணங்கள் மற்றும் செப்புப் பட்டயங்கள் வாயிலாகத் தெரிய வருகின்றன.

**சக்கரம்** என்னும் காசும், அதன் கூறுகளான **பணம்**, **காசு** ஆகியவைகளும் பெரும்பாலும் வழக்கத்தில் இருந்தன என்று அறிய முடிகிறது.

"*1799*[1] : நெல் கலம் ஒன்றுக்கு $3\frac{1}{2}$ **பணம் வீதம் 500 கலங்களுக்குச் சக்கரம் 175**" என்று ஒரு குறிப்பு மோடி ஆவணத்தில் உள்ளது.

"*500* கலங்களின் விலை (*500* × $3\frac{1}{2}$) *1750* பணம்; அதாவது *175* சக்கரம் என்று தெரிதலின், இதனாலும் *10* பணம் ஒரு சக்கரம் என்பது உறுதி பெறும்".[2]

"*1793* ஜுலை *19*உ ... **ஒரு பணத்துக்கு 32 காசு**" என்ற குறிப்பு *32* காசு கொண்டது ஒரு பணம் என்பதை அறிவிப்பதாக உள்ளது.[3]

சென்னப் பட்டணம் வெள்ளிப் பணம் என்று ஒரு வகைக் காசும் வழக்கில் இருந்திருக்கிறது என்பது,

---

1. இவ்வெண்கள் ஆண்டைக் குறிக்கும்.
2. கே. எம். வெங்கட்ராமையா, "தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்", (1984) பக்கம். 149.
3. மேலது, பக்கம். 150.

"1809 : தஞ்சை கோட்டை தேவஸ்தானம் **சென்னப் பட்டணம் வெள்ளிப் பணம்** 400**க்கு ஒன்று** $2\frac{1}{2}$ **பணம் வீதம் சக்கரம்** 100" என்ற குறிப்பின் மூலம் தெரியவருகிறது.

**புலிவராகன்** என்னும் மற்றொரு வகைக் காசும் பேசப் படுகிறது.

> "18-6-1816 : சென்னப் பட்டணம் வெள்ளிப் பணம் 6,30,000-க்கு வராகன் ஒன்றுக்கு 45 பணம் வீதம் புலிவராகன் 14,000 வரவு வைக்கிறது."

என்ற குறிப்பு காணப் பெறுவதால் **45 பணம்** மதிப்புடையது **ஒரு புலிவராகன்** என்பது பெறப்படும்.

மேலே காணப்பெறும் குறிப்புக்களால் அக்காசுகளின் மதிப்பைக் கீழ் வருமாறு உணரலாம்.

| | | |
|---|---|---|
| 32 காசு | = | 1 பணம் |
| $2\frac{1}{2}$ பணம் | = | 1 சென்னப்பட்டணம் வெள்ளிப்பணம் |
| 4 வெள்ளிப்பணம் (அ) | | |
| 10 பணம் | = | 1 சக்கரம் |
| $4\frac{1}{2}$ சக்கரம் (அ) | | |
| 45 பணம் | = | 1 புலிவராகன் |

$4\frac{1}{2}$ சக்கரம் அல்லது 45 பணம் மதிப்புடைய புலிவராகன் இருந்ததைப் போன்றே, $2\frac{1}{4}$ சக்கரம் அல்லது $22\frac{1}{2}$ பணம் மதிப்புடைய மற்றொரு புலிவராகனும் கையாளப் பெற்றிருக்கிறது. இவ்வராகன் வெள்ளி புலிவராகன் என்று குறிக்கப் பெறுகிறது. ஆதலால் $4\frac{1}{2}$ சக்கரம் மதிப்புடைய புலிவராகன் தங்கக் காசாக இருந்திருக்கலாம்.

> "*1815* : **வெள்ளி புலிவராகன்** செலவழித்ததில் **வராகன் ஒன்றுக்குச் சக்கரம் 2-2½பணம்** வீதம் சக்கரம் 5033 - 2½க்கு வராகன் 2237"

என்ற குறிப்பின் மூலம் வெள்ளி புலிவராகன் வழக்கத்தில் இருந்ததை அறியலாம்.[1]

மேலும் ஒரு வராகனுக்குச் சக்கரம் 2, பணம் 8 என்ற மதிப்புடைய **பரங்கிப்பேட்டை வராகன்** என்னும் காசும்; ஒரு வராகனுக்குச் சக்கரம் 2 பணம் 8¾ மதிப்புடைய **நாகப்பட்டினம் வராகன்** என்னும் காசும் ஆளுகையில் இருந்திருக்கிறது.[2]

மதுரைப் பகுதியில் வழக்கில் இருந்த சக்கரம் என்ற காசு வகை, தஞ்சைப் பகுதி சக்கரம் என்ற காசு வகை மதிப்பை விட குறைந்ததாக இருந்திருக்கிறது என்பது,

> "1799 : மணிகண்ட பெருமாள் கோயில் சந்தியா மண்டபம்-நதியின் கரை சீர்படுத்தத் தஞ்சாவூர்ச் சக்கரங்கள் 50; இதற்குச் தஞ்சாவூர்ச் சக்கரம் ஒன்றுக்கு மதுரை 1 சக்கரம் 2¼ மூன்று வீசம் வீதம் மதுரைச் சக்கரங்கள் மொத்தம் 62 சக்கரங்கள் ஒரு பணம்"

என்ற குறிப்பிலிருந்து தெரிய வரும்.[3]

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் காசுகளை அச்சடிக்கும் தங்கசாலை **திருமருகல்** என்னும் ஊரில் இருந்ததைக் கீழ்க் காணும் குறிப்பால் உணரலாம்.

"கி.பி. 1786-லும் **திருமருகலில்** நாணயங்கள் தயாரிக்கும் வேலை தை மாதம் முதல் தொடங்கி நடந்து வந்தது. அதனைக் குத்தகைக்கு விட்டனர். குத்தகைக்காரர் வேலை

---

1. கே.எம். வெங்கட்ராமையா. 'தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்', (1984) பக்கம். 150.
2. மேலது. பக்கம். 151
3. மேலது. பக்கம். 153.

தொடங்கவில்லை போலும். மீண்டும் நாணயங்களைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்க வேண்டும் என்று ஒருவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்."[1]

செப்புபட்டயத்தில் **இராஜகோபாலன் சக்கரம் பொன்** என்று ஒரு காசு குறிக்கப்படுகிறது.[2] இக்காசில் இராஜ கோபாலர் என்ற தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்டு வெளியிடப் பெற்றிருக்கலாம். தஞ்சை மாவட்டம் பாப்பா நாடு சமீனைச் சேர்ந்த மன்னார்குடி செயங்கொண்ட நாதர் கோயிலில் உள்ள ஒரு செப்பேட்டில்[3] அக்கோயிலின் "உச்சிக்கால கட்டளைக்கு னாட்டில் வச்சு குடுத்து **ராசகோபாலச் சக்கரம் பொன்** 45க்கு" என்று குறிக்கப் படுகிறது. இச்சக்கரத்தின் மதிப்பும் 10 பணம் என்பது இச்செப்பேட்டில் காணப் பெறும் விபரத்தினால் தெரிய வருகிறது.

---

1. கே. எம். வெங்கட்ராமையா, தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும், (1994) பக்கம். 157.
2. Copper Plate A.R.E. 14 of 1920-21
3. செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் (1983) பக்கம் 141.

# பிற்சேர்க்கை I

## தந்திவர்மன் காசு

பல்லவ மன்னன் தந்திவர்மன் வெளியிட்ட வெள்ளிக்காசு ஒன்று கும்பகோணத்தில் அண்மையில் கிடைத்துள்ளது. இந்தக் காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை, காளையின் மேல் '**தந்தி**' என்று தமிழிலும், பல்லவகிரந்த எழுத்துகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது. 'த' எழுத்து பல்லவர் காலத் தமிழ் எழுத்திலும் 'ந்தி' என்ற கூட்டெழுத்து பல்லவர் கால கிரந்த எழுத்துகளிலும் உள்ளன. காசின் பின் பக்கத்தில் பாத்திரம், அதைச் சுற்றிலும் பூவிதழ்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. பல்லவகுலம் 'பாத்திரத்திலிருந்து வெளிப்பட்டது' என்று சிம்மவர்மனின் பள்ளன்கோயில் செப்பேடு கூறுவதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். காசின் எடை 2 கிராம்.

தந்திவர்மன் வெளியிட்ட காசு தமிழகத்தில் இப்போது தான் முதன்முதலாகக் கிடைத்துள்ளது. அதுவும் குறிப்பாக பல்லவ நாட்டில் கிடைக்காமல் சோழ நாட்டில் கிடைத் திருப்பதால் பல்லவர் காசுகளில் இந்தக் காசு சிறப்பிடம் வகிக்கிறது. மேலும் பல்லவர் ஆட்சி சோழநாட்டில் இருந்த மையை இந்தக் காசு உறுதி செய்கிறது. தந்திவர்மன் ஆட்சி செய்த ஆண்டு கி.பி. 796 லிருந்து கி.பி. 846 வரையாகும். பல்லவர்கால எழுத்துகளை ஆய்வு செய்ய இந்தக் காசு மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

## மூன்றாம் நந்திவர்மன் காசு

பல்லவ மன்னன் காலத்து அரிய வெள்ளிக் காசு ஒன்று திருக்கோயிலூர் என்ற ஊரிலிருந்து கிடைத்துள்ளது இந்தக் காசின் சிறப்பு அம்சம் இதில் நான்கு வேந்தர்களின் சின்னங்கள் பொறித்திருப்பதாகும். அதனால் இந்தக் காசு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காசாகும். காசின் எடை 2.350 கிராம். இந்தக் காசின் முன் பக்கம் பல்லவர் இலச்சினையான காளை நின்றுகொண்டும், காளையின் மேற்புறத்தில் மூன்று எழுத்து

களும் காணப்படுகின்றன. முதல் எழுத்து அழிந்த நிலையிலும் மற்றும் உள்ள இரண்டு எழுத்துகள் தெளிவற்ற நிலையிலும் காணப்படுகின்றன. பின்பக்கம் சேர இலச்சினையான வில், சோழ இலச்சினையான புலி, பாண்டிய இலச்சினையான மீன் ஆகியவை காணப்படுகின்றன.

இந்தக்காசை சிறந்த பல்லவ அரசன் ஒருவன் மூவேந்தர்களையும் வென்று தன் ஆட்சிக்குட்படுத்தி ஆட்சிசெய்தபோது வெளியிட்டிருக்கலாம். இந்தக் காசு கொஞ்சம் தடிப்பாகவும். அமைப்பில் வட்டமாகவும் காணப்படுகிறது. பொறித்துள்ள எழுத்துகள் பல்லவ கிரந்தம் போல காட்சி தருகின்றன. பல்லவர் வரலாற்றில் பிற்காலத்தில் சிறப்புற்றிருந்தவன் மூன்றாம் நந்திவர்மனாகும். இந்த மன்னனைப் பற்றி நந்திக் கலம்பகத்தில் சேர, சோழ, பாண்டியரை வெறியலூர், வெள்ளாறு, பழையாறு, தெள்ளாறு இவற்றில் நடந்த போர்களில் முறியடித்தவன் என்றும், மூவேந்தரிடமும், வடபுலத்தரசரிடமும் திறை பெற்றவன் என்றும் குறிப்பிடப்படுகிறது, இவன் ஆட்சி செய்த ஆண்டு கி.பி. 846 — 869 வரையாகும். மூன்றாம் நந்திவர்மன் மூவேந்தர்களையும் வெற்றி பெற்று தன் குடையின் கீழ் ஆட்சி செய்த போது சிறப்பு நாணயமாக இதை வெளியிட்டிருக்கலாம்.[1]

---

1. நன்றி : ஆறுமுக சீதாராமன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி - I, பக்கங்கள் 23-24.

# II

## கல்வெட்டுக்களில் காசுகள்

| வ. எண் | காசு பெயர் | ஊர் | ஆண்டு | வெளியிடப் பட்டுள்ள நூல் | எண் |
|---|---|---|---|---|---|
| 1 | காசு | திருச்சிராப்பள்ளி | கி.பி. 850 | தெ.இ.க.தொ. 12 | எண் 60 |
| 2 | கிருஷ்ண கச்சா | இராமநாதபுரம் | ,, 868 | இ.க.ஆ.அ. | 90/1908 |
| 3 | தினாரா | ,, | ,, 872 | ,, | 136/1908 |
| 4 | காணம் | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 887 | தெ.இ.க.தொ. 12 | எண் 70 |
| 5 | அக்கம் | தஞ்சாவூர் | ,, 912 | இ.க.ஆ.அ. | 275/1923 |
| 6 | கருங்காசு | ,, | ,, 970 | தெ.இ.க.தொ. 13 | எண் 250, 253 |
| 7 | காசு | ,, | ,, 970 | ,, 13 | எண் 250 |
| 8 | ஈழக்காசு | தென்னார்க்காடு | ,, 10-ஆம் நூற்றாண்டு | இ.க.ஆ.அ. | 330/1910, 236/1911 |
| 9 | ராஜராஜன் காசு | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1041 | ,, | 141/1912 |
| 10 | ராஜேந்திர சோழன் காசு | தஞ்சாவூர் | ,, 1044 | ,, | 217/1911 |
| 11 | அச்சு | திருநெல்வேலி | ,, 1046 | ,, | 640/1916 |
| 12 | மதுராந்தகதேவன் மாடை | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1063 | இ.க.ஆ.அ. | 157/1916, 140/1912 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 13 | புஜபல மாடை | திருச்சிராப்பள்ளி | கி.பி. 1080 | இ.க.ஆ.அ. | 31/1936-37 |
| 14 | இராஜேந்திரசோழன் மாடை | ,, | ,, 1080 | தெ.இ க.தொ. 24 | எண் 53 |
| 15 | முந்நாள் காசு | ,, | ,, 11-ஆம் நூற்றாண்டு | இ.க.ஆ.அ. | 430/61-62 |
| 16 | மதுராந்தகன் மாடை | தஞ்சாவூர் | ,, 11.6 | ,, | 90/1927-28 |
| 17 | திரம்மம் | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1123 | ,, | 280/191 |
| 18 | ஆனை ஆச்சு | திருநெல்வேலி | ,, 1148 | ,, | 649/1916, 533/1911 |
| 19 | கண்டகோபாலன் மாடை | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1181 | ,, | 560/1912 |
| 20 | கண்டகோபாலன் புதுமாடை | ,, | ,, 1184 | ,, | 552/1912 |
| 21 | ஆனை அச்சு | திருச்சிராப்பள்ளி | ,, 1198 | ,, | 185/1914 |
| 22 | புஜப்பலப் புதுமாடை | செங்கை எம்.ஜி.ஆர் | ,, 1199 | ,, | 1/1933-34 |
| 23 | புதுக்காசு | ,, | ,, 1201 | தெ.இ.க.தொ. 8 | எண் 35 |
| 24 | திரம்மம் | திருநெல்வேலி | ,, 1204 | இ க.ஆ.அ. | 459/1909 |
| 25 | செம்பாதி அச்சு | ,, | ,, 1221 | ,, | 317/1927-28 |
| 26 | பழங்காசு | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1231 | ,, | 310/1928-29 |
| 27 | புஜபல மாடை | ,, | ,, 1231 | ,, | 311/1928-29, 667/1904 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 28 | ஆனை அச்சு | செங்கை எம் ஜி.ஆர். | கி.பி. 1234 | இ.க.ஆ.அ. | 93/1915, |
| | ஸ்ரீயக்ஷிபழஞ்சலாகை அச்சு | | | | |
| 29 | பழமுதலானை அச்சு | இராமநாதபுரம் | ,, 1236 | ,, | 312/1949-50 |
| 30 | புதுப்பொன் அச்சு | கன்னியாகுமரி | ,, 1245 | ,, | 467/1958-59 |
| 31 | பழஞ்சலாகை அச்சு | கோவை | ,, 1247 | தெ.இ.க.தொ. 5 | எண் 249 |
| 32 | தன்மபாலன் குளிகை | திருநெல்வேலி | ,, 1257 | இ.க.ஆ.அ. | 54/1944-45 |
| 33 | கண்டகோபாலன் வாசிபடா புதுமாடை | வடார்க்காடு | ,, 1259 | தெ.இ.க.தொ. 12 | எண் 190 |
| 34 | நெல்லூர் மாடை | செங்கை எம்.ஜி.ஆர். | ,, 1263 | ,, 12 | எண் 218 |
| 35 | பெருமாள் ராசிப்பணம் | ,, | ,, 1263 | ,, | ,, |
| 36 | கண்டகோபாலன் பழமாடை | வடார்க்காடு | ,, 1278 | ,, 7 | எண் 1045 |
| 37 | புதுக்குளிகை | இராமநாதபுரம் | ,, 1283 | இ.க.ஆ.அ. | 62/1916 |
| 38 | வராகன் | ,, | ,, 1283 | ,, | 169/1935-36 |
| 39 | வீரபஞ்சரன் காசு | ,, | ,, 13-ஆம் நூற்றாண்டு | ,, | 14/1924 |
| 40 | ஸ்ரீயக்கிப்பழஞ்சலாகை அச்சு | கோவை | ,, ,, | ,, | 299/1959-60 |
| 41 | சோழியன் காசு | இராமநாதபுரம் | ,, ,, | ,, | 185/1935-36 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 42 | தலைக்காசு | தஞ்சாவூர் | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு | இ.க.ஆ.அ. | 388/1961-62 |
| 43 | குளிகைப்பணம் | திருநெல்வேலி | ,, ,, | ,, | 515/1916 |
| 44 | இராசிமாராசன் குளிகை | இராமநாதபுரம் | ,, 1320 | ,, | 15/1924 |
| 45 | வீரசம்பன் குளிகை | தென்னார்க்காடு | ,, 1370 | ,, | 373/1921 |
| 46 | இராசிப்பாளையம் பணம் | கோவை | ,, 14-ஆம் நூற்றாண்டு | ,, | 223 1927-28 |
| 47 | இராசிப்பாளையம் புள்ளிப்பணம் | ,, | ,, 16-ஆம் நூற்றாண்டு | ,, | 225/1927 |
| 48 | இராசகோபாலன் சக்கரம் பொன் | தஞ்சாவூர் | ,, 1758 | ,, | 14/1920-21 |

தெ.இ.க.தொ. — தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி

இ.க.ஆ.அ. — இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை

# III

## கல்வெட்டுக்கள் குறிப்பிடும் காசுகளின் கூறுகளும், மதிப்பும்

| | | |
|---|---|---|
| 2 குன்றிமணி<br>20 மஞ்சாடி | 1 மஞ்சாடி<br>1 கழஞ்சு | S.I.I. Vol. XVII. No. 314; XII, 87, 88, |
| 1 அச்சு | 13 திரமம் | S.I.I , V, No. 439 |
| 1 கழஞ்சு<br>1 கழஞ்சு (அ)<br>1 அச்சு | 1 அச்சு<br>8 வராகன் பணம் (அ)<br>8 வராகன் புள்ளிக் குளிகை | A.R.E. 1923, Part II, Para 60, p. 114 |
| 1 கழஞ்சு | 2 காசு | ARE 228/1923 |
| 1 காசு | 7 திரமம் | ARE 228/1923 |
| 1 ஈழக்கருங்காசு | $\frac{1}{5}$ காசு பொன் | ARE 47/1925 |
| 250 பணம் | 2,500 செழியக்காசு | ARE 439/1913 |
| 1 காசு | 20 மா | ARE 273/1927 |
| 1 மாடை | $\frac{1}{2}$ கழஞ்சு பொன் | S.I.I., XVII, 625 |
| 20 மா | 1 மாடை | S.I.I . XIV, 228 |
| 1 காசு | 8 அக்கம் | S.I.I., V, 724 |
| 1 ஈழக்காசு | $\frac{3}{4}$ கழஞ்சு | S.I.I., V, 720 |

# IV

## பாவாணர் தமிழ் வரலாறு

| | | | |
|---|---|---|---|
| 5 | கடுகு | = | 1 சீரகம் |
| 5 | சீரகம் | | 1 நெல் (அ) 25 கடுகு |
| 2 | நெல் மணி | | 1 பிளவு (½ குன்றிமணி) |
| 2 | பிளவு | | 1 குன்றிமணி (அ) 100 கடுகு |
| 2 | குன்றிமணி | | 1 மஞ்சாடி (ஒரு வகை விதை) |
| 2 | மஞ்சாடி | | 1 பணவெடை (அ) 4 குன்றிமணி |
| 8 | பணவெடை | | 1 வராகனெடை (அ) 32 குன்றிமணி |

# V

## கணக்கதிகாரம்

| | | | |
|---|---|---|---|
| 5 | பணவெடை | = | 1 கழஞ்சு (20 குன்றிமணி) |
| 4 | கழஞ்சு | | 1 கஃசு (80 ,, ) |
| 4 | கஃசு | | 1 பலம் (320 ,, ) |
| 4 | குன்றிமணி | | 1 காணம் |
| 10 | காணம் | | 1 காசு (40 குன்றிமணி) |
| 5 | குன்றிமணி | | 1 மாவெடை |

# VI

## அண்மைக்காலம் வரை தமிழ் நாட்டில் பொதுவாக வழக்கில் இருந்த நிறுத்தலளவை[1]

| | | |
|---|---|---|
| 1 பலம் | = | 320 குன்றிமணி |
| 4 பலம் (1,280 குன்றிமணி) | | 1 குண்டம் |
| 8 பலம் (2,560 குன்றிமணி) | | 1 சேர் |
| 5 சேர் (அ) 40 பலம் (அ) 12,800 குன்றிமணி | | 1 வீசை |
| 2 வீசை (அ) 80 பலம் (அ) 25,600 ,, | | 1 தடை |
| 5 வீசை (அ) 200 பலம் (அ) 64,000 ,, | | 1 துலாம் |
| 8 வீசை (அ) 320 பலம் (அ) 1,02,400 ,, | | 1 மணங்கு |

1. The informations given in the appendices III, IV and V are gathered from K. Venkatachalam, 'A study of the weights and Measures of the Indus Valley civilization' paper presented at the Seminar on the Indus Valley Script, held at Tamil University from 10th to 14th April, 1983.

# VII

## திருவள்ளுவரின் திருவுருவம் பொறித்த தங்கக்காசு

### ஐராவதம் மகாதேவன்

திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறித்த ஒரு தங்க நாணயம் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி அரசால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது என்பது இதுவரை எவருக்கும் தெரிந்திராத ஒரு வியப்பான செய்தியாகும்.

### முந்தைய குறிப்புகள்

கல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நாணயங்களின் பட்டியலின் முதல் தொகுதி 1906-ல் வெளியானது இதில்தான் இந்தத் தங்க நாணயத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு முதன்முதலாகக் காணப்படுகிறது.[1] இரட்டை வராகன் (Double Pagoda) என்று அழைக்கப்பட்ட ஒரு தங்க நாணயத்தின் முன்புறத்தில் அமர்ந்த நிலையில் 'விஷ்ணு'வின் திருவுருவமும், பின்புறத்தில் ஐந்துமுனை நட்சத்திரமும் பொறிக்கப்பட்டுள்ளன என்று இக்குறிப்பு தெரிவிக்கிறது. இக்காசு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினியின் சென்னை அரசால் 1819க்கு முன்னர் வெளியிடப்பட்டது என்றும், இது புத்தம் புதியதாகக் (Mint Condition) காணப்படுவதால் அச்சிடப்பட்டுப் புழக்கத் திற்கு வெளியிடப்படாத நாணயமாக (Pattern Piece) இருக்க வேண்டும் என்றும், இதேபோன்று நான்கு நாணயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன என்றும், அவற்றில் இரண்டு லண்டனில் பிரிட்டிஷ் மியூசியத்திலும், மற்ற இரண்டு கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத்திலும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன என்றும் இக்குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

---

1. Vincent A. Smith, Catalogue of Coins in the Indian Museum, Calcutta, Vol. I. Oxford, 1906, p. 319, Nos. I. M. 2 & 3.

மேற்கண்ட குறிப்பில் இக்காசில் காணப்படும் உருவத்தை 'விஷ்ணு' என்று தவறாக அடையாளம் காட்டப்பட்டதாலும், நாணயத்தின் படம் அந்த நூலில் தரப்படாததாலும், சென்னையிலிருந்து கும்பினி அரசு வெளியிட்ட பல 'நட்சத்திரப் பகோடா' (Star Pogoda) காசுகளில் இதுவுமொன்று என்று கருதி நாணயவியல் அறிஞர்கள் இந்த அரிய நாணயத்தைப் பற்றி மேலும் ஆய்வு செய்யாமலே விட்டுவிட்டனர் என்று தோன்றுகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அண்மையில் (1990) கல்கத்தா பல்கலைக்கழகத்து வரலாற்றுப் பேராசிரியர் பி. என். முகர்ஜி கல்கத்தா இந்திய அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப் பட்டுள்ள தங்க நாணயங்களின் பட்டியலை மட்டும் மிகத் தெளிவான வண்ணப்படங்களுடன் வெளியிட்டுள்ளார்.[1]

இந்நூலில்தான் முதன்முதலாக இங்கு குறிப்பிடப்படும் தங்க நாணயத்தின் வண்ணப்படம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்திய நாணய வரலாற்றிலேயே மிகச் சிறந்த தங்க நாணய வெளியீடுகளில் (Masterpieces) இதுவுமொன்று என்று இந்த நூல் சுட்டிக்காட்டியிருக்கிறது. காசின் முன்புறம் அமர்ந்த நிலையில் காணப்படும் திருவுருவம் ஒரு முனிவ ராகவோ அல்லது தெய்வமாகவோ' இருக்கலாம் என்று முகர்ஜி கருத்து தெரிவித்துள்ளார்.

### நாணயத்தைப் பற்றிய விவரங்கள்

இக்காசைப் பற்றி மேலும் ஆய்வு செய்யுமுன்னர் அதன் முழு விவரங்களும் மேற்கூறிய நூல்களிலிருந்து இங்கு தொகுத்து அளிக்கப்படுகிறது.

1. B.N. Mukherjee, The Indian Gold; An introduction to the Cabinet of Gold coins in the Indian Museum, Calcutta, 1990 p. 85, No. 195, Pl. IXA & B: No. 195· PL X n.

| | | |
|---|---|---|
| நாணயத்தின் உலோகம் | ; | தங்கம் (85·23 சதம் தூய்மையானது) |
| பெயர் | : | இரண்டு(அ)இரட்டை வராகன் (Double Pagoda) |
| எடை | : | 6.9 கிராம் |
| குறுக்களவு | : | 2 2 செ.மீ. |
| வடிவம் | : | வட்டமானது |

முன்புறம் : அமர்ந்த நிலையில் ஒரு முனிவரின் திருவுருவம். அவர் ஒரு பீடத்தின் மீது பத்மாசனமிட்டு தியான நிலையில் அமர்ந்திருக்கிறார். வலது கை வலது தொடை மீதும், இடது கை சின்முத்திரை நிலையிலும் உள்ளன. இடையில் தட்டுச் சுற்றாக வேட்டியும் இடது தோளில் மடித்துப் போட்ட துண்டும் அணிந்திருக்கிறார். மழித்த தலை; தலைக்கு மேலே ஒரு குடை காணப்படுகிறது. அவருக்கு முன் ஒரு சிக்குப் பலகையில் விரித்த நிலையில் ஒரு நூல் வைக்கப்பட்டுள்ளது.

பின்புறம் : ஐந்துமுனை நட்சத்திரம் புள்ளிகளாலான வட்டத்துக்குள் பொறிக்கப்பட்டுள்ளது.

## யார் இந்த முனிவர்?

காசின் முன்புறம் காணப்படும் உருவத்தின் மேனியில் எந்த விதமான ஆபரணங்களும் இல்லாததாலும், சுற்றிலும் கொடி, ஆயுதம் போன்ற எந்தவிதமான சின்னங்களும் காணப் படாததாலும் இவ்வுருவம் எந்த ஒரு தெய்வத்தையோ அல்லது அரசனையோ குறிக்கவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. மேலே உள்ள குடை, அமர்ந்துள்ள பீடம், பத்மாசனமும் சின்முத்திரையும் கொண்ட தியான நிலை, எளிய உடை ஆகியவற்றிலிருந்து இத்திருவுருவம் ஒரு முனிவரைக் குறிக்கிறது என்று நிச்சயமாகக் கூறலாம். மேலும் அவருடைய இடையிலுள்ள வேட்டி தட்டுச் சுற்றாக இருப்பதினாலும், தோளில் துண்டை மடித்துப் போட்டிருக்கும் பாங்கிலிருந்தும் இவர் ஒரு தமிழ் முனிவர் என்று அடையாளம் காணமுடிகிறது இவருக்கு முன்னால் விரித்த நிலையில் வைக்கப்பட்டுள்ள நூல் இவர் ஓர் ஆசானாகவோ பெரும்

புலவராகவோ இருக்க வேண்டும் என்று உணர்த்துகிறது. யார் இந்த முனிவர்? இவருடைய திருவுருவம் கும்பினியார் போட்ட தங்கக் காசில் எப்படி இடம் பெற்றது? காசில் எழுத்துகள் இல்லாத நிலையில் இக்கேள்விகளுக்கு பலதரப் பட்ட அகச்சான்றுகளையும் புறச் சான்றுகளையும் கொண்டு தான் விடை காணமுடியும்.

எளிய உடையுடன் தியான நிலையில் ஒரு குடையின் கீழ் அமர்ந்து முன்னே வைக்கப்பட்டுள்ள ஒரு நூலுடன் சித்திரிக்கப் பட்டுள்ள இத்திருவுருவம் திருவள்ளுவப் பெருமானுடையதாக இருக்கலாமோ என்று ஓர் எண்ணம் என் மனதில் பளிச்சிட்டது. இந்த யூகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள சென்னை ஆவணக் காப்பகத்தில் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டு வரும் கும்பினி அரசாணைகளையும் அக்கால நாணய சாலையின் அறிக்கை களையும் பார்வையிட்டதில் சில முக்கியமான தடயங்கள் கிடைத்துள்ளன. இவ்வாய்வுக்கு எல்லா வசதிகளையும் செய்து உதவிய ஆவணக் காப்பகத்தின் ஆணையர் திரு. எம். பரம சிவம் இ ஆ ப அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## காசின் காலம்

இக்காசின் பின்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஐந்து முனை நட்சத்திரச் சின்னத்திலிருந்து ஆங்கிலேயக் கிழக் கிந்தியக் கும்பினி அரசு சென்னையிலிருந்து 19ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வெளியிட்ட 'நட்சத்திரப் பகோடா' அல்லது 'வராகன்' என்று அழைக்கப்பட்ட பல தங்க நாணயங் களில் இதுவுமொன்று என்று தெரிகிறது. மேலும் இக்காசு இயந்திரத்தின் மூலம் மிகவும் நேர்த்தியாக அச்சடிக்கப் பட்டுள்ளது கும்பினி அரசு சென்னை ஜார்ஜ் கோட்டையில் முதன்முதலாக 1807ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயந்திர நாணய சாலையை நிறுவி தங்கம், வெள்ளி மற்றும் செப்புக்காசுகளை வெளியிடத் தொடங்கியது. 1817-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் தங்க வராகன்கள் அச்சடிப்பது நிறுத்தப்பட்டு விட்டது. ஆகையால் இக்காசு 1807-ம் ஆண்டு முதல் 1817-ம்

ஆண்டு வரையிலான பத்தாண்டு காலத்திற்குள் வெளியிடப் பட்டிருக்க வேண்டும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

## எல்லிஸ் துரையும் திருக்குறளும்

அக்கால கட்டத்தில் (1810-19ம் ஆண்டுகளில்) ஃபிரான்சிஸ் வைட் எல்லிஸ் (Francis Whyte Ellis) என்னும் ஆங்கிலேய அதிகாரி சென்னை மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றி வந்தார். 1796-ம் ஆண்டு ஆட்சிப் பணியில் சேர்ந்த அவர் சில ஆண்டுகளிலேயே தமிழ் முதலிய தென்னிந்திய மொழி களிலும் வடமொழியிலும் பெரும்புலமை பெற்றுவிட்டார். தமிழ் நூல்கள் அச்சேறியிராத அக்காலத்திலேயே அவர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து முறையாகத் தமிழைக் கற்றுத் தேர்ந்தார். தமிழ் முதலிய திராவிட மொழிகள் சம்ஸ்கிருதம் போன்ற இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்ற உண்மையை முதன்முதலாக (1818-ம் ஆண்டிலேயே) உலகுக்கு அறிவித்த பெருமை இவரையே சாரும்.

எல்லிஸ் துரைக்கு திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் அளப்பரிய பற்று இருந்தது. திருக்குறளிலிருந்து பல குறள் களைத் தேர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தெளி வான உரையுடன் ஓர் அரிய நூலை இவர் எழுதினார். இதுவே திருக்குறளின் முதல் ஆங்கில மொழி பெயர்ப்பாகும். துரதிருஷ்டவசமாக அந்நூல் முற்றுப்பெறுமுன்னரே 1819-ல் எல்லிஸ் துரை இராமநாதபுரத்தின் அருகே முகாமிட்டிருந்த போது தற்செயலாக விஷ உணவை அருந்தி அகால மரண மடைந்தார். அவர் இறந்த பின் வெளிவந்த அந்த நூலை மீண்டும் சிறந்த முறையில் ரா. பி சேதுபிள்ளை பதிப்பித் துள்ளார் (1955)[1]. இந்நூலில் எல்லிஸ் துரை முந்நூறுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் நூல்களிலிருந்து காட்டியுள்ள மேற் கோள்களிலிருந்து அவருடைய ஆழ்ந்த தமிழ்ப்புலமை வெளிப் படுகிறது. இன்று காணாமற் போய்விட்ட வளையாபதி போன்ற சங்க நூல்களிலிருந்தும் இவர் மேற்கோள்களைக் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

1. R. P. Sethu Pillai (ed.) Tirukkural : Ellis' Commentary University of Madras. 1955.

## கல்வெட்டில் திருக்குறள்

எல்லிஸ் துரை திருவள்ளுவர் மீதும் திருக்குறளின் மீதும் கொண்டிருந்த பற்றுக்கு எடுத்துக்காட்டாக இரு அரிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சென்னை நகரில் 1819-ல் கடும் குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. அப்போது சென்னைக் கலெக்டராக இருந்த எல்லிஸ் துரை பெருமுயற்சி செய்து நகரில் 27 இடங்களில் குடிநீர்க் கிணறுகளைத் தோண்ட ஏற்பாடுகள் செய்தார். அக்கிணறுகளில் ஒன்று இராயப் பேட்டை பெரியபாளையத்தம்மன் கோயிலில் இன்றும் உள்ளது. இக்கிணற்றின் கைப்பிடிச் சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஒரு கல்லில் எல்லிஸ் துரை 1818-ம் ஆண்டில் ஒரு நீண்ட கல்வெட்டை வெட்டி வைத்தார். (இக்கல்வெட்டு இப்பொழுது தமிழ்நாடு தொல்லியல் துறையின் அருங்காட்சியகத்தில் உள்ளது).[1] அதில்;

சயங்கொண்ட தொண்டிய சாணுறு நாடெனும்
ஆழியிலிழைத்த வழகுறு மாமணி
குணகடன் முதலாக குடகடலளவு
நெடுநிலந்தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீசனென்பவன் யானே
பண்டார காரிய பாரஞ்சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறடன்னிற் றிருவுளம் பற்றிய
"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"
என்பதின் பொருளை யென்னுளாய்ந்து ...

என்ற வரிகளில் ஓர் அழகிய குறளை மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார்.[2] மேலும் எல்லிஸ் துரை அக்காலத்தில்

1. இதை முதன்முதலாகக் கண்டெடுத்தது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு நடன. காசிநாதன் அவர்கள் ஆவார்.

2. ச. கிருஷ்ணமூர்த்தி, திருக்குறள் பழைய உரை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. சென்னை 1993. ஆராய்ச்சி முன்னுரை. பக். xxiii-xxvi.

சென்னப் பட்டணத்து பண்டாரகாரிய பாரம் சுமந்திருந்ததை யும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது., அக்காலத்தில் நாணய சாலை (Mint) பண்டாரத்தின் (Treasury) மேற்பார்வையில செயல்பட்டு வந்தது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மற்றொரு கல்வெட்டு திண்டுக்கல் நகரிலுள்ள எல்லிஸ் துரையின் கல்லறையின் மீது பொறிக்கப்பட்டுள்ளது. இதில் "எல்லீசன் என்னும் இயற்பெயருடையோன்,"

திருவள்ளுவப் பெயர்த் தெய்வஞ் செப்பி
யருள் குறணூ லுளறப்பாலினுக்குத்
தங்கு பல நூலு தாரண கடலைப் பெய்
திங்கி லீசுதனி லிணங்க மொழிபெயர்த்தோன்.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[1] இக்கல்வெட்டுகளிலிருந்து எல்லிஸ் துரையின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் அவருக்குத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் இருந்த மிகுந்த ஈடுபாடும் தெளிவாகத் தெரிகின்றது.

## முடிவுகள்

எனவே எல்லிஸ் துரை 1810-19ம் ஆண்டுகளில் சென்னைக் கலெக்டராகப் பணியாற்றி வந்தபோதே பண்டார காரியத்தை யும் செய்து வந்தார் என்றும், அதேசமயத்தில் திருக்குறளை முற்றிலும் ஓதி உணர்ந்து அதன் அருமை பெருமைகளை அறிந்து அதற்கு ஆங்கிலத்தில் ஓர் உரை எழுதினார் என்றும் மேற்குறிப்பிட்ட கல்வெட்டுச் சான்றுகள மூலம் தெரிய வருகின்றது. எல்லிஸ் துரை தமது அரசுப்பணியில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தாம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருக்குறளை இயற்றிய திருவள்ளுவப் பெருமானின் திருவுருவத்தைக் கும்பினி அரசின் பெரிய தங்க நாணயமான இரட்டை வராகனில் பதிப்பிக்க ஏற்பாடுகள் செய்தார் என்று நம்ப இடமிருக்கிறது.

---

1. ச. கிருஷ்ணமூர்த்தி, திருக்குறள் பழைய உரை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. சென்னை 1993. ஆராய்ச்சி முன்னுரை. பக். xxiii-xxvi

சென்னையிலுள்ள ஆவணக்காப்பகத்தில் நான் ஆய்வு செய்தபோது, 1800, 1816, 1820 ஆண்டுகளில் நாணய சாலையில் அச்சடிக்கப்பட்ட தங்கநாணயங்களின் மாதிரிகள் பெட்டிகளில் வைக்கப்பட்டு அவற்றுடன் சென்னை அரசு மூலமாகக் கல்கத்தாவிலிருந்த மத்திய அரசுக்கும் லண்டனில் செயல்பட்ட கும்பினி டைரக்டர்களின் ஆணையத்திற்கும் அனுப்பப்பட்ட குறிப்புகள் கிடைத்தன. ஆயினும் அக்கடிதங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பட்டியல்களின் நகல்களோ, காசுகளின் வரைபடங்களோ கிடைக்காததால் இவ்வாண்டுகளில் அச்சிட்ட இரட்டை வராகன்களில் இதுவும் ஒன்றா என்று கண்டுபிடிக்க முடியவில்லை; என்றாலும் இக்காசுகள் லண்டனிலும் கல்கத்தாவிலும் உள்ள அருங்காட்சியகங்களில் மட்டுமே கிடைப்பதால் அவை மேற்கூறியவாறே அந்த இடங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

அச்சிடப்பட்டும், இந்தத் தங்க நாணயம் புழக்கத்திற்காக ஏன் வெளியிடப்படவில்லை என்ற கேள்விக்கு இப்பொழுது விடை காண்பது கடினமே. ஒருக்கால் இக்காசின் மாதிரிகள் கல்கத்தாவில் இருந்த மத்திய அரசிற்கும், லண்டனில் இருந்த கும்பினி ஆணையத்திற்கும் போய்ச் சேருமுன்னர் இனிமேல் வராகன்களை அச்சடிப்பது இல்லை என்ற முடிவு எடுக்கப் பட்டிருக்கலாம் அல்லது திருவள்ளுவப் பெருமானின் அருமை பெருமைகளை உணராது, மத்திய அரசும் கும்பினி நிர்வாகமும் இக்காசை வெளியிடும் திட்டத்தை நிராகரித்திருக்கலாம். மேலும் ஆவணங்கள் கிடைத்தால்தான் இப்பிரச்சினைக்கு தெளிவான விடை கிடைக்கக்கூடும்.

அக்காலத்திய நாணய சாலை ஆவணங்கள் மிகவும் சிதிலமாகவும் இன்னும் சீர்படுத்தப்படாமலும் இருப்பதால் அவற்றை முற்றிலும் ஆய்வு செய்ய இயலவில்லை. எனினும் கிடைத்துள்ள எல்லாச் சான்றுகளையும் தொகுத்து ஒருங்கே நோக்கினால் இத்தங்க நாணயத்தில் திருக்குறளுக்கு உரை கண்ட எல்லிஸ் துரையின் செல்வாக்கால் திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. சென்னை ஆவணக் காப்பகத்தில்

மேலும் தேடினால் இம்முடிவுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

**திருவள்ளுவரின் திருவுருவ அமைப்பு :**

இக்காசில் காணப்படும் திருவுருவத்தையும் சென்னை மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலில் அண்மையில் (1984) அகழ்ந்தெடுக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சுமார் 14-15ம் நூற்றாண்டை சார்ந்ததாக கருதப்படும் இக்கற்சிலையைப்பற்றி தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வாளர் ச. கிருஷ்ணமூர்த்தி பின்வருமாறு கூறுகிறார்.[1]

"இச்சிலையின் உருவம் பீடத்தின் இரு கால்களையும் மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. தியான நிலையில் வலக்கை சின்முத்திரையுடன் அக்கமாலை ஏந்தியும் இடக்கை ஓலைச்சுவடி ஏந்தியும் இச்சிலை காணப்படுகிறது. இவ்வுருவத்தின் தலையை முடிந்த கொண்டையும், முகத்தில் நீண்ட தாடியும், உடலில் ஒடும் பட்டையான அங்கியும், இடையில் ஆடையும் அணி செய்கின்றன".

இன்று தமிழக அரசின் மூலம் பிரபலமாகியிருக்கும் திருவள்ளுவரின் திருவுருவப்படமும் ஏறத்தாழ இக்கற்சிலையின் அமைப்பை ஒத்துள்ளது எனலாம்.

திருவள்ளுவப் பெருமானின் திருவுருவம் பொறிக்கப் பட்டிருக்கும் நான்கு தங்க நாணயங்களில் இரண்டு லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் நமக்கு எட்டாக்கையில் உள்ளன. நம் நாட்டிலேயே கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகத்தில் உள்ள மற்ற இரு காசுகளில் ஒன்றையாவது நிரந்தரக் கடனாகப் பெற்று அக்காசைத் திருவள்ளுவப் பெருமான் அவதரித்த சென்னை மாநகரின் அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்றுக் கோருகின்றேன்.

---

1. ச. கிருஷ்ணமூர்த்தி, திருக்குறள் பழைய உரை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. சென்னை 1993. ஆராய்ச்சி முன்னுரை. பக். xxiii xxvi.

நன்றி திரு. ஐ. மகாதேவன், தமிழகத் தொல்லியல் சான்றுகள், தொகுதி I

## பிற்சேர்க்கை VIII

## அண்மைக்கால அகழாய்வுகளில் கிடைத்த காசுகள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, இராம நாதபுரம் மாவட்டம் அழகன்குளத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், படவேட்டிலும் மேற்கொண்ட அகழாய்வுகளில் சில காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அழகன்குளம் அகழாய்வில் சங்க காலப் பாண்டியர் காசு கள் இரண்டும், ரோமானியக் காசுகள் இரண்டும் மற்றும் மேற்பரப்பு களஆய்வில் ஒரு ரோமானியக் காசும் கிடைத்திருக் கின்றன.

பாண்டியர் செப்புக் காசுகளுள் ஒன்று பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் உள்ளன,

பெரிய காசில் முன் பக்கம் யானை, வேலியினுள் மரம் எண்மங்கலச் சின்னங்களான சக்கரம், கும்பம், சாமரம் மற்றும் சிலவும் தெரிகின்றன. பின்பக்கம் பாண்டியர் காலச் சின்னமான மீன் உருவம் கோட்டுருவமாகக் காணப்படுகிறது.

இக்காசு அகழாய்வுக் குழி AGM 3A-இல் 2·00 மீட்டர் ஆழத்தில் முதல் காலக் கட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நான்காம் பாள நிலையில் கிடைத்துள்ளது, இப்பாள நிலை யின் காலம் கார்பன் 14 செய்முறை என்னும் காலக்கணிப்பு முறையில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

மற்றொரு செப்புக் காசு AGM 5 என்ற குழியில் 1.15 மீட்டர் ஆழத்தில் மூன்றாம் பாள நிலையில் கிடைத்திருக் கிறது. இந்தப் பாள நிலையும் முதல் காலக் கட்டத்தைச் சேர்ந்தது என்று கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலால் இக்காசும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது.

இக்காசின் முன்பக்கத்தில் காளை வலப்பக்கம் திரும்பி நிற்கும் நிலையிலும், அதன் வாய்ப்பகுதிக்குக் கீழ், தொட்டி

(Turf like object) போன்ற உருவமும் காணப்பெறுகிறது. பின்பக்கத்தில் மீன் உருவம்.

அகழாய்வில் கிடைத்துள்ள ரோமானியச் செப்புக் காசுகள் இரண்டனுள் ஒன்று இரண்டாம் வேலண்டைன் (கி.பி. 383-395) காலத்தையும்; மற்றொன்று ஆர்கேடியசு (கி.பி. 395-408) காலத்தையும் சார்ந்தவை. களஆய்வில் டியோடியசு காலத்தைச் (கி.பி. 383-393) சேர்ந்த மற்றொரு காசு இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், படவேட்டி லிருந்து விசயநகர வேந்தர்களான புக்கராயர் (கி.பி. 1356-77) மற்றும் தேவராயர் (கி.பி. 1422-66) காலத்தைச் சார்ந்த செப்புக் காசுகளும், டெல்லி சுல்தானின் பிரதிநிதியான ஜலாலுடீன் அல்லது அல்லாவுதீன் காலத்தியதான செப்புக் காசு ஒன்றும் கிடைத்துள்ளன.

புக்கராயர் காசுகளின் முன்பக்கம் 'விஜயபுக்கராயர்' என்று தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. பின் பக்கம் காளை இடப்பக்கம் திரும்பி நிற்கும் நிலை, காளைக்கு முன்பாக கட்டாரி, மேற்பகுதியில் பிறைச்சந்திரன் ஆகியவை காணப்படுகின்றன.

தேவராயர் காசில் முன்பக்கம் 'ஸ்ரீதேவராயர்' என்று கன்னட எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. பின்பக்கம் புக்கராயர் காசில் உள்ளவாறே.

ஜலாலுடீன் அல்லது அல்லாவுதீன் காசில் முன்பக்கமும் பின்பக்கமும் அராபிய எழுத்தில் உருது மொழியில் வாசகங்கள் காணப்படுகின்றன.[1]

---

1. அழகன்குளத்தில் முதற்கட்ட அகழாய்வுக்கு வழிகாட்டி யாக விளங்கிய டாக்டர். இரா. நாகசாமி அவர்களுக்கும் இவ்வகழாய்வுகளில் பங்கு பெற்ற இத்துறை அலுவலர் கள் திருவாளர்கள் அ. அப்துல் மஜீத், து. துளசிராமன், தே. கோபாலன், ந. கணேசன், எஸ். சம்பத், கலை வாணன், எஸ். செல்வராஜ், திருமதி. சீ. வசந்தி ஆகியோருக்கும் எம் நன்றி.

## ANNEXURE - IX

# A NOTE ON SĀṆĀR KĀSU[1]

Nellai Ṅedumaran

Sānār were a community of warriors in ancient Tamil country. The Periyapurānam of Sēkkilār mentions that the members of the Sāṇār community functioned as teachers of martial arts to royal members.[1] They have also issued coins popularly known as Sāṇār kāsu. It was probably current during the 16th and 17th centuries A.D. Vengaḷarāsan, a fabled hero of the 16th century who ruled Thirunelveli and fought with Veṯṯum-perumāḻ was described as a gifted person who minted Sāṇ kāsu (Sāṇ kāsaḍitta yōgan).[2] In another work of the 18th century, Paṇaviḍutūtu,[3] the author, Palapaṯṯaḍaich Chokkanātha Pulavar refers to Sāṇār kāsu. The Mōdi manuscript in the Saraswathi Mahal Library, Thanjavur also mentions that Sāṇār kāsu was current during 1851 A.D. and one such kāsu was equivalent to hundred and thirty two phuli varāhans.[4]

J.R. Rolter in 1836 A. D. suggested that Sāṇār kāsu was a gold coin having the impression of a toddy drawer.[5] Winslow[6] also in his dictionary has correctly explained that Sāṇār kāsu or Sānrōr kāsu as a "name of the Porkāsu (gold coin) said to have been invented or coined by one of the Sanror caste". He has understood the terms Sāṇār and Sāṇrōr as synonymous.

---

1. Courtesy, Studies in South Indian Coins, Vol. IV, pub. 1994.

Recently some coins with the legend sāṇār inscribed on them were collected by the author from the districts of Thanjavur, Madurai and etc. The description of one such coin is given below :

| | | |
|---|---|---|
| Metal | : | Copper, |
| Shape | : | Round, |
| Diameter | : | 10 mm. |
| Obv. | : | Floral design, not clear |
| Rev. | : | Legend in the 17th - 18th century script, in two lines (1) sā (2) ṇaṛ. |

However in the last century these coins were considered as a *venetian* sequin prevalent in the Malabar coast having the figure of a judge standing in front of a Cross. The native people imagined this figure as a toddy drawer (sāṇār) standing in front of a palm tree. It was also suggested as to be *venetian* and shortened to *shanō*. However, according to the available evidence it appears that sāṇār kāsu was typical variety of a native coin which was never mentioned as *venitiano* or *Shānō*.

---

1. Periyapuranam, Enathinathar puranam, "manna-varukku venri vativalpatai payirrum Thanmai tholil vincai"
2. Vengalarasan Katai, p. 47
3. Panavidututu, 1714
4. Saraswathi Mahal Modi Tamilakkam, bundle no. 8, no. 33 quoted in K.M. Venkataramaia, Administration and Social Life under Thanjai Maharattas (Tamil) Tamil University, Thanjavur, 1984, p. 156
5. Tamil English Dictionary, 1836, p. 68
6. Tamil English Dictionary, 1862, p. 277



சங்ககாலச் சேரர் காசு, கி.மு. 5-4-ஆம் நூற்றாண்டு.

முன்பக்கம் : யானை மற்றும் எண் மங்கலப் பொருட்கள். பின்பக்கம் : வில், அம்பு, அங்குசம்

நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.





சங்ககாலச் சேரர் காசு, மாக்கோதை காலம், கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : நடுவில் மன்னரின் தலைப்பகுதி உருவம், மேற்பகுதியில் 'மாக்கோதை' என்று பண்டைத் தமிழ் எழுத்தில், பின்பக்கம் : ஒன்றுமில்லை.
இரண்டு காசுகளின் முன்பக்கம் மட்டும் இங்கு காட்டப்பட்டுள்ளன.
நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.



சங்ககாலச் சேரர் காசு, கொல்லிப்பொறையன் காலம், கி.மு. 2-1 - ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : 'கொல் ஈப்புறை' என்று பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது.
தோரணவாயிலுக்குள் மன்னர் நிற்கும் நிலையில் உருவம்.
பின்பக்கம் : வில், அம்பு, ஆறு மற்றும் ஆற்றில் நீந்தும் மீன்கள்



சங்ககாலச் சேரர் காசு, கொல்லிரும்பொறையன் காலம், கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டு
முன்பக்கம் : அரசன் உருவம் நின்ற நிலை, இடப்பக்கம் வேலியினுள் மரம்,
'கொல்ஈரும்புறை' என்று பண்டைத் தமிழ் எழுத்தில்,
பின்பக்கம் : வில் மற்றும் சில உருவங்கள்.
நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.



சங்க காலச் சோழர் காசு, கி.மு. 5-4-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம்: யானை உருவம், பின்பக்கம்: புலி தன்
வலக்காலைத் தூக்கிய நிலையிலுள்ள உருவம்





*சங்க காலப் பாண்டியர் காசு. கி.மு. 4–3ஆம் நூற்றாண்டு*

**முன் பக்கம் : யானை, மேற்பகுதியில் கும்பம், சக்கரம் ஆகிய எண்மங்கலப் பொருட்களின் உருவங்கள், யானையின் முன்பாக அங்குசம். பின்பக்கம் : 'கயல்' கோட்டுருவம் (தேய்ந்த நிலை) அழகன்குளம் அகழாய்வில் கிடைக்கப்பெற்றது.**



சங்க காலப் பாண்டியர் காசு, கி.மு. 4-ஆம் நூற்றாண்டு.
முன்பக்கம் : யானை, பின்பக்கம். கயல்.



சங்க காலப் பாண்டியர் காசு. கி.மு. 4–3 ஆம் நூற்றாண்டு

முன்பக்கம் : காளை, காளையின் வாய்ப் பகுதிக்குக் கீழ் தொட்டி போன்ற உருவம்.

பின்பக்கம் : கயல். அழகன்குளம் அகழாய்வில் கிடைத்தது.



ரோமானியர் காசு, வேலண்டைன் காலம் கி.பி. 4 – 5 ஆம் நூற்றாண்டு,
அழகன்குளம் அகழாய்வில் கிடைத்தது.
முன்பக்கம் : மன்னன் தலை உருவம்,
பின்பக்கம் : பெண் தெய்வம்.



ரோமானியர் காசு. ஆர்கேடியசு காலம், கி.பி. 5-ஆம் நூற்றாண்டு
முன்பக்கம் : மன்னரது தலை உருவம், பின்பக்கம் : பெண் தெய்வம் நிற்கும் நிலை.



சாதவாகனர் காசு, வசிட்டி புத்ர சதகணியின் மகன் ஸ்ரீ சதகணி காலம்,
கி.பி. 2-ஆம் நூற்றாண்டு, முன்பக்கம் : மன்னனின் தலை உருவம், சுற்றிலும்
''ராஞோ வசிஷ்டிபுதஸ ஸிரி ஸாதகணிஸ'' என்று பிராமி எழுத்தில்,
பின்பக்கம் : ''அரசண்கு வசிட்டி மகண்கு திருசதகணிஸ'' என்று பண்டைத் தமிழ் எழுத்தில்,
நடுவில் உஜ்ஜைன் உருவம், மலை, பாம்பு உருவங்கள்.



முற்காலப் பல்லவர் காசு, கி.பி. 5-6-ஆம் நூற்றாண்டு, உலோகம் : ஈயம்,
முன்பக்கம் : காளை, பின்பக்கம் : குடம் மற்றும் மரம்.





பல்லவர் காசு, மகேந்திரவர்மன் காலம், கி.பி. 6-7 - ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : காளை, மேற்பகுதியில் 'வபு' என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.
பின்பக்கம் : சங்கு.

 

பல்லவர் காசு, நந்திவர்மன் காலம், கி.பி 8 - ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : காளை அதற்கு மேல் பகுதியில் 'நந்தி' என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது.
பின்பக்கம் : பாத்திரம், சுற்றிலும் பூவிதழ்களால் ஒப்பனை.
நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.



பல்லவர் காசு, கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : இடப்பக்கம் திரும்பி நிற்கும் காளை, மேற்பகுதியில் பிறை, திருமறு.
பின்பக்கம் : இருகொடி மரங்களுடன் கூடிய கப்பல் கடலில் மிதத்தல்.



சோழர் காசு, முதலாம் பராந்தகன் காலம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : 'மதிராந்தகந்' என்று தமிழ் கிரந்த எழுத்தில், நடுவில் புலி, கயல்,
பின்பக்கம் : முன்பக்கம் உள்ளது போன்றே.



சோழர் காசு, உத்தமசோழன் காலம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு, முன்பக்கம் : நடுவில் புலி, கயல், சுற்றிலும் 'உத்தம சோளந்' என்று தமிழ் கிரந்த எழுத்தில், பின்பக்கம் : முன் பக்கத்தில் உள்ளது போன்றே





சோழர் காசு, முதலாம் இராசராசன் காலம், கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை,
பின்பக்கம் : 'உரக' என்று தேவநாகிரியில், மேல் பகுதியில் படுத்த நிலையில் சங்கு.



சோழர் காசு. முதலாம் இராசராசன் காலம். கி.பி. 10–11–ஆம் நூற்றாண்டு.
**முன் பக்கம் :** வில், புலி, இரு கயல், வெண்கொற்றக் குடை,
**பின்பக்கம் :** ரவிகுலமாணிக்கம்' என்று கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது.
**நன்றி :** ஆறுமுகசீதாராமனின் சேகரிப்பு.



சோழர் காசு, முதலாம் இராசராசன் காலம், கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு. இருபக்கங்களிலும் நடுவில் புலி, இரு கயல், வரம்பையொட்டி 'மலநாடு கொண்ட சோளந்' என்று தமிழ் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. உலோகம் - தங்கம்.





சோழர் காசு, முதலாம் இராசேந்திர சோழன் காலம். கி.பி. 11- ஆம் நூற்றாண்டு, முன்பக்கம் : வில், புலி, இருகயல், பின்பக்கம் : 'உத்தமசோள' என்று தேவநாகரி எழுத்தில். எழுதப்பட்டுள்ளது.



பாண்டியர் காசு, சுந்தரபாண்டியன் காலம், கி. பி. 11-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : இடப்பக்கம் திரும்பிய பன்றி, சந்திரன், சூரியன் உருவங்கள்,
பின்பக்கம் : 'சுந்தரபாண்டிய' என்று தமிழில், கீழ்ப்பகுதியில் இருகயல், நடுவில் சாட்டை





பாண்டியர் காசு, வீரபாண்டியன் காலம், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை, பின்பக்கம் : வீரபாண்டியன்' என்று தமிழில், கீழ்ப்பகுதியில் இரு கயல், நடுவில் சாட்டை.


பின்பக்கம்


முன்பக்கம்

**பாண்டியர்** காசு, மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.
**முன்பக்கம்** : நிற்கும் மனித உருவம். பின்பக்கம் : 'சோணாடு கொண்டான்' என்று தமிழில்



பாண்டியர் காசு; ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : நிற்கும் மனித உருவம்,
பின்பக்கம் : நடுவில் இருகயல், சுற்றிலும் 'எல்லாந்தலையானான்' என்று தமிழில்.





பாண்டியர் காசு; ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலம், கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : குறுக்கும் நெடுக்குமாக இரு கயல்,
பின்பக்கம் ; 'சச்சி வழங்கும் பெருமாள்' என்று தமிழில் எழுதப் பெற்றுள்ளது.



பாண்டியர் காசு. குலசேகர பாண்டியன் காலம், கி.பி. 12-14-ஆம் நூற்றாண்டு
முன்பக்கம் : மனித உருவம் நின்ற நிலை, பின்பக்கம் : 'குலசேகரன்' என்று தமிழில்.
கீழ்ப்பகுதியில் இரு கயல், நடுவில் சாட்டை. நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு



கண்டகோபாலன் வாசிபடா புதுமாடை, விஜயகண்ட கோபாலன் காலம், கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
முன்பக்கம் : 'கண்ட' என்று தமிழில், நடுவில் குழலூதும் கோபாலனின் தலைகீழ் உருவம்,
இரு பக்கங்களிலும் 'ஸ்ரீ' என்னும் கிரந்த எழுத்து, கீழ்ப்பகுதியில் பிறை, குடை, சூரியன் தலைகீழாக.



இசுலாமியர் காசு, ஜலாலுடீன் அல்லது அல்லாவுதீன் காலம், கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. முன்பக்கம் : 'சுல்தானுக்குப் பணிவது, அல்லாவுக்குப் பணிவது' போன்றதாகும் என்றும்; பின்பக்கம் : 'தலைவரும் வழிகாட்டியுமான ஜலாலுடீன் முத்திரை' என்றும் அராபிய எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.



மாவலி வாணாதிராயர் காசு, சுந்தரத்தோளுடைய மாவலி வாணாதிராயன் காலம், கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டு, முன்பக்கம் : கருட மனித உருவம் வலப்பக்கம் திரும்பிய நிலையில் கால்களை மடித்துப் பறக்கும் நிலை, இரு பக்கங்களிலும் சங்கு, சக்கரம். பின்பக்கம் . 'சமரகோலாகலன்' என்று தமிழில்.





மாவலி வாணாதிராயர் காசு, மாவலிவாணாதிராயன் காலம், கி.பி. 14-15 – ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : வலப்பக்கம் திரும்பிய நிலையில் கருட மனித உருவம்.
பின்பக்கம் : 'புவனேக வீரன்' என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது.



பின்பக்கம்



முன்பக்கம்

விஜயநகரவேந்தர் காசு, புக்கராயர் காலம், கி.பி. 14-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : இடப்பக்கம் திரும்பி நிற்கும் காளை, கட்டாரி, சூரியன், சந்திரன் உருவங்கள்.
பின்பக்கம் ; 'விஜயபுக்கராயர்' என்று தேவநாகரி எழுத்தில்,



விசயநகர வேந்தர் காசு, கி.பி. 14-15 - ஆம் நூற்றாண்டு
முன்பக்கம : காளை, பின்பக்கம் : 'ஸ்ரீதேவராய' என்று கன்னட எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.
(படவேடு அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்டது)



தென்காசிப் பாண்டியர் காசு, ஆகவராமன் காலம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டு.
முன்பக்கம் : நடுவில் மூவிலைச் சூலமும் இரு பக்கங்களிலும் 'ஆகவராமன்' என்று
தமிழிலும் எழுதப் பெற்றுள்ளது. பின்பக்கம் : கண்ட பேருண்டப் பறவை உருவம்.
நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.





செஞ்சி நாயக்கர் காசு, கிருஷ்ணப்ப நாயக்கர் காலம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : 'கிட்டிணப்ப நாயக்கன்' என்று தமிழில்,
பின்பக்கம் : சில புள்ளிகளும் கோடுகளும். நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.



தஞ்சை நாயக்கர் காசு, கி.பி. 17 - ஆம் நூற்றாண்டு, முன்பக்கம் : 'விசையரகுனாதன்' என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. பின்பக்கம் : இலக்குமியின் திருவுருவம் நின்ற நிலை.

நன்றி ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.





தஞ்சை நாயக்கர் காசு, கி.பி. 17-18 - ஆம் நூற்றாண்டு, முன்பக்கம்: 'கோவிந்தய்யர்' என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. பின்பக்கம்: தோரண வாயிலுக்குள் மன்னர் உருவம். நன்றி: ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.





சேதுபதி காசு, சசிவர்ணத்தேவர் காலம், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு,
முன்பக்கம் : ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் உருவம், இலிங்கத்தின் மீது பூமாலை,
பின்பக்கம்: 'சசிவற்னன்' என்று தமிழில், சுற்றிலும் புள்ளிகள்.
நன்றி : ஆறுமுக சீதாராமனின் சேகரிப்பு.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| உ.வே.சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும் | 35.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| மிருச்சகடிகம் | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி | 25.00 |
| வ.உசி. வளர்த்த தமிழ் | 20.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை-ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம்-நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 35.00 |
| தமிழர் உணவு | 70.00 |